
கல்கி
KALKI
.2.1963
30 காசு

1863 1963

இந்திய பாங்க் தொழிலின் 100 ஆண்டுகள்

நேஷனல்

அண்டு

கிரிண்ட்லேஸ்

உங்கள் பணியில்



நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸின் விரிவான பாங்கிங் தொழில் இப்பொழுது இந்தியாவில் மட்டும் 40 கிளை ஸ்தாபனங்கள் மூலம் பணியாற்றுகிறது ஒவ்வொரு கிளை ஸ்தாபனமும் எல்லாவிதக் கணக்குகளையும் — அவை சிறியதாயிருந்தாலும் அல்லது பெரியதாயிருந்தாலும் — கவனிக்கும் நிலையிலிருக்கிறது.

உங்கள் பகுதியிலுள்ள கிளை அலுவலகத்திற்குச் சென்று பாருங்கள் அங்கு திறமையும், மரியாதையான கவனிப்பும் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன உங்களுடைய பாங்கிங் பிரச்சினை எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் ஆலோசனையைப் பெறுங்கள்.

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் லிட்.

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது
(அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
தலைமை ஆபீஸ் : 26, பிஷப்ஸ் கேட், லண்டன், இ.ஸி. 2

கிளைகள்: சென்னை: 3, நார்த் பீச் ரோடு, 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு. (வாயிட்ஸ் கிளை) 6, அரமனைக்காரத் தெரு 158, மவுண்ட் ரோடு. தூத்துக்குடி: 44, பீச் ரோடு ஹைதராபாத்: அபித் ரோட்

NGB/50/D TAM


சுபகிருது, தை மீ 21உ.

கல்கி

பிப்ரவரி, 3உ 1963

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 27

காங்கிரஸின் யுத்த கீதம்

சீனாக்காரன் நம்மை நேஃபா முனையில் தோல்வியுறச் செய்ததில் கூட அவமானம் இருக்கவில்லை. எதிரியின் அதிகமான ராணுவ பலத்துக்கு நம்முடைய சேனை அவ்விடத்தில் பலம் குறைந்திருந்ததால் வீர தீரத்துடன் போராடியும் தோற்றுப் போனதில் சிறுமை இல்லை. ஆனால் இன்றோ வெற்றி முழக்கத்துடன் சீனா அமர்ந்திருக்க அதனுடன் சமாதானப் பேச்சு நடத்த நேரு சர்க்கார் இணங்குவது அவமானம்.

முதலில் மூர்க்கப்போர் தொடங்கியபோதும், பிறகு போர் நிறுத்தம் செய்தபோதும் எப்படிச் சீனாக்காரன் முதல்படி எடுத்துவைத்த பின்பே இந்திய அரசாங்கம் தொடர்ந்ததோ அதே போன்ற அவல நிலையில் இப்போதும் சீனா என்ன செய்யப் போகிறதோ அதைக் கொண்டே நம் காரியங்களை உருவாக்கிக் கொள்ளும் நிலையில்தான் இந்தியா இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் சிரிமாவோ அம்மையாரின் சமாதானத் திட்டத்துக்கு 'ததாஸ்து' கூறி எதிரியுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என்று அரசாங்கம் சொல்லுகிறது. கொழும்பு யோசனையைச் சீனா ஒப்புக்கொள்ளவில்லை என்பது தெரிந்த பின்னும் ஏன் நம்முடைய சர்க்கார் அந்த யோசனையைப் பற்றி இன்னும் பேசி வருகிறார்கள் என்பது விளங்கவில்லை.

"சமாதானப் பேச்சு பேசினாலும் யுத்த முஸ்தீபுகளைத் தளர்த்த மாட்டோம்; தேசம் விழிப்புடனேயே இருக்க வேண்டும்" என்று சிறிய மந்திரிகளும், பெரிய மந்திரியும் சொல்கிறார்கள். நம்முடைய பலக் குறைவை இட்டு நிரப்பிப் பூர்த்தி செய்த மேல் நாட்டு வல்லரசுகள் நேருஜியின் சமாதானப் பல்லவியைப் பார்த்த பின்னும் நாம் யுத்தம் செய்வதில் தீவிரமாக இருக்கிறோம் என்று எண்ணுவார்களா? மேல்நாடுகளின் பகை நாடான சீனாவை விரட்டியடிப்பதில் இந்திய சர்க்காருக்குள்ள ஊக்கம் குன்றி, சமாதானம் என்ற பெயரில் விட்டுக் கொடுக்கும் தளர்ச்சி மனப்பான்மை உண்டாகியிருப்பதைப் புரிந்து கொண்ட பின்னும் முன்போல் அவர்கள் ராணுவ உதவி அளிப்பார்களா? நிரந்தர அபாயமான சீன ஆக்கிரமிப்பை எதிர்க்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவில்லை. இன்னும் மேல் நாடுகளின் உதவியை உறுதிப்படுத்திக் கொள்ளத் தயங்குகிறார் பிரதமர். நம்முடைய 'நடு நிலைமை'க் கொள்கை ஒரு ஹாஸ்யப் புதிராகியிருக்கிறது.

பாரத நாட்டின் கௌரவத்தைப் பற்றி அக்கறையில்லாத 'நடு நிலைமை' நாடுகளின் வார்த்தையைக் கேட்டுப் பிரதமர் சீனாவை மீண்டும் நண்பனாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணுவதாகவே நாம் அஞ்சுகிறோம். வீராவேச வார்த்தைத் திரைக்குப் பின் நேருஜியின் உள்ளத்தில் இந்த எண்ணம் இருப்பதாகத் தோன்றுகிறது. அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல், யுத்தம் என்ற குதிரையில் ஒரு காலும், சமாதானம் என்ற குதிரையில் இன்னொரு காலுமாகத் தாம் சவாரி செய்வதுபோல் தோன்ற விரும்புகிறார்.

அவசரச் சட்டம் கால வரம்பில்லாமல் மக்கள் உரிமைகளைப் பறித்துக் கொண்டிருக்கிறது. போர் செய்வதில் ஊக்கம் காட்டாவிடினும், போரினால் விளைந்த அதிகார பலத்தை மட்டும் இழக்காமல் பூரணமாகச் செலுத்த எண்ணுகிறது காங்கிரஸ்.

இந்த நிலையிலும் கொழும்பு யோசனையை நிராகரிக்கும்படி 59 பார்லிமெண்டு அங்கத்தினர்கள் சுதந்திரமாக வாக்களித்ததைப் பாராட்டுகிறோம்.

என்ன சேதி?

ஜெயப்பிரகாச நாராயண்

ஜெயப்பிரகாச நாராயண் அவர்களும் ராஜாஜி சொல்வது போலவே தற்போது யுத்தம் இல்லாதபடியால் அவசரகாலச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று பேசி யிருக்கிறார். சீனாவுடன் சமாதானப் பேச்சு நடத்த முயன்று கொண்டிருக்கும் சர்க்கார், அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது சற்றும் பொருந்தாது. மக்களின் ஜீவாதார உரிமைகளைப் பறித்து, சர்க்காரின் தவறுகளைக் கண்டிக்க விடாமல் மக்களைப் பீதியில் ஆழ்த்துவதே, இந்த அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதனால் விளையும் பயனாகும்.

தக்க சமயத்தில் ஜெயப்பிரகாச நாராயண் அவர்கள் எச்சரிக்கை செய்ததை வரவேற்கிறோம்.

சாயம் வெளுத்தது!


டில்லி மக்கள் சபையில் கொழும்புத் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் கேலிக்கிடமான ஒரு விஷயத்தைச் சுதந்திரக் கட்சித் தலைவர் திரு என்.ஜி. ரங்கா அம்பலப்படுத்தினார்.


சீனத் தலைநகரிலிருந்து வந்த இலங்கைப் பிரதமர் முதலியவர்களுடன் டில்லி சர்க்கார் மூன்று நாட்கள் விவாதம் நடத்தி யிருக்கிறார்கள். கொழும்புத் திட்டத்தின் அடிப்படையில் வட எல்லை நிர்ணயிப்பதைப் பற்றிப் பேசி யிருக்கிறார்கள். சாதாரணமாக நாட்டு எல்லை விஷயங்களைப் பற்றிப் பேசும் போது எல்லையைக் காட்டும் தேசப் படங்களை வைத்துக் கொண்டு அதன் உதவியுடன் பேசுவது வழக்கம்; அப்போதுதான் உண்மையான நிலைமை பிடிபடும். திரு என். ஜி. ரங்கா, மக்கள் சபையில் பிரதமரைக் கேட்ட கேள்விகளிலிருந்து எல்லைப்புறப் படம் கூட இல்லாமல் பேசி யிருக்கிறார்கள் என்று தெரிய வந்திருக்கிறது!

ஓர் உபகாரம்

சென்னை ராயபுரம் அனாதைச் சிறுவர் பள்ளிக்கூட ஆண்டு விழாவில், பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர், தங்கள் உணவில் முட்டையையும் இறைச்சியையும் சென்ற நவம்பரிலிருந்து தியாகம் செய்து பாதுகாப்பு நிதிக்காகச் சேமித்த நானூறு ரூபாயைத் தொழில் மந்திரி திரு வேங்கடராமன் அவர்களிடம் சமர்ப்பித்தனர்.

இதைப் பார்த்த மந்திரி வேங்கடராமன், ''தேசியப் பாதுகாப்பு நிதிக்குச் செல்வந்தர்களிடமிருந்து ஏராளமாகப் பணம் வருகிறது; ஏழைகளிடமிருந்து





அணையில் உடைப்பு

திரட்ட வேண்டிய அவசியம் இல்லை'' என்று கூறினார். அதோடு அப்பள்ளி நிர்வாக அதிகாரிகளையும் கூப்பிட்டு, 'இந்த ஏழை அனாதைக் குழந்தைகளிடமிருந்து இனி இம்மாதிரி நிதி வசூல் செய்யாதீர்கள்' என்று உத்தரவிட்டுச் சென்றிருக்கிறார்.

இவ்வுத்தரவைச் சென்னை கல்வி இலாக்கா டைரக்டருக்கும் அனுப்பி வைத்தால் ராஜ்யத்திலுள்ள பல்லாயிரக் கணக்கான ஏழைப் பெற்றோர்களும் சிறுவர்களும் சிறுமிகளும் ஆசிரியர்களும் மிகுந்த நன்றி செலுத்துவார்கள்.

ஆந்திர முதன் மந்திரி திரு சஞ்சீவி ரெட்டி செல்வந்தர்கள் போதிய அளவு பாதுகாப்பு நிதிக்கு உதவவில்லை என்று கூறியது எவ்வளவு தூரம் உண்மை என்பதை மந்திரி திரு வேங்கடராமனின் உரை விளக்கி விட்டது.

டாங்கே பட்டபாடு

சமீபத்தில் ருஷ்யாவுக்கும் மேனாட்டில் உள்ள கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் போய் விட்டு வந்தவர் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் டாங்கே. அவர் கல்கத்தாவில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் பேச எழுந்தார். அவரை, ''மேற்கத்திய வல்லரசுகளின் அடிவருடி'', ''துரோகி'' என்றெல்லாம் கூறி அவரைப் பேச விடாமல் அடித்து விட்டனர். அவரும் பேசாமல் மேடையை விட்டு இறங்கிப் போய் விட்டார்.

இவ்வளவுக்கும் டாங்கே புரிந்த மகத்தான பாவம், அவர் உண்மையான தேசபக்தராக இருந்து, சீனா இந்தியாவின் மீது படையெடுத்தது தவறு என்று சொல்லி வருவதுதான்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் வங்கக் கிளை சீனாவுக்குச் சாதக மனப்பான்மை கொண்டது என்பது பிரசித்தி. கடந்த சில நாட்களில் இக்கிளையின் அலுவல்கள் சற்றே மங்கி இருந்தாலும் அதனுடைய உண்மை உருவம் மாறவுமில்லை, மறையவும் இல்லை.

ஸ்ரீ டாங்கே பட்டபாட்டைக் கேட்ட போது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் எத்தகைய தேசத் துரோகச் செயலுக்கும் துணியக் கூடியவர்கள்; அவர்களை நம்புவதைப் போன்ற ஆபத்து வேறு இல்லை என்பது மிகத் தெளிவாகிறதல்லவா ?

போகிற போக்கில்....

சிட்டுக் குருவி

தங்கக் கட்டுப்பாட்டு உத்தரவுக்குத் திரு மொரார்ஜி தேசாய் இரு காரணங்களைக் கூறுகிறார். கள்ளத் தங்கம் வருவது தடைப்படுவதும், தங்கத்தின் மீது உள்ள மோகம் குறைவதும்தான் நோக்கம் என்கிறார். இவை சரிதானா?

உள் நாட்டில் தங்கம் விலை ஏறி விற்கிறது. இதற்கு ''மோகம்'' காரணம் என்பதைவிட 'சர்வ வியாபி'யாக இருக்கும் பணவீக்கம் காரணமாக இராதா? உப்புப் புளி மிளகாயிலிருந்து சகல பொருள்களும் விலை ஏறி விற்கும் போது தங்கம் மட்டும் எப்படி விலை ஏறாது இருக்க முடியும்? இதற்கு மக்களின் 'மோகம்'தான் காரணமெனக் கூறுவது எப்படிப் பொருந்தும்? வீசை ஐந்து அணா என்று ஒரு காலத்தில் விற்ற கத்திரிக்காய் இன்று ஒரு ரூபாய் என்று விற்கிறதே, இதற்குக் காரணம் கத்திரிக்காய் 'மோகம்' என்று கூறுவதா?

ஃ ஃ ஃ

தங்கத்தை உபயோகிப்போர் இரு காரணங்களுக்காக உபயோகிக்கிறார்கள். ஒன்று அலங்கார படாடோப நோக்கத்துக்காக; மற்றொன்று சேமிப்புக்காக. இந்தியாவைப் பொறுத்தவரை முன் காரணத்தை மக்கள் ஏற்பது கிடையாது. பிண்டத்துக்கே தவிக்கும்போது தங்கத்துக்காக யாரும் அலைய மாட்டார்கள். எனவே, இங்கு சேமிப்பாகத்தான் தங்கம் புழங்கப்பட்டு வருகிறது. இது அனாதிகாலந் தொட்டு இருந்து வரும் வளமுறை.

கிராமப்புறங்களில் இதை எளிதில் காணலாம். ஏழை விவசாயி திடீரென்று மாடு கன்று வாங்க வேண்டுமென்றால் — அதே போல வேறு காரியங்களைச் செய்ய வேண்டும் என்றால்—ரொக்கப் பணத்துக்காக வீட்டில் உள்ள தங்கத்தைத்தான் எடுப்பான். அவன் வீட்டிலிருந்து வெளியேறும் தங்கம், அறுவடை முடிந்த பிறகு திரும்பி வரும். கிராமப்பொருளாதாரமே இந்த அமைப்பில்தான் இயங்குகிறது. திரு மொரார்ஜி தேசாய் கூறும் 'மோகம்' வேறு நாடுகளுக்குப் பொருந்துமே தவிர இந்த நாட்டுக்குத் துளிக்கூடப் பொருந்தாது.

ஃ ஃ ஃ

பணத்தின் மதிப்பு தேய்பிறையில் இருந்து வரும் காலம் இது. இதற்கு ஐந்தாண்டுத் திட்டப் பொருளாதாரம் தான் காரணம். ஆகவே 'ஸ்திரத் தன்மை' ஓரளவாவது உள்ள தங்கத்தை மக்கள் நாடுகிறார்கள். இந்த நாட்டத்தால் விலை அப்படி ஒன்றும் கூடிவிடவில்லை. ரூபாய்க்கு எட்டு படி விற்ற அரிசி இன்று ரூபாய்க்கு ஒரு படி என்று விற்கிற கணக்கோடு 1947ல் 74.50 ரூபாய்க்கு விற்ற தங்கம் இன்று கூடுதலாக விற்கும் கணக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும். விலை கூடாத பொருள் இந்த நாட்டில் ஏதாவது இருக்கிறதா? கிடையாது! இதற்குக் காரணம் கரன்ஸி நோட்டின் மகாத்மியமே. திரு மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு இந்தச் சுலபமான கணக்குகளெல்லாம் புரியாமல்போனது அதிசயம்தான்.

ஃ ஃ ஃ


ராஜாஜி 1958ல் சொன்னார், ''தங்கத்துக்கு ஆபத்து'' என்று. எப்படிச் சொன்னார் என்று பலர் இன்று வியக்கிறார்கள். திட்டத்தின் உண்மை சொரூபம் அவருக்குத் தெரிந்திருந்தது. ஆகவே அதன் தேவை யானைப் பசி என்பதை அவர் யூகித்துத்தான் சோளப் பொரியோடு இது நிற்காது என்று எச்சரித்தார். அந்த எச்சரிக்கைதான் இன்று தங்கத் தடை உத்தரவாக வருகிறது.

இன்று கட்டித் தங்கத்துக்குத் தடை என்பது இதோடு நிற்காது. அரிசி ரேஷன் வந்த கதை மாதிரிதான்! ஆரம்பத்தில் விவசாயிகளிடத்தில் கொள் முதல் என்றார்கள். பிறகு 12 அவுன்ஸ் என்றார்கள். இறுதியில் ஆறு அவுன்ஸ் வரை படியைக் குறைத்தார்கள். அது போலத்தான் இன்று கட்டித் தங்கம் என்கிறார்கள். நாளடைவில் இது மூக்குத்தி திருகாணி வரை வந்து நிற்கும். திட்டத்தின் அகோரப் பசி அப்படிப் பட்டது.

இந்தப் பசி எங்கேதான் கொண்டு போய் விடும் என்றால், ஷராப் கடைகளில் வில்லைச் சேவகர்களை நிறுத்துகிற வரை கொண்டு போய் விடும்.

ஃ ஃ ஃ

பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரிவினைத் தடை சட்டத் தீர்மானம் பரிசீலனைக் கமிட்டிக்குப் போயிருக்கிறது. பிரிவினை கோருவோரைத் தேர்தலிலிருந்து ஒதுக்க வேண்டும் என்பதே தீர்மானத்தின் கருத்து. டாக்டர் ஸி. பி. ராமசுவாமி ஐயர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒருமைப்பாடு கமிட்டி



சென்னைக்கு வந்திருந்தபோது, மந்திரி திரு பக்தவத்ஸலம் அவர்கள் கமிட்டியிடம் என்ன கருத்தைக் கூறினாரோ அதே கருத்தைத்தான் இப்பொழுது திரு ஏ. கே. சென் பாராளு மன்றத்தில் தீர்மானமாகக் கொண்டு வந்திருக்கிறார். எனவே தீர்மானம் கொண்டு வந்த பெருமை தமிழ்நாடு மந்திரி சபையைத் தான் சாரும்.

இன்றைய சூழ்நிலையில் இந்தத் தீர்மானம் சரிதானா என்பதை அனைவரும் வெறுப்பு — விருப்பின்றிப் பரிசீலனை செய்ய வேண்டும்.


கடந்த இருபத்து நான்கு ஆண்டு காலமாக இந்தப் பிரிவினை இயக்கம் தமிழ் நாட்டில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் கடந்த பத்து ஆண்டு காலமாக இந்தப் பிரிவினை இயக்கம் வலுப்பட்டது மாதிரி இதற்கு முன் எந்தக் காலத்திலும் வலுப் பெறவில்லை. அப்படியானால் கடந்த பத்து ஆண்டு காலமாகத்தான் தமிழ் நாட்டினர் மனம் இப்படிப் பிரிவினைப் பாதையில் போய் விட்டதோ என்று கேட்கலாம். இந்தக் கேள்வி சரியல்ல. ஏனெனில் தொன்று தொட்டுத் தேசியத்தில் மூழ்கிக் கிடப்பவர்கள் தமிழ் நாட்டினர். தவறு இழைத்தவர்கள் யார் என்றால் ஆட்சியாளர்கள்தான். ஆட்சியில் நடந்த தவறுகளே இந்த இயக்கத்துக்கு வலு ஊட்டின. பர்மிட் — கோட்டா முறையால் அநீதிகள் இழைக்கப் பட்டன. இந்த அநீதிகளில் அவதிப்பட்ட மக்கள் எதிர்க் கட்சிகளை நாடினார்கள். இந்த நேரத்தில்தான் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாக மொழிவழி மாகாணங்கள் தோன்றின. நேரு அவர்கள் இதில் காட்டிய வழ வழாக் கொள்கை இவர்களை மேலும் வலுப்படச் செய்தது.

திரு சென்னோ அவருக்கு மெட்டு அமைத்துக் கொடுத்த சென்னை மந்திரிகளோ இதை உணர்ந்ததாகத் தோன்றவில்லை. சட்டம் கொண்டு வந்து விட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று கருதுகிறார்கள். பாராளு மன்றத்தில் மெஜாரிட்டி இருப்பதால் சட்டத்தைக் கொண்டு வந்து விடலாம். அவசர காலமும் சேர்ந்திருப்பதால் காரண காரியங்களைக் கூட விளக்கவோ மக்களிடம் விவாதத்துக்கு விடவோ அவசியமில்லாமல் போய் விடுகிறது. எனவே அவசரம் அவசரமாகச் சட்டத்தைத் தயாரித்துக் கொண்டு வந்து விட்டார்கள். பலாபலன் எப்படி இருந்தாலும் இன்றைய நிலைக்கு இது அவசியமா என்பதே கேள்வி.

பிரிவினையைக் கோஷமாகக் கூறி வந்த தி. மு. க.வே இந்தக் கோஷத்தை நிறுத்தி விட்டது. யுத்த முயற்சிக்காக அக்கழகத்தார் காங்கிரஸை விட அதிகமாக உழைக்கிறார்கள். சீனாக்காரன் இன்னும் நமது எல்லையிலிருந்து போகவில்லை. அவனைப் போக வைப்பதற்கு ஆட்சியாளர்களிடம் இன்னும் வேகம் பிறக்க வில்லை. ஆட்சியாளர்களுக்குச் சீனாக்காரனிடம் பி ற க் கா த வேகம் தி. மு. க.வின்பேரில் பிறந்திருப்பதற்குத் தான் காரணம் புரியவில்லை. சென்னை மந்திரிகளுக்குத் தங்களது வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டதாகப் பெருமை இருக்கலாம். மற்றபடி இதில் தேசத்துக்கு லாபமே இல்லை.

சேர்மன் கோபாலகிருஷ்ணன்

ஸ்ரீமான் பி.ஏ. கோபாலகிருஷ்ணன் ஐ. ஸி. எஸ். அவர்கள் சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் இந்தியா ஆயில் கம்பெனியின் சேர்மனாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். ஸ்ரீ கோபாலகிருஷ்ணன், இக்கம்பெனியின் மானேஜிங் டைரக்டராகப் பணியாற்றி வந்தார். திரு நிஜலிங்கப்பா சென்ற டிசம்பர் 23ம் தேதி வரை சேர்மனாக இருந்து வந்தார். இப்போது மானேஜிங்டைரக்டர் பதவியும், சேர்மன் பதவியும் ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் அவர்களே வகிப்பார்.




ஸ்ரீ பி. ஏ. கோபாலகிருஷ்ணன் சர்க்கார் நிர்வாகத் துறையில் நீண்ட நாளைய அனுபவம் பெற்றவர். உத்தரப் பிரதேச அரசாங்கத்தின் நிதி நிர்வாகக் காரியதரிசியாகப் பணியாற்றினார். பின்னர் தேசம் கடும் உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கியிருந்த காலத்தில் புது தில்லியில் யூனியன் சர்க்கார் உணவு இலாக்காவில் துணைக் காரியதரிசியாகச் சேர்ந்து, பல அகில உலக உணவு மகா நாடுகளில் கலந்து கொண்டும், வெளிநாட்டு அரசாங்கங்களுடன் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய உடன்படிக்கைகள் செய்தும் நல்ல பணியாற்றியிருக்கிறார். 'லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன்' என்னும் க்ஷேம நிதிக் கழகத்தின் சேர்மனாக இருந்து அவர் ஆற்றிய தொண்டுகள் பலருக்கும் நினைவிருக்கும்.

இப்படிப் பல துறைகளில் நிர்வாக அநுபவம் மிக்க ஸ்ரீ பி. ஏ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் 'இந்திய எண்ணெய்க் கம்பெனி' (இங்கு எண்ணெய் என்பது பெட்ரோல் எண்ணெயைக் குறிக்கும்) நல்ல முறையில் செயல்படும் என்று எதிர்பார்க்க இடம் உண்டு.

'கல்கி'யில் தொடர்கதையாக வந்து பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளம் கவர்ந்த 'மணிபல்லவம்' அழகிய புத்தக உருவில் தயாராகி மதுரையில் ஜனவரி 18ல் வெளியிடப்பட்டது. 'தமிழ் நாடு' செய்தித் தாள் ஆசிரியர் திரு கருமுத்து தி. மாணிக்கவாசகம் தலைமையில், தமிழவேள் திரு பி. டி. இராசன் அவர்கள் ''மணிபல்லவம்'' நூலை வெளியிட்டு, 'கல்கி' அதிபர் திரு சதாசிவம் அவர்கள் அனுப்பிய பொன்னாடையை நூலாசிரியர் திரு நா. பார்த்தசாரதி அவர்களுக்குப் போர்த்திப் பாராட்டினார். மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் விழா அமைப்பாளர் டாக்டர் கு. நாககசுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்றார்.

நூலின் உயர்வையும், நூலாசிரியர் புலமையையும் சிறப்பித்துத் திருவாளர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். எல். ஏ., சாண்டில்யன், திருலோக சீதாராம், கி. பழனியப்பன், வி. பி. ஆர். கங்காராம் துரைராஜ், அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார், ஸ்ரீமதி இரகுபதி சாமிநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். புத்தகத்தைப் பாங்குற வெளியிட்ட சென்னை வள்ளுவர் பண்ணையின் உரிமையாளர் திரு பழனியப்பன் நன்றி நவில, நாட்டு வாழ்த்துடன் வெளியீட்டு விழா நிறைவு எய்தியது.





தெய்வ நிந்தனையா?

பி. வி. ஆர்.

இரண்டு வயதில் லதா எல்லாக் குழந்தைகளையும் போலவா இருந்தாள்? சந்திர மண்டலம் போன்ற எழிலும் வனப்பும் தளதள வென்று தங்கக் குழம்பு போல உடல். வெல்வெட் மாதிரி வழுவழுக்கும் மாசுமறுவற்ற மேனி. நீர்க் கனம் தாளாமல் விம்மும் இளம் நுங்குக் கன்னங்களைத் தொட்டாலே நகக்கனியாய்ச் சிவந்து விடாதா? செப்பின் இலக்கணமாக உதடுகள் மாதுளை மொட்டு போல் குவிந்து அசையுமே? குறுகுறு வென்ற கண்களும், தேன் ஒழுகப் புன்னகை புரியும்போது குழி விழும்



தாடையும்..... லதா வெறும் பிரம்மனின் சிருஷ்டியா? அவளைப் படைத்த தெய்வத்தின் அன்புப் பழம் அல்லவா?

போட்டியில் லதாவுக்குப் பரிசு இல்லை என்றால் போட்டிக்கே அர்த்தமில்லை என்று கவிலா எண்ணினாள். பெருமையிலும் கர்வத்திலும் வயிறு விம்மியது. குழந்தைக்கு என்னென்ன மாதிரியெல்லாம் அலங்காரங்கள் செய்ய முடியுமோ, அத்தனையும் செய்து பார்த்தாள். அம்மனுக்கு எந்த அலங்காரம்தான் ஏற்காது? அது போலத்தான் அவள் குழந்தையும்.

மருமகளின் இந்த அலங்கார ஆயத்தங்கள் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை மாமியாருக்கு. அவளுக்கு மருமகள் பெரிய இடம்தான். இருந்தாலும் லதாவின் பேரிலிருந்த வாஞ்சையில் வார்த்தைகள் வெடித்தன.

''கவிலா, எனக்கு என்னவோ இது கொஞ்சமும் பிடிக்கவில்லை.....''

''எனக்குப் பிடிக்கிறது.''

''நம்ப வீட்டுக் குழந்தைதான் ரொம்ப



அழகு என்கிறதைப் போட்டியிலே பஞ்சாயத்துச் சொல்லியா தெரியணும்?''

''இல்லே, அம்மா! ஆயிரம் குழந்தைகளுக்கு நடுவே நம்ப லதாதான் ஒசத்தின்னு தெரியறப்போ....''

''ஆயிரம் வயிறுகள் எரியும்.... கமலா, வேண்டாம். படிப்பிலேயும் பாட்டிலேயும் பரிசுன்னு பெருமைப்படலாம். தெய்வ சிருஷ்டிகளுக்குள்ளே போட்டி வைக்கிறதே தப்பு.... அது தெய்வத்தையே நிந்தனை செய்யறது மாதிரி.''

கமலாவின் காதுகளில் ஒன்றும் ஏறவில்லை. வாசுவும் ஏதோ முணுமுணுத்தான். தாலி கட்டின நாளிலிருந்தே அவளுக்குத் தாசானுதாசனானவன் அவன். மனத்தில் 'கடித்த எதிர்ப்புக்களெல்லாம் தொண்டையிலே தடுமாறி நாவில் வெறும் முணுமுணுப்புக்களாக உதிர்ந்தன.

ஒரு பிரபல 'குழந்தை உணவு' தயாரிப்பாளர் ஏற்பாட்டில் போட்டியும் நடந்தது.

உலகத்தில் மூன்று சிறந்த அழகிகளில் ஒருத்தி எனப் பெயர் பெற்ற நட்சத்திரம்—இன்னும் அஸ்தமிக்காத நட்சத்திரம்—திலோத்தமாவின் முன்னிலையில் ஓர் அழகிய நந்தவனத்தில் நடந்தது. அழகும் ஆரோக்கியமும் புஷ்டியும் வனப்பும் எந்தக் குழந்தைக்கு இருக்கிறது என்பதை நிர்ணயிக்க ஓர் உயர்தர நீதிபதி, ஒரு மத்திய சர்க்கார் மந்திரி, பெரிய டாக்டர், அனாதை ஆசிரமம் ஒன்றை நடத்தி வரும் மகப்பேறு அற்ற ஒரு தலைவி முதலானோர் பஞ்சாயத்தாராக நின்றனர். அவர்கள் செய்யும் முடிவு பரிசு பெறும் குழந்தையின் எதிர்காலத்தையே நந்தவனமாக்கி விடும். பிள்ளைக் குழந்தையானால் எது வரை படிக்க விருப்பமோ அது வரையிலும், பெண்ணானால் படிப்பும் கலியாணமும் குழந்தை உணவுத் தயாரிப்பாளரின் செலவில் அல்லவா நடக்கும்? தெய்வம் தூவின மலர்களில் எந்த மலர் மணம் வீசப் போகிறது இந்தப் போட்டியில்?

போட்டியும் நடந்தது. நூற்றுக்கணக்கான பிஞ்சுகளைப் பெருமை விம்மத் தூக்கிக் கொண்டு தாய்மார்கள் அங்குமிங்குமாக நடந்தார்கள். பத்து மாதம் சுமந்து பெற்றதின் பயன் அன்றுதான் சித்திக்கும் என்று ஒவ்வொருத்தியும் எண்ணினாள். முதற் பரிசு பெறும் குழந்தையை வாரியெடுத்து அணைத்து உச்சி முகர்ந்து கை நிறைய சாக்லேட்டு கொடுக்கப் போகிறாள் திலோத்தமா தேவி என்பதை அறிந்த அவர்கள், அவளுடைய பட்டு விரல் அவரவர் குழந்தையின் பஞ்சு உடலையே வருட வேண்டும் என்று மனத்துக்குள் எண்ணினார்கள்.

பூத்துக் குலுங்கிய அந்தப் பூங்காவில் ஒவ்வொரு குழந்தையும் ஓர் அழகான மலராக விளங்கியது. முழு குழுவாகக் குழந்தைகள் வட்டம் வட்டமாக உட்கார்ந்திருந்த போது, பிரும்மாண்டமான மலர்க்கொத்தே பூத்தது போன்ற காட்சி....

கடைசியில்......

பஞ்சாயத்தார் ஆலோசனையில் ஈடுபட்டார்கள். திலோத்தமா தேவி அவசரப்பட்டாள். அன்று அவளுக்கு 'நளாயினி'யின் 'ஷூட்டிங்'குக்குக் 'கால் ஷீட்' இருந்தது. பெற்றவர்களும் அவர்களுக்குத் துணையாக வந்த 'துணைவர்களும்' நரம்புகளில் ஆர்வம் துடிக்கக் காத்திருந்தார்கள்.

ஒரே ஒரு தாய் மட்டும் நிச்சிந்தையாக இருந்தாள். அவள் தோளின் மேல் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை எதிலுமே மனத்தை ஓடவிடாமல் மலர்ச் செடிகளையும் வர்ண விளக்குகளையும் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. அம்மாவின் அசைவா நம்பிக்கைக்கு அதுதான் காரணம் என்று குழந்தைக்குத் தெரியுமா?

பஞ்சாயத்தார், எல்லாப் பஞ்சாயத்தார்களையும் போல் தங்களுக்குள் வாதாடி, போராடி விட்டு வெளி உலகுக்கு 'ஏகமனதான' முடிவை வெளியிட்டார்கள்.

முடிவு கமலாவின் காதுகளில் வெற்றி முரசாக ஒலித்தது. மைக்கில் லதாவின் பெயரும் அவளுடைய பெற்றோர்களின் பெயர்களும் அழைக்கப்பட்ட போது அவளுடைய மகிழ்ச்சி எல்லையைக் கடந்தது.' உலகத்து மூன்று அழகிகளில் ஒருத்தி, லதாவை வாரி எடுத்து, அணைத்து, உச்சி முகர்ந்து, கை நிறைய சாக்லேட்டைக் கொடுத்த போது, பெற்ற வயிறு விம்மி நிறைந்தது. கமலா ஜயித்து விட்டாள்! அவளுடைய நம்பிக்கை ஜெயித்து விட்டது!

வீட்டுக்கு வந்ததும் கமலா, ''அம்மா! நான் சொன்னபடியே லதாவுக்குத்தான் முதல் பரிசு....'' என்று கத்தினாள்.

பதில் ஒன்றும் பேசாத மாமியார், கை நிறைய உப்பையும் மிளகாயையும் வைத்துக் கொண்டு வரவேற்றாள்.

''ஆயிரம் கண் பட்டிருக்கும். முதலிலே இதைச் சுற்றிப் போடணும்....''

தீயிட்ட திருஷ்டிப் பொருள்கள் கமறவே இல்லை என்றும், ஏகப்பட்ட திருஷ்டி இருக்கிறது என்றும் மாமியார் குறைப்பட, வாசு திகைத்தான்.

''என்ன அம்மா, செய்யலாம்?''

''கவலைப்படாதேடா.... வா, எல்லாரும் கோயிலுக்குப் போகலாம். அம்பிகைக்கு முன்னால் குழந்தையை விடு. தெய்வ நிந்தனையான பிறகு தெய்வத்தைத்தான் கெஞ்சணும்!'' என்றாள் அவள்.

''சுத்த நான்சென்ஸ்! லதா ரொம்பக் களைப்பா இருக்கா.... அங்கே எத்தனை பேர் கொஞ்ச ஆசைப்பட்டா... எத்தனை பேர் ஐஸ்க்ரீமும் பிஸ்கட்டும் கொடுத்திருக்கா! அது ரொம்ப 'டயர்டா' இருக்கு'' என்று கமலா முகத்தில் அறைந்தாற் போலப் பதில் சொன்னாள்.

விடிந்தது. ஆனால் அன்றுதான் கமலாவின் இருளும் பிறந்தது.

தங்க விக்கிரகம் போன்ற குழந்தை கண் விழிக்க முடியாமல் தகித்தது. உடலெங்கும் வியாபித்த சூட்டில், உடம்பே கன்னிப் போய்ப் பயங்கரமாக இருந்தது.

கமலா அலறினாள். முந்தின தினம் அவள் பார்த்த குழந்தையா இவள்? வாசு ஆபத்துக் காலங்களில் அசாதாரண தைரியம் கொண்டவன். குழந்தையைத் தோளின் மேல் போட்டுக் கொண்டு, சைக்கிளில் பறந்தான். அவனுடைய தாயார், வேண்டாத தெய்வங்களை யெல்லாம் வேண்டினாள்.

சுசீலா முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அழுது கொண்டே கணவனையும் குழந்தையையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

வாசு திரும்பி வரும்போது மணி ஒன்பது ஆகி விட்டது.

''103 டிகிரி இருக்கு சுசீலா.... இந்தப் பொடியைத் தேனில் குழைத்துக் கொடு.... இன்னிக்கு மூன்று வேளை....''

''டாக்டர் என்ன சொன்னார்?''

''ஜுரமாம்.''

''அது நமக்கே தெரியுமே?''

''வேறு ஒன்றும் சொல்லவில்லை.''

''அம்மா! இன்னிக்கு இப்பவே கோவி லுக்குப் போகலாமா?''

''அசடு போலப் பேசறியே.... நம்ப லதா வுக்கு என்ன வந்துடுத்து?''

''எனக்குப் பயமாயிருக்கு.''

''இதுக்கெல்லாம் பயந்தால் உலகத்திலே வாழ முடியாது.''

தேனும் பொடியும் ஆறு தடவை கொடுத் தாகி விட்டது. மூன்றும் நாள் குழந்தையை டாக்ஸியில் வைத்துக் கொண்டு போனார்கள். டாக்டர் ஊசி போட்டார். அப்புறம் டாக்டரே வந்தார்.

ஒரு நாள், இரண்டு நாள், மூன்றும் நாள் - டாக்டர் தேவையில்லாமல் போய் விட்டது.

சுசீலாவுக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை யென்றால் அது தெய்வத்தின் அனுக்கிரகம் தான் காரணம். அவள் பித்துப் பிடித்தவளைப் போல் நடந்தாள். உணவை மறந்து ஏழு நாட்களாகி விட்டன: அவளுடைய துக்கம் எல்லை கடந்து போனதில், வார்த்தைகள் எளிதில் வெளிவரவில்லை. ஆனால் அவள் பார்த்த இடமெல்லாம் நந்தவனமாக, பூங் கொத்துக்களாக மலர்ச் செடிகளாகத் தோன்றின. ஒரே ஒரு மலர் மட்டும் ஒரு செடியினின்றும் உதிர்ந்து, மண்ணின் மேல் விழுந்து பவர் காண்பட்டுத் துவண்டு கசங்கிக் கடைசியில் மண்ணினுள் புதைந்தது.

எங்கே பார்த்தாலும் லதா. எங்கு திரும்பி னாலும் லதா. அவளுடைய சந்திர மண்டலம் போன்ற எழிலும் வனப்பும், தளதள வென்று தங்கக் குழம்பு போன்ற உடலும், வெல் வெட்டு மாதிரி வழவழக்கும் மாசு மறு வற்ற மேனியும்—எல்லாம் கனவில் பிறந்த குழந்தையாகி விட்டன.

மக்களுக்குச் சத்துரு மாதா பிதா என் பது லதா விஷயத்தில் எவ்வளவு உண்மை யாகி விட்டது? போட்டியில் அவள் கலந்து கொள்ளாமல் இருந்திருந்தால், இந்தக் கதி வந்திருக்காதே? - மாமியார் சொன்னதை அவள் கேட்க வில்லை: பிறந்த இடத்தின் பெருமையும், செல்வமும், அவளுடைய இயற் கையான அழகும், அந்த அழகின் பிம்ப மாகப் பிறந்த குழந்தையால் உண்டான கர்வமும், விதியின் கருவிகளாக அமைந்து விட்டனவே? இல்லை.... அவனே அமைத்துக் கொடுத்து விட்டான்!

வாசு எவ்வளவோ தேற்றினான். மாமி யார்கூடத் தேற்றினாள். தெய்வ சிருஷ்டி களுக்குள் போட்டியே கூடாது என்றாளே! சுசீலா போட்டியை ஆதரித்துப் பங்கு கொண்டதற்குத் தண்டனையா? அன்று அம்மன் சந்நிதிக்குப் போயிருந்தால் இந்தக் கதி வந்திருக்காதோ! இனி எத்தனை தட வைகள் அம்மன் சந்நிதிக்குப் போனாலும் லதா திரும்பக் கிடைப்பாளா ?-

அந்த வாரம் பல வாரப் பத்திரிகைகளில் போட்டி முடிவுகளும், போட்டோக்களும் பிரசுரமாகி யிருந்தன. சுசீலாவின் பெற்ற வயிறு மூம குண்டமாகியது. கண்களில் நீர் பெருக்கெடுத்தது.

''சுசீலா....! நீ இந்த மாதிரி இருக்கிறது, அவிக்கூட நன்றாயில்லை... தை வெள்ளிக் கிழமையும் அதுவுமா, நெத்திக்குக்கூட இட் டுக் கொள்ளாமல்....'' என்று மாமியார் ஆதரவுடன் கடிந்து கொண்டாள்.

''என் லதா இப்படி...'' சுசீலா விம்மினாள்.

''நான் நாலு சாகக் கொடுத்தேன். வாசு ஒருவன்தான் தக்கினான். நான் செத்ததையே நினைக்க நினைக்கப் புலம்பியிருந்தால், பிறந் ததை வளர்க்க முடிந்திருக்காது. போய் என் னைப் தேய்த்துக் கொள். முண்டகக்கண்ணி அம்மனுக்கு மாவிளக்கு ஏற்றலாம் இன் னைக்கு....''

''நீங்க சொன்னதை நான் கேட்கவே யில்லை, அம்மா. நான் பாவி....''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. போட்டி யிலே ஜயம் வந்தால் இப்படி ஆகுமா...? நம்ப ஜன்மமே ஒன்றுக்கொன்று முடிச்சுப் போட்டது தானே.... நமக்குக் கொட்டின தெல்லாம் கிடைக்குமா....? சித்தினதுதான் கிடைக்கும். இன்னமேதான் நீ மன நிம் மதியா இருக்கணும். வயத்திலே முளைச்சிருக் கிறதாவது நல்லபடியாக வளர்ந்து வெளியே வரணும்....''

நான் நாற்பது நாட்களாக ஸ்நானம் செய்யாதது அப்போதுதான் சுசீலாவின் நினைவுக்கு வந்தது. அந்த நினைவே பயங்கர மாக எழுந்தது.

''ஐயோ, வேண்டாம், அம்மா...வேண் டாம்......''

''அசடு.... நாம வேணும்னு கிடைக்குமா, வேண்டாம்னு கிடைக்காம இருக்குமா? போய் என்னைப் தேய்த்துக் கொள். நான் வெந் நீர் எடுத்து வைக்கிறேன்.''

''ஐயோ, வேண்டாம். தெய்வமே வேண்டாம்.....''

நிசப்தமான இரவில் அவளுடைய குரல் அரைகுறையாகத் தூங்கிக் கொண்டிருந்த வாசுவைத் தூக்கிவாரிப் போட வில்லை. தினம் தினம் இரவுகளில் அவனுக்கு அவ ளுடைய கூக்குரல்கள் பழக்கமாகி விட்டன.

''சுசி....சுசி.... என்னம்மா, இப்படி....''

''ஐயோ, லதாவுக்கு அப்புறம் குழந் தையே கூடாது. எனக்குத் தாயாவதற்குக் கூட யோக்கியதை இல்லை....''

''சீ, அசடு! எழுந்திரு! மணி நாலடித்து விட்டது. இன்னிக்கு உத்தரம் கபாலி கோவி லுக்குப் போய் வரலாம்.''

''எனக்குப் பயமாக இருக்கு. என்னைப் பிடித்துக் கொள்ளுங்கள்.''

வாசு அவளைத் தன்னுடன் தாங்கிக் கொண்டான். அவள் உடல் நடுங்கியது.

''ஏதாவது சொப்பனம் கண்டாயா சுசி?''

''ஆமாம், லதா வந்தாள். 'அம்மா நான் மறுபடியும் வயித்துக்குள்ளே பூந்துட்டேன்' என்றாள்....''



''ஒவ்வொரு தொழிலிலும் சர்க்கார் தலையிட்டிருனல் தொழிலாளிகளுக்கெல் லாம் வேலை யில்லாமல் போய், இனி பல தொழில்காரர்களும் ஈ ஓட்ட வேண்டியதுதான் போலிருக்கு!''

''அப்படின்னு சப்பஞ்சாரும் நாட்டில் ஏற்பட்டுவிடும் போலிருக்கே!''

''உன் பிரமை!''

''இல்லே, அன்னிக்குப் போட்டிருந்த டிரஸ்லேதான். கிளிப் பச்சை வெல்வெட்டுக் கவுனும் மயில் நெக்லஸுமாக வந்தாள். 'இனிமே என்னைப் போட்டியிலே உட்கார்த் தாதே' என்று வேறு சொன்னுள். எனக்கு வேண்டாம்... குழந்தையே வேண்டாம்.''

''சரி, வேண்டாம். இன்னும் ஆறு மாசத் துக்குள்ளே இது பிறந்துவிடும். அதை நானும் அம்மாவும் வளர்க்கிறோம். இப்போ எழுந் திருந்து வா!''

''என் கர்வத்துக்குத் தண்டனை கிடைச் சாச்சு.... தெய்வ நிந்தனை செய்து விட் டேன்....'' அவள் அழ ஆரம்பித்தாள்.

''கவி.... ஏன் சின்னக் குழந்தை போல் பேத்துகிறாய்? லதா பிழைக்க நாம் கொடுத்து வைக்க வில்லே. அதற்காக நாம் மற்ற எல்லா வற்றையும் வெறுக்க முடியுமா? அடுத்த மாசம் உன்னே ஊட்டிக்கோ, கோடைக்கான லுக்கோ அழைத்துப் போகிறேன். வா, எழுந்திரு. பல்லைத் தேய். கோவிலுக்குப் போகலாம்.''

கவிலா நாள் செல்லச் செல்ல அதிகம் வெதும்பினுளே தவிர, சமாதான மடைய வில்லே. என்றும் இல்லாத கனிவுடன் மாமி யாரும் அன்புடன் கணவரும் இருந்தாலும் மனத்தில் சதா சர்வ காலமும் லதாவே சுற்றிச் சுற்றி வந்தாள்.

'அன்று கண்ட கனவு இன்னும் பச்சை யாக நினைவில் இருந்தது. லதா மீண்டும் அவள் வயிற்றில் புகுந்து விடுவாளா? அதே அழ குடன் பிறப்பாளா? ஐயோ, வேண்டாம்! அந்த அழகும், ஆரோக்கியமும் கவர்ச்சியும் மிகுவின் கருவிழிகள். அவை அவளையும் அழித்துச் கவிலாவையும் வாழ விடாது. லதா வின் அழகு அவள் மனத்தில் பழைய கர்வத் தையும் மமதையையும் உண்டாக்கி விடும். யாராவது அழகுப் போட்டி வைத்தால் அதில் கலந்து கொள்ளத் தோன்றும். வயிற் றில் ஏற்கனவே உதித்து விட்டது வளர்ந்து தான் ஆகும். அது வெளியே வந்துதான் தீரும். ஆனல் கடவுளே, அது லதாவைப் போல் சந்திர மண்டலம்போல், தங்க விக்கிரக மாக வரவேண்டாம். அவள் பத்து மாதம் சுமப்பது, அவளுடைய தூய அன்பை மட்டும் ஏற்கும் வெறும் சாதாரணக் குழந்தையாக இருந்தால் போதும். தெய்வ நிந்தனைக்குத் தெய்வ சிருஷ்டியே வழிகாட்ட வேண்டாம்.'

கவிலா தினம் தினம் கோவிலுக்குப் போனுள். கற்பகாம்பிகை முன் மெய்ம் மறந்து நின்ருள். தாய்மைச் சுமை அதிகமாக அதிகமாக மனக் கண் முன், மனத்தில் வடித்த குழந்தை நின்றது. அவள் லதாவுக்குச் செய்த கொடுமைக்குப் பிராயச்சித்தம் அவளுடைய மமதைக்கு அவளே அளித்துக் கொள்ளும் தண்டனை, அவள் இழைத்த தெய்வ நிந்த னைக்கு அவனே யாசிக்கும் மன்னிப்பு எல்லாம் அந்த மானசீக வடிவில் ஒன்று சேர்ந்தன.

கவிலா மற்றவர்களுடன் சரியாகப் பேசி இரண்டு மாதங்களாகி விட்டன. தனக்கு என்று ஓர் உலகத்தைச் சிருஷ்டி செய்து கொண்டு, அந்த உலகுக்குள் யாரையும் பிர வேசிக்க விடாமல் அவள் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள். அவள் மனத்தைப் புரிந்து கொண்ட மாமியாரும் வாகவும் அவளுடைய வழிக்கே அவளை விட்டனர்.

அன்று விடிந்தது.

எல்லோருக்கும் விடிந்தது.

கவிலா தனக்கும் விடிந்து விட்டதாக எண்ணினுள்.

ஊன்றி விட்ட விதை பத்து மாதங்கள் இருட்டறையில், இரத்தத்திலே தோய்ந்து வளர்ந்து பிஞ்சாக வெளியே வந்து விழுந்து, வீடே இன்ப நாதத்தில் திளைக்க வீறிட்ட போது —

கவிலா அரை மயக்க நிலையில், அரை உணர் வில் தவித்தாள். கண் முன்னே ஆயிர மாயிரம் நட்சத்திரங்கள் லதாவின் உரு வத்தை ஏந்தி மின்னின. மருத்துவச்சி கூறிய வார்த்தைகள் புரிய வில்லே. குழந்தையின் அழுகை காதில் தேனுக ஒலியிட்ட போதி லும், அதன் முகத்தைக் காண மனத்தில் தெம்பும் உடலில் சக்தியும் இல்லே.

''உங்க பேரனைப் பாருங்கோ, அம்மா!''

மருத்துவச்சியின் இந்த வார்த்தைகள் கவிலாவுக்கு இப்போது நன்ருகக் கேட்கின்றன.

கவிலா மௌனமாகத் துவண்டு போய்க் கிடக்கிறுள்.

அறைக்குள் மாமியார் பிரவேசிக்கிறுள். அறையின் வெளியே வாக நிற்பதைக் கவிலா உணர்கிறுள்.

படுக்கையிலிருந்தும் சிசுவைக் கையில் எடுத்த மாமியாரின் தொண்டையிலிருந்து வார்த்தைகள் பிறக்கின்றன. மெல்லிய குரலே கனமாகி விடுகிறது.

''வாக! நீ உன் அப்பாவைப் போல் இருந்தாய். இது உன்னைப் போல் இருக் கிறதடா.... கறுப்புன்னலும் கறுப்பு, என்ன அழகான கறுப்பு...... கவிலாவைத் தொட் டுக் குளிக்கலே....''


மாமியாரின் வார்த்தைகள் அமிர்தமாகக் காதுகளில் சொரிந்தன. உடம்பின் பலத்தை யெல்லாம் திரட்டிக் கொண்டு தன் இரத்தத் தின் பின்னத்தைப் பார்க்கத் திரும்பினுள்.

அதற்குள் பின்னேயிடம் பிள்ளையைக் காட்டப் பிள்ளையின் தாயார் குழந்தையைத் தூக்கிக் கொண்டு சென்று விட்டாள். கவிலா வின் திருப்தி அவளை ஆட்கொண்டது.

அமெரிக்க விஜயம்

எஸ்.வி.எஸ்.

அன்று நான் தெரு வழியாகச் சைக்கிளில் போய்க் கொண்டிருந்த போது எதிரில் நண்பர் பாஸ்கரனைப் பார்த்தேன். அவரைச் சாதாரணமாக ஒரு நாள் விட்டு ஒரு நாளோ, இரண்டு நாட்களுக்கு ஒரு முறையோ, தெருவில், ஹோட்டலில், டாக்ஸி ஸ்டாண்டில், ரயில்வே ஸ்டேஷனில் ஆகிய ஏதாகிலும் ஓரிடத்தில் சந்தித்து ஐந்து அல்லது பத்து நிமிஷங்கள் பேசிக் கொண்டிருப்பது வழக்கம். ஆனால் சமீபத்தில் பதினைந்து நாட்களாக அவரைக் காணவில்லை. அன்றுதான் சந்தித்தேன்.




உடனே சைக்கிளை விட்டு இறங்கி, ''எங்கே ஸார்! ரொம்ப நாட்களாக உங்களைக் காணோம்! உடம்பு கிடம்பு சரியில்லாமே...'' என்று இழுத்தேன்.

''சே! சே! அதெல்லாம் இல்லை! அமெரிக்காவுக்குப் போய் விட்டு வந்தேன்!'' என்று சொன்னார் சர்வ சாதாரணமாக.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! ஆளைப் பார்த்தால் அமெரிக்காவுக்குப் போய் விட்டு வரக்கூடிய மாதிரியோ, அப்படிப்பட்ட உத்தியோகம் வகிக்கிறவர் மாதிரியோ தெரியவில்லை. இருந்தாலும் அமெரிக்காவுக்குப் போய் விட்டு வந்ததாகச் சொல்கிறாரே என்று ஒரு கணம் யோசித்தேன். ஆனாலும் இந்தக் காலத்திலே என்ன சொல்ல முடிகிறது? யார் யாரெல்லாமோ அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் போய் வரும் போது, பாஸ்கரன் மட்டும் ஏன் போய் வந்திருக்கக் கூடாது என்று நினைத்தேன். அந்த எண்ணத்தில் உறுதியும் ஏற்பட்டது.

''அப்படியா, ஸார்? எனக்குச் சொல்லவே இல்லையே! அங்கே என்ன என்ன பார்த்தீர்கள்?'' என்று கேட்டேன் மிகுந்த ஆவலோடு.



''அங்கே என்ன பார்த்தேன் என்று சொல்வதைவிட அங்கு என்ன பார்க்கவில்லை என்று சொல்கிறேன் ஸார்! முதலில் இந்தச் சைக்கிளை அங்கே பார்க்கவில்லை ஸார்!'' என்றார் நண்பர் திரு பாஸ்கரன்.

''என்ன, சைக்கிளைப் பார்க்கவில்லையா?'' என்று வியப்பு மேலிட்டுக் கேட்டேன்.

''ஆமாம், ஸார்! இரண்டு ஆளுக்கு ஒரு கார் வீதம் அமெரிக்காவிலே எங்கும் கார் மயம்தான்! நான் நியூயார்க்கிலே தங்கியிருந்த நண்பரிடம் 'இரண்டு பர்லாங்கு தூரத்திலே யிருக்கிற ஓர் இடத்துக்குப் போய் விட்டு வரவேண்டும், ஒரு சைக்கிள் இருந்தால் கொடுங்களேன்!' என்று கேட்டேன். 'தற்கொலையில் செத்தால் கூடப் பணம் தரக்கூடியபடி இன்ஷூர் செய்துகொண்டு வந்திருக்கிறீயா?' என்று பதிலுக்கு அந்த நண்பர் கேட்டார்!'' என்றார்.

''அப்படியா? அவர்களுக்குச் சைக்கிள் என்றால் அவ்வளவு பயமிருக்கிறதா?'' என்றேன்.

''அவ்வளவு கார்கள்! பத்தடி தூரம் போக வேண்டும் என்றாலும் கூட கார்தான்! நூறு மைல் என்றால் ஏரோப்ளேன்தான்! அதனால் என்ன ஆச்சு தெரியுமோ! அமெரிக்காவில் இப்போ ரயில்வே தண்டவாளங்களைப் பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்!'' என்றார் நண்பர்.

''ரயில் தண்டவாளத்தைப் பிடுங்குகிறார்களா? — எதற்கு?'' என்றேன்.

''இப்போது அமெரிக்காவில் எவ்வளவு தூரமானாலும் காரிலேயே போகிறார்கள். இல்லையானால் ஆகாய விமானத்திலே போகிறார்கள். ரயிலில் போகிறவர்கள் குறைந்து விட்டார்கள். அதனால் ரயில் வருமானம் குறைந்து, ரயில் தண்டவாளத்தைச் சில இடங்களில் எடுக்க ஆரம்பித்து விட்டார்கள்!'' என்றார் நண்பர்.

''ஆகாய விமானம், கார் பிரயாணத்தை விட ரயில் பிரயாணம் 'சீப்'—செலவு குறைச்சலாச்சே ஸார்!''

''சீப்பைப் பற்றி யார் சார் கவனிக்கிறார்கள், அந்தக் குபேர பட்டணத்திலே? உங்களுக்கு ஒரு சம்பவம்

சொன்னால் நம்ப மாட்டீர்கள்! அமெரிக்காவிலே ஒரு நண்பர் பெரிய கார்கள் விற்கும் கடைக்குப் போனார். எதற்குத் தெரியுமா? காரிலேயே விலையுயர்ந்த காரான 'காடிலாக்' கார் வாங்குவதற்கு! அந்தக் கார் அவருடைய உபயோகத்துக்கு வாங்கப் போனார் என்று நினைத்தீர்களானால் அதைப் போல் தவறு வேறில்லை. அதை ஒரு நண்பருக்குப் பரிசாகக் கொடுக்க வாங்கினார். ஒரு செக் இருந்த இடத்திலேயே எழுதிக் கொடுத்தார்! கார் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். மறு நாள் பாங்கியிலிருந்து இவர் கொடுத்த செக் திரும்பி வந்திருக்கிறது! ஏன் திரும்பி வந்தது என்று செக்கைப் பின்புறம் திரும்பிப் பார்த்தார்—'**கணக்கில் பணமில்லை**' என்று எழுதியிருந்தது. நண்பருக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது!



"டெலிபோனுக்குப் போய்ப் பாங்கு மானேஜரைத் தாக்குத் தாக்க வேண்டும் என்று போனார். போன் பண்ணு முன் மீண்டும் எதேச்சையாக அந்தச் செக்கைப் பார்த்த போது 'கணக்கில் பணமில்லை — உங்கள் கணக்கில் அல்ல—**எங்கள் கணக்கில்**' என்று அடுத்த வரி பொடி எழுத்தில் இருந்தது!" என்றார்.

"பாங்குகளை விடப் பணக்காரத் தனி மனிதர்கள் அங்கே நிறைய இருக்கிறார்கள் என்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!" என்றேன்.

"அங்கேயும் நம் தேசத்தில் இருக்கிறாற் போல் ஊழல்கள் அங்கங்கே இருக்கத்தான் செய்கின்றன. ஒரு தரம் ரூஸ்வெல்ட் ஜனாதிபதியாக இருந்த போது, பாஸ்டன் பிரதிநிதி தமது ஊர் ஆசாமியான கென்னடியின் தகப்பனாருக்கு இங்கிலாந்து தூதர் வேலை தரும்படி சொன்னாராம்! ரூஸ்வெல்ட் 'ஏன்?' என்று கேட்டாராம். 'ஏனென்றால், நம்ம ஜனநாயகக் கட்சிக்கு லட்சத்து ஐம்பதினாயிரம் டாலர் தேர்தல் நிதியாகக் கொடுத்திருக்கிறார்' என்று பதில் சொன்னாராம். உடனே ரூஸ்வெல்ட் அவரை நியமித்தாராம்! இப்படியொரு கதை அங்கே உண்டு."



"ஐய்யே....!" என்றேன்.

"ஒரேயடியாக உடனே கஞ்சி வார்த்துவிடாதேயும். இதே ஜனநாயகக்கட்சியின் பேரில் இப்போது ஜனாதிபதியாக இருக்கும் கென்னடி தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரைப் பார்த்தேன்!" என்று சர்வ சாதாரணமாகக் கூறினார்.

"கென்னடியைப் பார்த்தீர்களா?" என்று வியப்பு மேலிட்டுக் கேட்டேன்.

"கென்னடியைப் பார்த்தேன், ஸ்ரீமதி ஜாக்குவிலீன் கென்னடியைப் பார்த்தேன். அவர்கள் குழந்தைகளைப் பார்த்தேன். இதில் என்ன அதிசயம் இருக்கிறது? சொல்ல வந்த விஷயம் வேறு அல்லவா? கென்னடி ஜனாதிபதியானவுடன் தமது பிரதான மந்திரிகள் உட்பட ஆறாயிரம் உத்தியோகங்களுக்கு ஆட்களை நியமனம் செய்ய வேண்டியிருந்ததாம். முதலில் தமது சொந்தக்காரர்கள் என்பவர்களுக்கு வேலை கொடுப்பதில்லை என்று விதி செய்து கொண்டாராம். அடுத்தாற் போல் அந்தந்த வேலையில் திறமையும் புலமையும் மிக்கவர்களுக்கே தேடிப் பிடித்து வேலை கொடுப்பது என்று முடிவு செய்தாராம்! அதன்படி ஒவ்வொரு சர்வகலாசாலையிலும் உள்ள பொருளாதாரம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் நன்கு புகழ் பெற்ற நிபுணர்களுக்கு அழைப்பு அனுப்பினாராம்! எப்படி?"

"நம்ம ஊரிலே கென்னடியின் நிலைமையிலே யாராகிலும் இருந்தால் அப்பா, தாத்தா பாட்டி, மாமா மருமான் பிள்ளை, பெண் என்று அந்த ஆறாயிரம் வேலைகளையும் நிரப்பி யிருக்க மாட்டார்களா! அந்த விஷயத்திலே கென்னடி இந்தியர்களை மிஞ்சிவிட முடியுமோ!" என்றேன்.

"கடைசியில் ஒரு உத்தியோகம் மாத்திரம் ரொம்பவும் யோசித்து வேறு வழியின்றித் தமது சகோதரருக்குப் பலருடைய வற்புறுத்தலின் பேரில் கொடுத்தாராம். அது தான் அட்டர்னி ஜெனரல் உத்தியோகம்!"

"அது சரி, அமெரிக்காவிலே பழைய ஜனாதிபதி ஐஸன்ஹோவரைப் பார்த்தீர்களா?" என்று ஆவலோடு கேட்டேன்.

"ஓ! பார்த்தேனே! அவரை 'உம்ம எட்டு வருட பதவிக் காலத்திலே மறக்க முடியாத நாளோ சம்பவமோ எது?' என்று கூடக் கேட்டேன். அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'ஒரு நாள்,

வாழ்க்கைச் செலவு புள்ளிக் கணக்கில் நாலு பாயிண்ட் ஏறிவிட்டது என்ற செய்தியைப் பார்த்தேன். அமெரிக்க நாட்டுப் பெண்கள் டெலிபோன் மூல மும், நேரிலும் கடிதங்கள் மூலமும் ஊர்வலங்கள் மூலமும் 'விலைவாசி ஏறி விட்டது. குறையுங்கள்' என்று சாடப் போகிறார்களே என்று பயந்து இரவெல்லாம் தூக்கமில்லாமல் கழித்தேனே அந்தப் பயங்கர நாளை மறக்கவே முடியாது!' என்றார். அந்தத் தேசத்திலே பெண்களுக்கு இருக்கும் செல்வாக்கைப் பார்த்தீர்களா?'' என்றார் அவர்.

''நம்ம தேசத்திலே பெண்களின் நகையிலுள்ள தங்கத்தைச் சர்க்கார் உருவிக் கொண்டு போனாலும் வாய்மூடிக் கொண்டிருக்கிறார்களே!'' என்றேன்.

''அதுமட்டுமில்லே, ஸ்வாமி! அங்கே ராணுவ பாதுகாப்பு இலாகாவின் காரிய தரிசியாகப் பதவி வகிக்கும் மக்நமாரா இப்போது இருபத்தையாயிரம் டாலர் சம்பளம் வாங்குகிறார். அதற்கு முன்னால் அவர் போர்டு கம்பெனியில் டைரக்டர்களின் தலைவராக இருந்து நாலு லட்சம் டாலர் பெற்று வந்தார். அதை விட்டு விட்டு. ஜனாதிபதி கூப்பிட்டாரே என்று வந்திருக்கிறார்!''

''என்ன தியாகம்!'' என்றேன்.



''இவரைப்போல் எத்தனையோ பேர்? அங்கே செனடர் என்கிற சட்டசபைப் பிரதிநிதிகளுக்கெல்லாம் 22500 டாலர் சம்பளம். ஒவ்வொருத்தருக்கும் பதினாறு காரியதரிசிகள், அவர்களுக்கு வரும் கடிதங்களுக்குப் பதில் எழுத'' என்றார் பாஸ்கரன்.

''அவ்வளவு கடிதங்களா ஒவ்வொரு செனட்டருக்கும் வரும்?'' என்றேன்.

''சரியாகப் போச்சு. அகில உலக விஷயங்களிலிருந்து வீட்டுச் சண்டை வரையில் மக்கள் தங்கள் தொகுதிப் பிரதிநிதிகளுக்கு எழுதுவார்கள். ஒரு செனட்டர் என்ன சொன்னார் தெரியுமா?'' என்று ஒருகணம் நிறுத்தினார்.

''என்ன?'' என்றேன்.

'அன்புள்ள செனட்டர் அவர்களே,
எனக்கு இந்த வீட்டுக் கணக்குப் போட வரவில்லை. தயவு செய்து அடுத்த தபாலில் வழியோடு போட்டு அனுப்பவும்.
—மேரி; வயது 7'

என்று வந்ததாம். அதற்கும் பதில் போட்டாராம்!'' என்றார்.

''அது சரி, விடை சரியாகப் போட்டாராமா? விசாரித்தீரா?'' என்றேன்.

''அது கேட்க மறந்து விட்டேன். அடுத்த தடவை போகும் போது கேட்கிறேன். இப்ப நான் வரட்டுமா?'' என்று சொல்லிக் கொண்டே நழுவப் பார்த்தார்.


''பாஸ்கரன், ஒன்று கேட்கணுமே!''


''என்ன?'' என்றார்.

''இவ்வளவு விவரங்களும் எந்தப் புத்தகத்தில் வாசித்தீர்? அதைச் சொல்லி விடும்!'' என்றேன்.

பாஸ்கரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''ஓய்! ஓய்! குட்டு வெளிப்பட்டு விட்டதா?.... அது சரிதானய்யா! அமெரிக்காவுக்குப் போய் விட்டு வந்து எழுதுகிறவர்களைவிடப் பத்து நாட்களாக அருமையான ஒரு புத்தகத்தை வாசித்து விட்டு அமெரிக்காவைப் பற்றிச் சொல்வதில் என்னய்யா குறைந்து விட்டது?''

''குறைந்து விட்டதா? நிறைந்திருக்கிறதய்யா! அவர்கள் நேரில் போய்க் கண்டு பிடிக்க முடியாத விவரங்களையெல்லாம் நீர் சொல்கிறீர். பேஷாக இருக்கிறது! இந்த வேஷத்தைக் கலைக்காமல் இப்படியே நடத்தும்! ஆனால் உம்மைப் பூரணமாக நம்பி விடுகிற ஏமாந்த சோணகிரியாகப் பார்த்து நடத்தும் என்று மட்டும் எச்சரிக்கை செய்து வைக்கிறேன்!'' என்று சொல்லி விட்டு, நான் என்னுடைய சைக்கிளில் ஏறிக் கொண்டேன்!


அவசரத் தீர்மானங்களுக்கு இங்கே அவசர போர்டுகள் 'ரெடி'
காலம் போகிற போக்கைப் பார்த்து இந்தத் தொழிலை எடுத்துக் கொண்டேன்! வியாபாரம் பிரமாதமா நடக்கிறது!
உங்கள் நடவடிக்கை தப்பு
எங்களுக்கு மாற்று வேலை கொடு
தீர்மானத்தை வாபஸ் வாங்கு
உங்களுக்கு என்ன கஞ்சத்தனம்? வைரத்தோடு வாங்கினால் என்ன? கடைசியில் பணமா உங்களோடு வரப் போகிறது?
வைரத்தோடும் தான் உன் கூட வரப் போறதில்லையே!
அது நான் அங்கே வைத்து விட்டு வந்த என் 'டிரான்ஸிஸ்டர்' ரேடியோ! செங்கல் இல்லை! வைத்துக் கட்டி விடாதே!
கட்டட என்ஜினியர்
அசல் தங்க பஸ்பம் இனிமேல் கிடையாதய்யா!
ஏன்! தாமிர பஸ்பத்தைக் கலந்து தான் தருவீர்களோ!
சாமா



துன்புறுத்தும்
இருமலையும்
சளியையும்
சட்டென்று போக்கிவிடும்
பி. ஐ. காவ்ப் ஸிரப்
ஓர்
பெங்கால் இம்யூனிடி
தயாரிப்பு

மண்வீடு

ஸ்ரீப்ரியா

தபால்காரரைப் பார்க்க வாசலில் வந்து நின்றாள் பார்வதி. ஒரு புறம் ஆவலும், ஒரு புறம் பயமுமாக மனம் துடித்தது. எதிர் வீட்டு மீனுக் குட்டி வந்து எட்டிப் பார்த்தாள்.

''என்ன மாமி, தபால்காரரைப் பார்க்கிறீர்களா? வரும் நேரமாகவில்லையே!''

''ம்?....ஆமாம்...'' ஏதோ அசட்டுச் சிரிப்புடன் பதில் அளித்துவிட்டு உள்ளே சென்றாள் பார்வதி. இம்முறையாவது தன் குழந்தை தன் அன்பை, எளிய பரிசை ஏற்பாளா? வாசலில் மீனு எதற்காகக் கலகலவென்று சிரித்தாள்? ஒருகால் தன்னைப் பார்த்துத்தான் சிரிக்கிறாளோ? பார்வதி பிரமித்தாள். ஏன்? பதினெட்டு வருஷங்கள் படாத பாடுபட்டுப் பாராதவர் முகத்தைப் பார்த்துக் குறைவின்றி வளர்த்த பெண் ராஜியே அவளைப் பார்த்துச் சிரித்த பின் எதிர் வீட்டு மீனு சிரித்தால் உறைக்குமா? மீனு, ஏதோ நட்பு என்ற பெயரில் பழகி, பெரியவள் என்று ஓரளவு மரியாதை காட்டும் எதிர் வீட்டுப் பெண்தானே!

''பார்வதி அம்மா...'' தபால்காரரின் குரல் கேட்டது.

''இதோ....'' அடிபெயர்த்த பார்வதியின் கால்கள் தயங்கின. அவன் என்ன கொண்டு வந்திருப்பான்? அவன் முகத்தில் ஏன் விழிக்க வேண்டும்? ரசீதாயிருந்தால் விட்டெறிந்து விட்டுப் போகட்டும். பணமாயிருந்தால்...? போன முறை அவர்கூடக் கேட்டுவிட்டார்: 'உனக்குப் பைத்தியமா' என்று. இம்முறை என்ன கேட்பாரோ?

''பார்வதி அம்மா !'' தபால்காரரின் குரல் கருதி எதிரது. பார்வதியின் அற்ப நம்பிக்கை ஆசை தொலைந்து விட்டது. பணம்தான் வந்துவிட்டது! போய், அவன் முகத்தில் விழித்துத்தான் ஆகவேண்டும்...

பணத்தை அவளிடம் நீட்டும்போது தபால்காரர் ஒரு முறை வேதனையில் சுருங்கிய அந்த முகத்தைப் பார்த்தார். சந்தித்த அவரது ஏக்க விழிகளும், அவளுடைய இரக்கப் பார்வையும் பேச்சில் வடிக்க இயலாதவை கதைக் கொட்டின.

''ம்...முருகா..... தாயே பராசக்தி!...'' பணத்துடன் உள்ளே திரும்பிப் பழைய தகரப் பெட்டியைத் திறந்தாள் பார்வதி. மேலாக இருந்த இரண்டொரு பழம் புடவைகளை அகற்றின நடுங்கும் கரங்கள். அதற்கடியில் ஒரு பித்தளைச் செம்பு. அதன் வாயில் மஞ்சள் துணி கட்டியிருந்தது. அதைத் திறந்து ஐந்து ரூபாய் நோட்டைப் போட்டாள். பழைய நோட்டுக்களிடையே புதிய பணமும் புகுந்தது. அவளுக்குத் தெரியும் இதிலிருக்கும் தொகை. இருப்பினும் கைகள் தாமாக நோட்டுக்களை எண்ணி அடுக்கின. வரிசை



யாக மூப்பது நோட்டுக்கள். நூற்றைம்பது ரூபாய்! தீபாவளி, கார்த்திகை, சங்கராந்தி என்று பத்து வருஷங்களாகச் சேரும் பணம் அது. கண்களில் திரையிட்ட நீரைச் சுண்டி விட்டபடி அதனைக் கண்ணோட்டம் விட்டாள் பார்வதி. வீட்டைக் கொஞ்சம் ரிப்பேர் செய்து, கொடியிலிருக்கும் பழம் புடவைகளையும் அகற்றினால் அந்த நூற்றைம்பது ரூபாய் செலவுக்குச் சரியாக இருக்கும். ஆனால் அது அவள் பணமா? தேகத்தின் சதைகளை வியர்வையில் கரைத்து அவள் சம்பாதித்த பணம்தான் அது! ஆனால் அதன் உடைமை மகள் ராஜியினுடையது அல்லவா? ராஜி! அவள் சதையைக் கிழித்துக் கொண்டு வந்தவள். இன்று வேறு ஒருவர் உரிமை! அந்தப் பணம் பார்வதியின் கடமையை நினைவூட்டி ராஜிக்கு வழங்கப்பட்ட உரிமை.

ஆம், ஒவ்வொரு வருஷமும் பண்டிகைகளுக்குத் தாயார் அனுப்புவதும், மகள் மறுப்பதுமாகப் பத்து வருஷங்களாகச் சேர்ந்து விட்ட சொத்தல்லவா அது! அட, பெற்ற மகளைப் பார்த்துப் பத்து வருஷங்களாகிவிட்டனவா? மகள் பெற்றுக் கொண்டால் என்ன? மறுத்தால் என்ன? பெற்றவள் கடமை மகளுடைய மஞ்சள் குங்குமம் வாழ அனுப்ப வேண்டியது. ஆமாடன்....ம்...

மீண்டும் அழுகையைப் பெட்டியில் அடைக்க முயல்வது போல் அதைப் பார்வதி வெடுக்கென்று மூடினாள். ஆனால் நெஞ்சின் நினைவுகளை அப்படி ஒரு செம்பில் போட்டு வாயைக் கட்டிப் பெட்டியில் பூட்டி விட முடியுமானால்...

'ராஜி...ராஜி...' அவள் வாய் முணுமுணுத்தது.

''அம்மா எனக்குக் கல்யாணம் எதற்கு? நான் போய்விட்டால் உனக்குத் துணை யார்? என்னை ஒரு பிள்ளையாக எண்ணிக்கொள். உன் உழைப்பை நிறுத்தி ஓய்வெடுத்துக் கொள். நான் சம்பாதிப்பதில் நாம் இருவரும் வாழலாம்....'' என்று கல்யாணம் நிச்சயம் செய்த அன்றுகூடக் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுத பெண்தானே அவள்?

தொண்டைக் குழியில் துயரம் அடைத்தது. நியாயம்தான்; இன்று அவள் செய்கை ஒரு வகையில் சரியானதே! மணமான பின் தாயை நினைந்துருகினால் முடியுமா? கணவன், குடும்பம் என்று கடமையை உணர்ந்து நடப்பதுதான் விவேகம்! அப்படித் தன்னைத் தானே தேற்றிக் கொண்டாலும் பெற்ற மனத்தின் பேதைமை அகலவில்லையே!

வாசற்புறம் நடக்கலானாள் பார்வதி.. திடீரென்று கால்கள் தள்ளாடின. சுவரைப் பிடித்துக் கொண்டாள். மண் சுவர் ஆதாரம் தந்தது. ஆம், இந்தச் சுவர், இந்த நிழல் அவள் விரும்பிய அதன் ஆதாரம்தானே அவளது ஒரே உறவிடமிருந்து அவளை அன்னியமாக்கியது. தரையைத் தடவினாள் பார்வதி; பல இடங்களில் மண் பெயர்ந்து, கரடு முரடாயிருந்தது. பெற்ற வயிற்றைத் தடவினாள். ஒட்டி உலர்ந்து கிடந்தது. அவள் உடல் சிலிர்த்தது. மண்ணு, பெண்ணு என்று தன்னைத் தவிக்க விட்ட தெய்வத்தை நினைத்தாள். நினைவு குறுகியது.

பத்து வருஷங்களுக்கு முன்...

மார்கழி மாத வைகறையில் வாசல் தெளித்துக்கொண்டிருந்தபோது 'ஜல் ஜல்' என்ற சத்தம் கேட்டது. பஜனைக் கோஷ்டி என்று எண்ணி நிமிர்ந்தவள் எதிரே வந்து நின்றது வண்டி ஒன்று. அதனின்று இறங்கினாள் ராஜி. பார்வதிக்கு ஆனந்தம் தாங்கவில்லை!

''வா...வா....மாப்பிள்ளை வரவில்லையா? இப்போதுதான் உன்னை நினைத்தேன். என் கண்ணு வந்து குதித்துவிட்டாய்...'' ஆசையுடன் பேரக் குழந்தையை வாங்கிக்கொண்டு உள்ளே திரும்பியபோது ஒருபுறம் மகளைக் கண்ட மகிழ்ச்சி துள்ளினாலும், திடீரென்று தன்னந் தனியே வருவானேன் என்ற கேள்வியும் நெஞ்சின் அடியில் எழாமல் இல்லை. வந்தவளை ஏன் வந்தாய் என்று கேட்பது? தானே பிற்பகலில் விஷயம் வெளியாயிற்று.

''அம்மா...!உன் மாப்பிள்ளை சொந்தத்தில் ஒரு ஹோட்டல் வைக்க விரும்புகிறார்..... சின்ன அளவில் ஆரம்பித்தால் கூட ஐந்நூறு ரூபாய் தேவைப்படலாம்...'' மென்று விழுங்கினாள் பெண்.

''ஐந்நூறு?...'' பார்வதி திகைத்தாள். ''ராஜி! என் நிலை தெரியாதா உனக்கு? அம்மா...இன்றையத் தேதியில் ஐந்நூறு அப் பணம் இருக்கிறது....'' என்று கூறிச் சிரிக்க முயன்றாள் அவள்.

''தெரியும் அம்மா.....அப்பளம் இட்டு, பட்சணம் விற்று நாம் நடத்திய ஜீவனத்தில் உன் கையில் காசு இராது என்பது தெரியாதா? ஆனால்....ஆனால்....'' ராஜும் மண் தரையில் விரலால் கீறினாள். சாணம் போட்டு மெழுகிய தரையில் கீற்று விழுந்தது.

''வேறு நான் என்னடி செய்யட்டும்? ஏதோ தெம்பிருந்த வரை உழைத்து உன்னையும் எட்டு வகுப்பு வரை படிக்க வைத்தேன். உன் இஷ்டப்படி வாத்தியாரம்மாவாக்காமல் சக்திக்கு ஏற்றபடி கல்யாணமும் செய்தேன். இனிமேல்... ஏதோ... இருக்கிறபடி இருக்கட்டும். இன்னும் இரண்டு வருஷங்கள் போனால் ஏதாவது முயற்சி செய்யலாம்...'' பார்வதி ஏதோ யோசனையில் ஆழ்ந்தபடியே பதிலளித்தாள். ''ஏன் வேலையில் ஏதாவது தகராறு? போகச் சொல்லிவிட்டார்களா?''

''ஆமாம்... பெரிய வேலை! ஹோட்டல் சர்வர்! அவருக்கு இது பிடிக்கவே யில்லை. அதனால் சொந்தமாக ஏதாவது... நீயும் உதவுவாய் என்றுதான் நினைத்தோம், அம்மா! ஒன்று சொல்லட்டுமா?...'' ராஜியே தயங்கினாள்.

பார்வதிக்குச் சுருக்கென்றது. . வீட்டுக் கூரையைத் தாங்கும் தூணில் சாய்ந்து கொண்டாள்.

''அம்மா...நான் ஒரே குழந்தைதானே?''

''இதென்ன கேள்வி ராஜாத்தி! உன்னை ஒரு வயதுக் குழந்தையாக உன் அப்பா விட்டுச் சென்றது முதல் இந்த உடலில் இருக்கும் உயிரே உன்னுடையது... உனக்காகத் தானே....''

''அப்படியானால் உனக்குப் பின்னால் வருவதை இப்போதே எடுத்துக் கொண்டு உன்னையும் என்னோடு அழைத்துவிட்டால்?''

''நீ என்ன சொல்கிறாய்?''

''அம்மா...! இந்த மண் வீட்டை விற்று விடு... என்னுடன் சென்னைக்கு வந்துவிடு... உனக்கும் ஆதரவு, எனக்கும் துணை. அவருக்கும் பணம்....''

''என்ன...என்ன...?'' பார்வதி அதிர்ந்து போனாள். ''இந்த வீட்டை விற்கவா?—ராஜி,

என் மனசு தெரிந்து பேசுகிறாயா? விற்பதா னால் உன் கல்யாணத்துக்கு ஏன் கடன் வாங்கி னேன்? இன்னும் இரண்டே வருஷங்களில் அக் கடன் முடிந்துவிடும். அதன் பிறகு மறுபடி யும் கடன் வேண்டுமானால் வாங்குகிறேன்... உனக்காக....ஆனால் இந்த வீட்டை என் மூச் சுள்ளவரை விடமாட்டேன் நான். இந்த வீடு...'' பார்வதிக்குப் பேச்சு தடுமாறியது.

''வீடு! பெரிய மாளிகை கெட்டுப்போகி றது...வெறும் களிமண்...இதை நல்ல விலைக்கு வரும்போது விற்கத் தைரியமில்லை...பெரிய சொத்து....'' ராஜி கடுகடுத்தாள்.

பார்வதியின் விழிகள் சிவந்தன....நாடி அடித்தது. ''ராஜி!'' அவள் குரல் சீறியது. ''இன்று பட்டணத்து எலி வளையில் குடி போனவளுக்கு இது 'மண் வீடு' என்று ஏளன மாக இருக்கலாம். ஆனால் இதுதான் என் வீடு! உன் அப்பாவுடன் நான் முதல் அடி எடுத்து வைத்தது இங்குதான். அவருடன் சுகமோ துக்கமோ, இன்பமோ துன்பமோ அனுபவித்தது இந்த வீட்டில்தான். உன்னைப் பெற்றது இந்தத் தாழ்வாரத்தில்தான். கடைசியாக அவர் ஆவி பிரிந்தது இந்த முன் ரேழியில்தான். அதன் பின்னும் நீ வளர்ந்து தவழ்ந்து நான் உன்னை ஆளாக்கியது இந்த மண் தரையில்தான்; இதே குடிசையில்தான். அவர் உயிர் விட்ட இடத்தில்தான் நானும் சாக வேண்டும். இன்று நீ வேறு வீட்டுப் பெண். ஆனால் இந்த வீட்டு எஜமானி நான் தான்...இதுதான் என் வீடு...பிதுரார்ஜித மான ஒரே ஞாபகச் சின்னம்....உன் அப்பா வைத்த ஆஸ்தி!....''

''அம்மா!'' — ராஜி தாயின் முகத்தில் என்ன கண்டாளோ அவள் குரல் கரகரத்தது. ''அம்மா... நீ மறுக்க மாட்டாய் என்ற நம் பிக்கையில் அங்கிருந்து ரிட்டயராகி யிருக்கும் ஒரு பள்ளிக்கூட வாத்தியாரிடம் கூட நம் வீட்டைப் பற்றிப் பேசிவிட்டேன்.... ஐந் நூறு ரூபாய். நான் உன் சொத்து. என் சுகம் உன் மூச்சு என்று எண்ணினேன்...'' அவள் குரலில் 'தர்மசங்கடம்' தெரிந்தது. தாயின் பேச்சு தவறல்ல என்று தெரிந்தும் அவ ளுக்கு மீறிய ஏதோ ஒரு சலுகையை மகள் எதிர்பார்த்தாள்.

பார்வதிக்கும் வேதனையாகத்தான் இருந் தது. ஆனால் ஏனோ வீட்டை விற்க மட்டும் அவள் மனம் ஒப்பவில்லை. அந்த வீட்டைத் தந்தவன் யமனுக்கிரையாகிவிட்டான். அவள் வயிற்றில் பிறந்தவள் வேறொருவனுக்காக அவள் உணர்ச்சிகளை எகிறினள். ஆயினும் அவளுக்கு அந்த மண் மாளிகையின் மீது ஒரு பாசம். ஏன்? தனக்கென ஒரு நிழல், நாலு சுவர்! அது போதும்! அதன் உள்ளே அப்பளம் இட்டுப் பிழைத்தாலும் அடுப்பில் பூனை தூங்கினாலும், பட்டினி கிடந்தாலும், பர மான்னம் புசித்தாலும் கேட்பாரில்லை. நாட் டுப் பற்று, பிறந்த மண் என்றெல்லாம் பேசு கிறவர்களுக்கு அவள் வீட்டுப் பற்று புரியும்!

ராஜி நினைத்தது நடக்கவில்லை. மறு தினமே கிளம்பி விட்டாள் ஆத்திரத்துடன். பார்வதியின் வயிற்றில் பத்து மாதங்கள் குடி யிருந்தவளுக்குத் தாயார் தனக்கென இருக் கச் 'சாண் இடம்' கேட்பது பிடிக்கவில்லை.

''சங்கராந்தி வருகிறது...'' புறப்பட்ட மகளிடம் ஒரு ஐந்து ரூபாய் நோட்டைப் பார்வதி நீட்டியபோது ராஜி 'வெடுக்'கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''இந்தப் பிச்சைக் காசு எனக்குத் தேவை இல்லை. உன் பணத்தையும் நீயே கட்டிக் கொண்டு போ....''

''ராஜி....'' பார்வதிக்குக் கிடுகிடென்று உடல் பதறியது. ''ராஜி, வேண்டாம் என்று மறுக்காதே. வெறும் காசு என்று பார்த்தால் இது குறைவுதான். ஆனால் அதன் குறிக்கோள் — பிறந்த வீட்டிலிருந்து 'மஞ்சள் குங்குமம் என்றும் வாழ்க' என்று பெண்ணுக்கு விடும் ஆசி இது. இதை மறுக் காதே. வேண்டாம் என்று....'' அன்னையின் குரல் கம்மியது. ஆனால்....ஆனால்...

'உன்னை விட்டுப் பிரிய மாட்டேன்' என்று கழுத்தைக் கட்டிக் கொண்டு கணவனோடு புறப்படும்போதுகூட அழுத மகள் இன்று அந்தத் தாயின் கண்ணீரைக்கூடத் துடைக் காமல், அன்பை, ஆசியை உதைத்துச் சென்று விட்டாள். தட்டில் பசு மஞ்சள் குங்குமத் திடையே படபடத்த ரூபாய் நோட்டு சிரித் தது. மகள் மறுத்த முதல் முறை அது! மஞ்சள் குங்குமத்தின் ஆசி வேண்டாமா, தேவையற்றதா?

பதினெட்டு வயது யுவதியாகப் பச்சைக் குழந்தையைக் கையில் ஏந்தியபோது அந்த மஞ்சள் குங்குமத்தை இழந்த பார்வதிக் கல்லவா தெரியும் அதன் மகிமை? ஏழைக் கணவனானாலும் இழைந்து வாழ்வது எத்தனை கௌரவம் என்பது அந்தக் குழந்தையுடன் அத்தை என்றும், பாட்டி என்றும்,' சித்தி என்றும் வீடு வீடாக ஏறி, அலைக்கழிந்து அவஸ்தைப்பட்ட அவளுக்கல்லவா தெரியும்?

அதன் பின் 'மகராசியாக இரு' என்று மனதார அவளை வாழ்த்தியவர் உண்டா? மஞ்சளின் பசுமையையும், குங்குமத்தின் கம்பீர ஒளியையும் அவள் உடல் ஸ்பரிசித்த துண்டா? 'இந்தா' என்று அதை மலர்ந்த முகத்துடன் அவளிடம் நீட்டியவர் யார்? அந்த மஞ்சளைத் தாய் தன் மகளாவது அதைச் சாகும் வரையில் இழக்காது சகல மங்கலத்துடன் வாழவேண்டும் என்று தந்த ஆசியை—பெற்ற மகள் உதறிவிட்டாள். அவளைச் சுமந்த வயிறு துடித்தது!

''கடவுளே! அவள் குழந்தை. அறியாமல் செய்து விட்டாள். மன்னித்துவிடு! பாக்ய லட்சுமி! அதற்காக என் குழந்தையைக் கை விடாதே. என் குழந்தை இந்தப் பாவியைப் பற்றி நினைக்காமலே எங்காவது நன்றாக இருக்கட்டும். மஞ்சள் குங்குமத்துடன் மணாள னோடு வாழட்டும்!...'' பெற்ற மனத்தின் புலம்பலோடு முதல் நோட்டு மஞ்சள் துணி கட்டிய சொம்பில் புகுந்தது. அதன் பின் ஒன்று ... இரண்டு ... பத்து .... இருபது... முப்பது...! அவளும் அலுக்காமல் ஆவலுடன் அனுப்பினாள். மகளும் மதிக்காமல் மறுதளித் தாள். பெற்ற மகள்தான்! ஆனால் அவளைப் பொறுத்தவரை தாயற்றவளாகி விட்டாள்.

'எம்மா...வைத்தியம்மா நிதீ நீயும் அனுப் பிக்கிட்டே இருக்கே. அந்தப் புத்தி கெட்ட பொண்ணும் திருப்பிக்கிட்டே இருக்கு!...'' என்று தபால்காரர் பழனி சகஜ பாவத் தில் கேட்டால்தான் என்ன?

''என் மாமி, ராஜி பத்து வருஷமா இந்தப் பக்கமே வரவில்லையே!'' என்று மீனுக்குட்டி விசாரித்தால்தான் என்ன?

அதன் பின் யாரோ சொன்னார்கள். மருமகன் சொந்த தோட்டம் ஆரம்பித்துச் சுமாராகவும் நடக்கிறதாம். போகட்டும். பார்வதிக்குத் திருப்திதான். அவள் பெண் மனமொத்து, கணவனுடன் வாழ்ந்தால் சரி...

ரிப்பேர் செய்யாமல் விட்ட வீட்டின் பாகங்கள் உள்ளூற உளுத்துப் போயின. பெயருக்குக் கூரை நின்றது போல்தான் பார்வதியும் நடமாடினாள். உள்ளூற அரித்த ஏக்கம் அவளை ஒரு நாள் கீழே தள்ளிவிட்டது. மூன் அறை ரேழியில் தன் படுக்கையை விரித்த அன்றே தலைக்கு மேலிருந்த பூவரசன் கட்டை உளுத்துப் போய் விட்டது அவளுக்குப் புரிந்தது. இருந்தாலும் அது அவள் கணவன் உயிர் விட்ட இடம். அதுவரை அந்தக் கூரை — அவள் மூச்சுப் பிரியும் வரை — தாங்கினால் பின் பட்டணத்துப் பெண் ராஜி பாடு! பின் வீட்டைக் கல் வீடாக்கலாம் அவள்!

'மாமி... உங்கள் பெண்ணுக்குத் தந்தி கொடுத்திருக்கிறது. கவலைப்படாதீர்கள்.'' படுக்கையில் துவண்டு கிடந்த பார்வதியின் அருகே நின்றாள் மீனுக்குட்டி. ''அவனுடன் நீங்களும் பட்டணம் போவதுதான் நல்லது. மாமி இனிமேல்...இன்று வருவான் அவன்..''

''ம்...'' பார்வதி தலையசைத்தாள். ஆனால் ராஜியா வருவாள்? அவளைப் பொறுத்தவரை வீட்டோடு உறவும் போய்விட்டதே! ஆனாலும் ஒருகால் தாயின் துடிப்பு அவளுக்குக் கேட்குமோ! பெற்ற மனம் பித்துத்தான்!

'ஏன் இப்போது ஓடி வந்தாலும் வருவாள் ராஜி. தாய்க்குப் பின் இந்த வீடு... இந்த மண்.... அதற்கு உரிமையைப் பெறவாவது வருவாள்... சே.... தன் குழந்தையைத் தானே தவறாக நினைப்பதா?...இப்படி அனாதையாகச் சாகத்தான் அன்று மகள் அழைத்தபோது போக மறுத்தாளோ! அப்படியானால் கேவலம் இந்த மண்ணுக்காக அந்தப் பெற்ற மனம் மட்டும் கல்லாக இல்லையா?....' எண்ணங்களின் குழப்பத்தில் பார்வதியின் புலன்கள் சோர்ந்தன.

''வா ராஜி...இப்போதாவது வந்தாயே?'' மீனுக் குட்டியின் குரல் கேட்டது.

பார்வதி பிரயாசையுடன் கண்களைத் திறந்தாள்.

''வராமல் என்ன செய்வது? நாளைக்கு ஏதாவது நடந்தால் வீட்டு காரியத்தை நடத்தும்? உரிய மனிதர்கள்தான் செய்வார்கள்.'' பெண்ணின் பதிலா அது!

பார்வதியின் நெஞ்சில் நெருப்பை வைத்தாற்போல் இருந்தது. ''ராஜி...'' அவள் குரல் தழுதழுத்தது.

''என்னம்மா....'' பரவாயில்லை. குரலில் கடுமை சற்றுக் குறைந்திருந்தது. தாயின் அருகே வந்து நின்றாள். அவள் முகத்தைப் பஞ்சடைந்த விழிகளால் பார்த்தாள் பார்வதி. மஞ்சள் பொலிவும், பளிச்சென்ற தாலியும் குங்குமமும் அம் முகத்தில் ஒளி வீசின. இடுப்பில் பளிச்சென்று புடவை. உடம்பு சற்றுப் பூரித்துப் போயிருந்தது. தாய் மனம் நிறைந்தது. அது போதும் அவளுக்கு. ''ராஜி, பெட்டியில் ஒரு செம்பில்....'' குரல் குழைந்தது.

ராஜி ஆவலாக அதைத் திறந்தாள். 'ஆ...! இது என்ன.... நூற்று அறுபது ரூபாய்!'

''உன் கடைசிக் கிரியைக்காகச் சேர்த்தாயா அம்மா.... பேஷ்...பெண்ணுக்குத் தரத்தான் மனம் இல்லே. அதற்காகப் பெண் உனக்குச் செய்யாது விடமாட்டேன்...... எனக்கு உபயோகமின்றி இப்படிச் சேர்க்க எப்படி முடிந்தது அம்மா?'' பெண்ணின் குரல் பெட்டியைத் திறந்த பாம்பு போல் சீறியது!

''ராஜி!... அடிப்....' பார்வதி பொங்கும் இதயத்தில் எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டாள். கடைசி நிமிஷத்தில் கூடக் கோபமாக மகளைப் 'பாவி' என்று திட்ட அவளுக்கு மனமில்லை. அவள் பத்து வருஷங்களாகக் காத்த தவம், மகளை வாழ்த்துவது ஒன்றே குறியாகக் கொண்ட தாய்மை பங்கப்பட்டுவிடுமே என்ற பயமா! ''ராஜி... அசடு... என்னவெல்லாம் பேசுகிறாய்! அது உன் பணம்தானடீ... உனக்காகச் சேர்த்த பணம்.'' பார்வதி இதயம் விம்மியது. கண்கள் கரித்தன.

''ஐயோ பாவம்! நீ தரும் வரை நான் ஏங்கிக் கொண்டிருக்கவில்லை. எங்கள் முயற்சியினால் நாங்கள் கால் ஊன்றிவிட்டோம். வீடு உனக்கு மிஞ்சிவிட்டது. திருப்திதானே? ஆனால் ஒன்று தன் கையே தனக்கு உதவி என்று போதித்த உனக்கு நாங்கள் கடமைப் பட்டவர்கள்தான்...''


''ஐயோ மகளே! ''பார்வதி அலறினாள். ''உன் பணம் என்றும் உனக்காக. நான் பிரார்த்தனையாக நேர்ந்து கொண்ட பணம். மஞ்சள் குங்குமப் பணத்தைத் திருப்பி அனுப்பினேன். ஆனால் என் மனம் கலங்கியது. சத்தியத்துக்குத் தூய அன்புக்குப் பயப்படாத உன் அசட்டுத் துணிவைக் கண்டு! அதனால் அந்தப் பணத்தை அப்படியே முடிந்து வைத்துவிட்டேன் இந்த ஊர் அம்மனுக்கு. அவள்தான் உன் மஞ்சள் பாக்கியத்தைக் காக்க வேண்டும் என்று. எந்த ஆபத்திலும் அதைத் தொடவில்லை நான். என் கண்ணெதிரே, ஏன் இறந்த பின்னும் உனக்கு அந்தக் கோலம் வரக் கூடாது என்று வேண்டினேன். அது உன் பெயரில் உன் மங்களத்துக்காக இறைவனுக்குக் கட்டணப் பணம். அதைக் கொண்டு நம் ஊர் அம்மனுக்கு நீ என் மீது மனம் மாறிவரும் போது உன் கையால் திருமங்கல்யம் செய்து போட நினைத்தேன். என் கண்ணெதிரே, என்னை அலட்சியம் செய்தாலும் இன்று நீ தலை நிமிர்ந்து நிற்பது .... ஆ .... பராசக்தி'' பார்வதி மார்பை அமுக்கினாள் ஒரு கணம். மரண அமைதி அங்கே நிலவியது.

''அம்மா...'' படீரென்று ராஜியின் இதயத்திலிருந்து வெடித்தது குரல். ''அம்மா... என்னை மன்னித்துவிடு... உன்னைப் புண்படுத்திவிட்டேன். ஆனாலும் உன் ஆசி என்னை என்றும் வாழ வைத்து விட்டது அம்மா. அதனால்தான் தாய் தெய்வமானாள். அதைப் புரிந்து கொள்ளவில்லையே நான்... அம்மா என்னைப் பாரேன்...''

அணையும் விளக்கு ஒரு முறை சுடர் விட்டது! அவளது கண்களில் மகள் கழுத்தில் மின்னிய சரடும், நெற்றியில் ஒளி வீசிய குங்குமமும் பளிச்சென்று ஜோதியாகக் கடைசி முறையாகத் தெரிந்தது.


வனப்பூட்டும்,
மேனிக்கு
மென்மை தரும்,
சுகந்தம் வற்றாது
எழிலூட்டி
இன்பம் தரும்
“கோகுல்”
ஸான்டால்
டாய்லெட் பவுடர்
GOKUL
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
டி. எஸ். ஆர். & கோ., மதராஸ்.


சந்திரனே சாட்சி
7
கதை
கௌசிகன்
சித்திரம்
விஜு-
அதோ அதுதான் சிவகாமி அம்மாவோட வீடு. நான் கூட இங்கேயே இறங்கிக்கிடறேன். எனக்கு இந்தப் பக்கமாகக் கொஞ்சம் ஜோலி இருக்கு.
பெரியவருக்கு எங்கனாலே சிரமம்.
வணக்கம்... போய் வாங்க.
அதெல்லாமில்லே. சிவகாமியம்மாவோட வீடு அடுத்த தெருவுக்கு அடுத்த தெருவிலே தான். அப்ப நான் உத்தரவு வாங்கிக்கவா!
என்ன சந்துரு, சிவகாமியைச் சந்திக்கலாமா?
சந்திக்காமல்? இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கியமான பேர்வழியாயிற்றே.
வணக்கம், நீங்கள் தானே சிவகாமி அவர்கள்!
ஆமாம். ஆனால் உங்களைத் தெரியவில்லையே.
தெரிந்திருக்க முடியாதுதான். நாங்கள் வெளியூர்!.
சேகரும் சந்துருவும் தங்களை இன்னார் என்று காட்டிக் கொள்ளாமலே பேச்சை வளர்க்கிறார்கள்.
எல்லோரும் மறந்து விட்ட ஒரு விஷயத்தில் இத்தனை வருஷங்களுக்குப் பிறகு நீங்கள் அக்கறை காட்டுவது வியப்பாக இருக்கிறது.
எத்தனை வருஷமானாலும் மறக்கக் கூடிய வழக்கில்லையே இது. ராஜகோபாலனை நீங்கள் மறந்து விட்டீர்களா? இல்லையே.


ராஜநாதனின் இந்த முடிவுக்குப் பிறகு நீங்கள் ஏன் தனபாலை மணந்து கொண்டிருக்கக் கூடாது?
தனபாலைக் காணும் போதெல்லாம் எனக்கு, நீதி மன்றத்திலே நிராதரவாக நின்றாரே ராஜு, அந்தக் காட்சிதான் கண்முன்னால் வந்து நிற்கிறது. அந்த நினைவோடு என்னால் எப்படித் தனபாலோடு வாழ முடியும்!
தாங்கள் தனபாலை நிராகரித்ததற்கு இது மட்டும் காரணமல்ல என்று நினைக்கிறேன்.
நீங்கள் என் அந்தரங்கத்தை அறிய விரும்புகிறீர்கள்.
என்றைக்காவது யாரிடமாவது அதைச் சொல்லத்தானே வேண்டும்!
ராஜு குற்றவாளியாக்கப்பட்டதில் ஏதோ மர்மமிருக்கிறது - அதில் தனபாலுக்கும் பங்குண்டு என்ற ஒரு எண்ணம் என் அடி மனத்தில் உறுத்திக் கொண்டே இருக்கிறது. ஏன், எப்படி, எதனால் என்று இனம் புரிந்து கொள்ள முடியாத ஒரு எண்ணம்.
ஆரம்பத்தில் இந்த எண்ணம் உங்களுக்கு ஏற்படவில்லையா!
ஏற்பட்டிருந்தால் ஏன் ராஜுவை நான் இழந்திருப்பேன்? என்னைப் போலவே அவரும் அவசரப்பட்டுச் சிறையிலிருந்து தப்பிச் சென்று விட்டதால், என் எண்ணங்களைச் செயல்படுத்த முடியாமலேயே போய்விட்டது.
ஆரம்பகாலத்தில் நீங்கள் நினைத்ததுபோல தனபால் நேர்மையானவனில்லை என்பதை எப்போது அறிந்தீர்கள்?
எப்போது, எப்படி என்பதை எல்லாம் என்னால் சொல்ல முடியாது. சந்தேகம் தோன்றும் வரை நான் எந்த விஷயத்தையும் உன்னிப்பாகக் கவனிப்பதில்லையே.
அப்படிக் கவனிக்க நேர்ந்த போது?
நீங்கள் வக்கீலைப் போலக் கேள்விகளைப் போட்டு என்னிடமிருந்து விஷயங்களை அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறீர்களே!
உங்களைப் போலவே மறைந்த ராஜநாதனிடம் எனக்கும் அது தாபமிருப்பதனால்தான்!


இப்போது தனபால் இவ்வூரில் நல்ல செல்வாக்குடன் வாழ்ந்து வருவதாகக் கேள்விப்பட்டோம்.
செல்வத்தில் வாழ்வதாக என்று நினைக்கிறீர்கள். அதுவும் பிறர் வாழவேண்டிய வாழ்க்கையைத் தனதாக்கிக் கொண்டு. அது அவன் உடலோடு பிறந்த ஒன்று.
அப்படியென்றால்?
ஆதியில் எந்த நல்லவனின் வாழ்வைப் பாழாக்கினானோ அந்த நல்லவனுடைய தங்கையின் வாழ்வையும் இப்போது சூறையாடி விட்டு வாழுகிறான்.
எங்களுக்கு ஒன்றும் விளங்க வில்லையே. விவரமாகச் சொல்ல முடியுமா?
சட்டென்று சிவகாமியின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது.
நீங்கள் என்னை அதிகம் பேச வைத்து விட்டீர்கள். வாழ்க்கையில் ஒரு தடவை இப்படிப் பேசியதன் பலனை அனுபவித்துக் கொண்டிருப்பவள் நான். இதற்கு மேல் எதுவும் என்னால் சொல்ல முடியாது. மன்னிக்கவும்!
உங்கள் பேச்சிலே பிறருக்கு நன்மை பயக்கும் என்றால் மறுபடி மனம் விட்டுப் பேசுவீர்களல்லவா!
பார்க்கலாம்
அப்படியொரு சந்தர்ப்பம் சீக்கிரம் வருமென்று நினைக்கிறேன்.
என்ன சந்துரு, இனி அடுத்தபடி?
முதலில் தனபாலைச் சந்திக்க வேண்டியது தான்...
இப்படித்தான் கடைத்தெருவில் புழுதியில் உட்கார்ந்து விளையாடுவார்களா? உன் வீடு எது? அம்மா எங்கே?
அதோ அது தான் என் வீடு.
பையா உன் பெயரென்ன
என் பேர் பாபு.
அம்மா, குழந்தையை இப்படித்தான் தெருவில் விளையாட விடுவார்களா?
எப்படி என் குழந்தை விளையாட வேண்டுமென்று எனக்குத் தெரியும். நீங்கள் போகலாம். சனியனே... வா உள்ளே!
சேகர் மேலே பேச வேண்டாம். வா, நாம் போகலாம்.
என்ன சொல்கிறீர்கள்?

பொன் விலங்கு


நான்காவது அத்தியாயம்

ஆகாசத்திலிருந்து சுருள் சுருளாக மேலெழும் இளம் புகை அலைகளைப் போல் மேகங்கள் சரிந்து சோரும் மலைகளினிடையே பஸ்ஸில் பயணம் செய்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி. பள்ளத்தாக்கை விட்டு மலை மேல் ஏறிவிட்ட பஸ்ஸிலிருந்து திரையை விலக்கிக் கீழே பின்புறம் திரும்பிப் பார்த்தபோது, 'இந்த அரிய பொருளைக் கொண்டு வந்து வைப்பதற்கு இடம் இது தான்' என்று அந்த இடத்தைத் தேடிக் கொண்டு வந்து வைத்த அருமையாய் மல்லிகைப் பந்தல் ஊர் மழையில் மங்கித் தெரிவதைச் சத்தியமூர்த்தி கண்டான். வடிவமாகப் பின்தங்கி விட்டாலும் எண்ணமாக மனத்தில் நிலைத்துவிடுகிற சில அழகிய ஞாபகங்களைப் போல் மல்லிகைப் பந்தல் என்ற அழகு சத்தியமூர்த்தியின் கண்களிலிருந்து மறைந்து கருத்தில் தெரியத் தொடங்கியது. அந்த ஊரிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து செல்லும்போது தான் மறுபடியும் அங்கு வந்துவிட வேண்டுமென்ற ஞாபகம் அவனுடைய மனத்தில் ஆழமாகப் பதிந்தது. வாழ்வின் நிலையான பாசங்கள் எல்லாம் அவற்றை விட்டுப் பிரிந்து செல்லும்போதே அவற்றின் நெருக்கமும் உறவும் புலப்படும்படி இருக்கும். தன் மனத்துக்கு மல்லிகைப் பந்தல் என்ற மலை நாட்டு நகரத்தின் மேல் எவ்வளவு மோகம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அங்கிருந்து பிரிந்து செல்லும்போதுதான் சத்தியமூர்த்தியால் உணர முடிந்தது. மனத்தில் நிலைக்கும்படியான நிரந்தரமான சந்திப்புக்கள் எல்லாம் மகிழ்ச்சியில் தொடங்கி ஏக்கத்தில் முடிவதை அநுபவத்தில் பல முறை உணர்ந்திருக்கிறான் அவன். பஸ்ஸில் திரும்பி வந்து கொண்டிருந்தபோது மல்லிகைப் பந்தலில் அந்தச் சில மணி நேரங்களுக்குள் நடந்தவற்றை அவன் ஒவ்வொன்றாக நினைக்கத் தொடங்கினான். அப்படித் தொடங்கிய நினைப்பு மிக நளினமானதொரு பகுதியில் வந்து நிறைந்தது.

மல்லிகைப் பந்தலில் இருந்து பஸ் புறப்படுவதற்கு முன் பாரதி சுட்டிக் காட்டிய ஈரச் செம்மண் நிலமும் அதைச் சுட்டிக் காண்பித்தபோது புதிய உணர்வோடு தெரிந்த அவள் முகமும் சத்திய



மணிவண்ணன்



...ந்தியின் நினைவில் சுற்றிச் சுற்றி வந்தன. வாய் திறந்து சொற்களால் பேச முடிவதை விட அதிகமான நயமும் பொருளும், தந்து பேசுவதைப் போல் ஒலித்த அவள் கைகளின் வளை ஒலி இன்னும் அவன் செவிகளில் கேட்டுக் கொண்டே யிருந்தது. கம்மென்று நறுமணம் பரப்பி நாசி யையும் இதயத்தையும் நிறைத்த அந்த மல்லிகைப் பூக்களின் வாசனையை இன்னும் அவனால் மறக்க முடிய வில்லை. அவனுக்கு இருபுறமும் பஸ்ஸில் உட்கார்ந் திருந்தவர்கள் யாரோ தேயிலைத் தோட்டத்துக் கங்காணிகள் போல் தோன்றினார்கள். 'சதக் சதக்' என்று வெட்டப்படும் கொலைச் செய்திகளும் சினிமா நட்சத்திரங் களைப் பற்றிய பரபரப்பூட்டக்கூடிய விவரங்களும் அடங்கிய தினப் பத்தி ரிகை ஒன்றைப் படித்து ஒரு கங் காணி இன்னொரு கங்காணிக்குச்



சொல்லிக் கொண்டிருந்தான். அந்தச் செய்தித் தாளின் பக்கங்களில் நடந்திருந்த கொலைகளைவிட அதைப் படித்துக் கொண்டிருந்தவன் செய்கிற கொலைக்காக மிகுந்த வேதனைப்பட்டான் சத்தியமூர்த்தி. திரு. வி. க.வும், திலகரும் பத்திரிகை நடத்திய நாட்டில் மையை மெழுகிக் காகிதம் விற்பார் சிலரும், பொய்யை மெழுகிக் காகிதம் விற்பார் சிலருமாகப் புனிதமானதொரு பணியை வியாபாரமாக நடத்துகிறவர்கள் பெருகியிருப்பதை எண்ணியபோது மிகவும் வருந்தினான் அவன்.

அன்று மாலையில் பஸ்ஸிலிருந்து இறங்கி ஊர் திரும்பும் இரயிலுக்காக அவன் மல்லிகைப் பந்தல் ரோடு ரயில் நிலயத்துக்குள் நுழைந்த போது நன்றாக இருட்டத் தொடங்கி விட்டது. ஒன்பதரை மணிக்கோ, பத்து மணிக்கோ எல்லா நிலயங்களிலும் நின்று நின்று போகிற பிரயாணிகள் வண்டி ஒன்று உண்டு. அதில் புறப்பட்டால் இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் எப்போதாவது மதுரை போய்ச் சேரலாம். புறப்படுகிற நேரமும் உறுதியில்லாமல் போய்ச் சேருகிற நேரமும் உறுதியில்லாமல் இந்தத் தேசத்துச் சராசரி மனிதர்களின் வாழ்க்கை இலட்சியத்தைப் போல் நிச்சயமில்லாத இரயில்' அது. அதை எதிர்பார்த்து அந்தக் குளிரிலும் இருட்டிலும் அங்கே காத்திருந்த பலரோடு இப்போது சத்தியமூர்த்தியும் சேர்ந்து கொண்டான். தனியே எதிர்பார்த்துக் காத்திராமல் பலரோடு சேர்ந்து அந்தப் பலரில் ஒருவனாக ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருப்பதில் இரண்டுவிதமான சுவாரஸ்யங்கள் உண்டு. தன்னுடைய ஆவல் ஒன்று, — தன்னைப் போன்ற பலருடைய மொத்தமான ஆவல் மற்றொன்று. தன்னுடைய ஆவலைத் தானே உணர்ந்து கொண்டு, மற்றவர்களுடைய ஆவலைப் புரிந்து அனுபவிப்பதில் சுவாரஸ்யம் இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா?

முதல் நாள் மல்லிகைப் பந்தலுக்கு வந்து விட்டு இன்று அங்கிருந்து திரும்பும் இந்த இரண்டு நாட்களுக்குள்ளேயே நீண்ட காலமாகத் தான் அலைந்து பயணம் செய்தே தன் நாட்களை எல்லாம் கழித்துவிட்டது போல ஒரு பிரமை எப்படித் தனக்கு ஏற்பட்டதென்று சத்தியமூர்த்திக்கே புரியவில்லை. பயணம் செய்துவிட்டுத் திரும்பும் ஒவ்வொரு முறையும் இந்த அநுபவத்தை அவன் அடைந்திருக்கிறான். வேலை கிடைத்து மல்லிகைப் பந்தலுக்கே வந்து விட்டால் போவதும் வருவதுமாக இப்படிப் பல முறை அந்த இரயில் நிலயத்தில் தான் காத்திருக்க நேரிடும் என்ற நினைப்பு ஏற்பட்டது அவனுக்கு. அதே சமயத்தில் கல்லூரி அதிபர் பூபதி அந்த வேலையைத் தனக்குத் தருவாரா என்ற சிறிய சந்தேகமும் வந்தது. கடைசியாக அவர் தன்னிடம் பேசிய பேச்சிலிருந்தும், தனக்கு விடை கொடுக்கும்போது மனம் விட்டு எதுவும் பேசாமல் அழுத்தமாக விடை கொடுத்ததிலிருந்தும், தன் இளமையை எண்ணி அவர் தயங்குகிறாரோ என்று தோன்றியது சத்தியமூர்த்திக்கு.

பொன்மொழி

> நாம் தேடிக் கண்டுபிடிக்க முடியாத அல்லது விரும்பாத பல இடங்களில் வாழ்க்கையின் மிக மென்மையான குணங்கள் அமைந்திருந்து அவை பிறருக்குத் தெரியாமலே போய் விடுகிற சமுதாய நஷ்டத்தை என்னென்பது?

விட்டை விட்டு ஊரை விட்டு வெளியேறி வந்திருந்ததனால் குடும்பத்தின் எதிர்காலத்தைப் பற்றிய பிரச்னைகளும், வீட்டுக் கவலைகளும் மனத்தின் அடிமூலையில் முறிந்த முள்ளைப் போல் உடனடியாக வலியில்லாமல் தங்கிப் போயிருப்பதை அவன் உணர்ந்தான். 'எந்த விதமான செளகரியங்களும் இல்லாத மத்தியதரக் குடும்பத்தில் இரண்டு தங்கைகளுக்கு மூத்தவனாகப் பிறந்துவிடுகிற ஆண் பிள்ளை, தன் பொறுப்புக்களையும், தான் வாழ வேண்டிய வழியையும் மிக விரைவில் தீர்மானம் செய்கிறவனாக இருக்க வேண்டும். பின்னால் யாரோ கன வேகமாகத் துரத்திக் கொண்டிருப்பதுபோல் ஓடி ஓடி முயன்று வாழ வேண்டும் அவன். இப்படிப்பட்ட குடும்பத்தில் மூத்தவனாகப் பிறந்துவிடுகிறவனுக்கு ஒவ்வொரு நாள் பொழுது விடிவதும் ஒரு பிரச்னைதான். ஒவ்வொரு நாளும் அவன் கைகளை எதிர்பார்த்து நிற்கிற பல தேவைகளும், வறுமைகளும் காத்திருக்கும். இதை எண்ணியபோது தான் படித்திருந்த திருக்குறள் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது சத்தியமூர்த்திக்கு.

"இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு"

வறுமையால் நாள் தவறாமல் துன்புற்றுக் கொண்டிருக்கிற ஒருவன் தன் வாழ்வில் ஒவ்வொரு நாளும் விடிகிற

உங்கள் கூந்தலின் உண்மை அழகை வெளிப்படுத்த

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் உபயோகியுங்கள்




உங்களுக்குப் பிடித்தமான
கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும்,
கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத்
தவறாமல் தேய்த்து வருவது
கூந்தல் அடர்த்தியாக அழகுடன்
வளர்வதற்கு இன்றியமையாதது!

தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்காலிலும், கேசத்திலும் தேய்த்துக் கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகிவிட்டது. இவ்வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.



எல்லோரும் அதிசயிக்கும்
வண்ணம் உங்கள் கூந்தலின்
உண்மையழகை வெளிப்படுத்த
கால்கேட் உதவுகிறது.





மகிழ்ச்சிதரும் நறுமணம்
உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்

CCRO-G-4.TAM



போது. ''நேற்று என்னைக் கொன்று வாட்டினாற் போன்ற வறுமை இன்றும் வருமோ?'' என்ற கவலையோடு விடிவதாகப் பாவித்துக் கேட்பதாய் இந்தக் குறளைப் பாடியிருக்கிறார் வள்ளுவர். நாளைக்குப் பொழுது விடிகிற போது தன்னுடைய இதயத்திலும் இப்படி ஒரு கேள்வி பூதாகாரமாக எழும் என்பது சத்தியமூர்த்திக்குப் புரிந்து தான் இருந்தது. கால்நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாக ஆரம்பப் பள்ளி ஆசிரியராகப் பணி புரிந்து ஓய்வுபெற்று விட்ட ஒரு தந்தை தன் குடும்பத்துக்குத் தேவைகளையும், வறுமைகளையும் தவிர வேறு எதை அதிகமாகச் சேர்த்து வைக்க முடியும்? அத்தனை வறுமைக்கும் நடுவே சத்தியமூர்த்தி கல்லூரிப் படிப்புப் படித்து மீண்டதே அந்தக் குடும்பத்தின் மிகப் பெரிய சாதனை. பலருடைய உதவிகளும், கல்லூரியில் கிடைத்த 'ஸ்காலர்ஷிப்' வசதிகளும் தான் அவன் தன்னுடைய கல்லூரிப் படிப்பை நடுவில் நிறுத்த நேரிடாமல் தொடர்ந்து கற்று முடிக்கத் துணையாயிருந்தன. மத்தியதரக் குடும்பத்துப் பெற்றோர் பலர் சாதாரணமாக எதிர்பார்ப்பதுபோல் அவன் பி.காம் படித்து சார்ட்டர்ட் அக்கௌண்ட், காஸ்ட் அக்கௌண்டன்ஸி போன்ற துறைகளில் தேர்ந்து பெரிய ஆடிட்டராகிப் பணம் குவிக்க வேண்டும் என்றுதான் அவன் தந்தையும் எதிர்பார்த்தார். அவன் தமிழில் மோகமுற்றுத் தமிழ் ஆனர்ஸ் தேறி எம். ஏ. ஆகி இப்படிக் கல்லூரி விரிவுரையாளனாகப் போக நேரும் என்று அவர் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை. அதில் அவருக்கு ஏற்பட்ட வருத்தமும் ஏமாற்றமும் அதிகம்தான். ஆயினும் உடம்பாலும், மனத்தாலும், தன்னை மீறி வளர்ந்து விட்ட பிள்ளையை என்ன சொல்லி எப்படித் தடுப்பதென்று தோன்றாமல் 'அவன் போக்குப்படியே போகட்டும்' என்று விட்டு விட்டார். ஆசிரியர் தொழிலில் தான் இருந்து பட்ட துன்பங்களை எண்ணி எண்ணித் தன் பிள்ளையாவது அந்தத் தொழில் பக்கம் தலை வைத்துப் படுக்காமல் இருக்க வேண்டும் என்று அந்த ஏழைத் தந்தை கவலைப்பட்டதெல்லாம் வீணாகப் போயிற்று.


''சத்யம்! நீயாவது இந்த 'டாணா' உத்தியோகத்துக்கு வந்து சேராமல் நல்ல உத்தியோகமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏணியைப் போல் நீ சார்த்திய இடத்திலேயே சார்த்திக் கிடக்க உன்னைக் கற்பிப்பவனைக் கொண்டு பலர் மேலே ஏறிப் போவதைப் பார்க்கும் வயிறெரிகிற தொழில் இது'' என்று தந்தை ஏமாற்றத்தோடு கூறிய பல வேளைகளில் அதைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டு சிரித்து விட்டுப் பதில் பேசாமல் போயிருக்கிறான் சத்தியமூர்த்தி. அப்படி எல்லாம் அவர் அந்தத் தொழிலை வெறுத்துப் பேசியிருந்தும்கூட நேற்று அவன் மல்லிகைப் பந்தலுக்குப் புறப்படுவதற்கு முன்பு, ''சத்யம்! குடும்பத்தை இன்னும் உன்னை எதிர்பார்த்துத் தவிக்கவிடாதே அப்பா! உத்தியோகத்தைத் தேர்ந்தெடுப்பதில் தான் பிடிவாதமாக இருந்து விட்டாய். உத்தியோகத்துக்குப் போவதற்கு இன்னும் நீ தாமதம் செய்தால் தண்ணீரில் ஓட்டைப் படகைப் போல் தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்தக் குடும்பம் நிச்சயமாகத் தாங்காது. இண்டர்வியூவை வெற்றிகரமாக முடித்து விட்டு 'ஆர்டரை'க் கையில் வாங்கிக் கொண்டு வந்து சேர்வதற்கு முயற்சி செய்'' என்று பாதி ஆர்வமும் பாதி நைப்பாசையுமாகச் சொல்லியனுப்பியிருந்தார்.

இரயிலிலிருந்து இறங்கி நேரே வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினால் அந்த அகால நேரத்துக்கும் விழித்திருந்து எழுந்து வந்து கதவைத் திறக்கக் கூடியவர் அப்பாதான். கதவைத் திறந்து விட்டுத் தன்னை எதிரே பார்த்தவுடன், ''ஏண்டா, இண்டர்வியூ என்ன ஆயிற்று?'' என்று ஆவலோடு கேட்கப் போகிற அவருக்கு நம்பிக்கை அளிக்கும் படியாக அப்போது தான் என்ன பதிலைச் சொல்ல முடியும் என்பதைச் சத்தியமூர்த்தி சிந்தித்தான். உடனடியாக நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தரப் போகிற செய்தியைத் தன்னிடமிருந்து தந்தை எதிர்பார்ப்பது தவறில்லை என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். அப்பாவைப் போல் வாழ்வில் ஏமாற்றங்களையும், துயரங்களையும் அதிகமாகச் சந்தித்தவர் இப்படித்தான் எதிர்பார்த்துத் தவிக்க முடியும் என்பதும் அவனுக்குத் தெரியும். வாழ்க்கையில் ஏமாற்றமடை

கிறவர்கள் நிறைய இருப்பார்கள். ஆனால் அப்பாவைப் போல் வாழ்க்கையையே ஏமாற்றமாக அடைந்தவர்களின் துன்பம் மிகவும் பெரியது. சத்தியமூர்த்திக்கு நினைவு தெரிந்து அவர் கிழிசல் இல்லாத சட்டையும், வேட்டியும் அணிந்து பார்த்ததில்லை. ஆசிரியர் தொழிலின் மேலேயே அவர் கசப்பையும் வெறுப்பையும் வளர்த்து விட்டுக் கொண்டதற்கு அவரே ஆரம்பப் பள்ளி ஆசிரியராக இருந்து அடைந்த துன்பங்கள்தான் காரணம் என்பதும் சத்தியமூர்த்திக்குத் தெரியும். தன்னைப் பற்றிய அப்பாவின் கற்பனைகளையும், ஆசைகளையும் அவன் பொறுத்துக் கொண்டான். காரணம், அவருடைய உத்தியோக வாழ்வில் அவர் அதிகமாக அதிருப்தியும் துன்பமும் அடைந்தவர் என்பதுதான்.

ஊருக்குப் போய் இறங்கினவுடன் தன் தந்தை தன்னைக் கேட்கப்போகிற கேள்வியையும், 'இண்டர்வ்யூ' முடிகிற நேரத்தில் திடீரென்று புதிராக மாறி விட்ட பூபதி தன்னைப் பற்றி என்ன முடிவுக்கு வந்திருப்பார் என்ற கேள்வியையும் மனத்தினுள்ளே எதிரெதிராக நிறுத்திப் பார்த்தான் சத்தியமூர்த்தி. இரண்டு கேள்விகளுமே விரோதிகள் எதிரெதிரே சந்தித்துக் கொண்டாற் போல் ஒரு விளைவும் இன்றி அப்படி அப்படியே திகைத்து நின்றன. முதல் நாள் அவனுடைய சூட்கேஸில் துணிமணிகளை எடுத்து நிரப்பிக் கொண்டே, ''என் கைராசி வீணாகி விடாது அண்ணா! திரும்பி வரும் போது கையில் ஆர்டரோடு வரப் போகிறாய். பார்த்துக்கொண்டே இரு.....'' என்று உற்சாகத் துள்ளலோடு தன் தங்கை ஆண்டாள் கூறியிருந்ததையும் இப்போது நினைத்துக் கொண்டான் சத்திய மூர்த்தி. சிறிய தங்கை கல்யாணியைவிட ஆண்டாள் விவரம் தெரிந்தவள். குடும்பக் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொண்டவள். சிறிய தங்கையின் உலகம் துப்பறியும் நாவல்களை ஒரே மூச்சில் படிப்பதோடு ஆரம்பமாகி 'எம்பிராய்டரி' வேலைகளோடு முடிந்து விடும். மூத்தவள் ஆண்டாள் மேல்தான் சத்தியமூர்த்திக்குப் பாசம் அதிகம். 'இந்த வீட்டின் வைகறைப் போது என்னிடமிருந்துதான் விடிகிறது' என்பதுபோல் விடிகாலையில் எழுந்து வாசல் தெளித்துக் கோலம் போடுவதிலிருந்து இரவு ஒன்பது மணிக்கு மேல் 'அண்ணா உன் பாயையும் தலையணையையும் திண்ணையில் கொண்டு போய் வைத்து விட்டேன்' என்று சொல்ல வருவதுவரை தன் தங்கை ஆண்டாள் அந்த வீட்டில் பம்பரமாகச் சுழன்று உழைப்பது சத்தியமூர்த்திக்கு நன்றாகத் தெரியும். ஓடியாடி உழைக்க முடியாமல் தளர்ந்து போன அம்மாவின் வாயினாலேயே தங்கை ஆண்டாள் புகழப்படுவதைக் கேட்டுச் சத்தியமூர்த்தி பூரித்துப் போயிருக்கிறான். கல்லூரிப் படிப்பு முடிகிற வரை அவன் ஊரோடு வீட்டில் அதிகம் தங்கியதே இல்லை. விடுமுறைகளுக்கு வருவது போவது தவிர அவனுக்குத் தொடர்ந்து வீட்டில் தங்க வாய்த்ததில்லை. அவன் விடுமுறைக்காக ஊர் வரும் ஒவ்வொரு முறையும் அம்மா ஆண்டாளைச் சுட்டிக் காட்டி, —

''சத்தியம்! இந்த வீட்டின் ஒரே சுறுசுறுப்பு இவள்தானடா அப்பா....'' என்ற வாக்கியத்தை நாலைந்து தடவையாவது சொல்லத் தவற மாட்டாள். அம்மாவுக்கும் சத்தியமூர்த்திக்கும் ஆண்டாளின் மேல் பிரியமென்றால் கல்யாணி அப்பாவுக்குச் செல்லம். சத்தியமூர்த்தியோ, அம்மாவோ அப்பா காது கேட்கக் கல்யாணியைக் கடிந்து கொள்ளவும், கோபித்துக் கொள்ளவும்கூடத் தயங்குவார்கள். அப்படியே தப்பித் தவறி அவர் காது கேட்கும்படி அவர்கள் அவளைக் கடிந்துகொள்ள நேரிட்டாலோ ''அவளுக்கென்ன தெரியும்! அவள்



குழந்தை. அவளைக் கோபித்துக்கொள்ளாதீர்கள்....'' என்பார் அப்பா.

''இந்தப் பிறவி மட்டும் கடைத்தேறுவதற்கு நீ குறைந்தபட்சம் ஒரு கோடி துப்பறியும் நாவல்களாவது படிக்க வேண்டும், கல்யாணி!'' என்று சத்தியமூர்த்தி எப்போதாவது கல்யாணியை வம்புக்கு இழுப்பான்.

''நிச்சயமாக நம் கல்யாணியின் பிறவி கடைத்தேற ஒரு கோடி துப்பறியும் நாவல்கள் போதாது அண்ணா!'' என்று அந்த நேரம் பார்த்து ஆண்டாளும் சத்தியமூர்த்தியோடு சேர்ந்து கொள்வாள். இதைக் கேட்டுக் கல்யாணிக்குக் கோபம் கோபமாக வரும்.

''பார் அப்பா, இவர்களை! கட்சி கட்டிக் கொண்டு இரண்டு பேருமாக என்னிடம் வம்புக்கு வருகிறார்கள்'' என்று அப்பாவிடம் புகார் செய்வாள் கல்யாணி.

''அவளுக்கென்ன தெரியும்? அவள் குழந்தை!'' என்ற வழக்கமான வாக்கியத்தோடு செல்லப் பெண்ணுக்குப் பரிந்து கொண்டு வருவார் அப்பா. அந்த வீட்டின் வசதிகளற்ற வறுமை வாழ்விலும் இப்படி ஒரு செல்லம், பரிவு எல்லாம் உண்டு.

மதுரையில் தன் வீட்டைப் பற்றியும் அதன் பலங்களையும் பலவீனங்களையும் பற்றியும் ஒவ்வொன்றாகச் சிந்தித்தான் சத்தியமூர்த்தி. அப்பாவிலிருந்து தங்கை ஆண்டாள் வரை தன்னுடைய மல்லிகைப் பந்தல் இண்டர்வ்யூ சாதகமாக முடிந்து தான் ஆர்டருடனோ, அல்லது ஆர்டர் நிச்சயமாகக் கிடைத்து விடுமென்ற நம்பிக்கையுடனோ திரும்புவதாகத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று அவன் அறிந்திருந்தான். ஆனால் நிச்சயமான எந்த விடையுடனும் இப்போது அவன் ஊர் திரும்பவில்லை. கல்லூரி அதிபர் பூபதியும் உறுதி கூறாமல் விடை கொடுத்திருந்தார். கல்லூரி முதல்வரும் உறுதி கூறாமல்தான் அவனுக்கு விடை கொடுத்து அனுப்பியிருந்தார்.

''பிரின்ஸிபலைப் பார்த்து விட்டுச் செல்லுங்கள். அவர் எல்லா விவரமும் சொல்லுவார்'' என்று கல்லூரி முதல்வரிடம் அவனை அனுப்பியிருந்தார் பூபதி. கல்லூரி முதல்வரோ அவனுடைய சர்டிபிகேட்டுகளின் ஒரிஜினல்களை எல்லாம் வாங்கி வைத்துக்கொண்டு ''நீங்கள் போகலாம். கோடை விடுமுறை முடிந்து கல்லூரி திறப்பதற்கு முன் உங்களுக்கு விவரம் தெரிவிக்கிறோம்'' என்று மறுமொழி கொடுத்திருந்தார். இரண்டு பேருடைய விடைகளும் ஏறக்குறைய ஒரே விதமானவைதாம். அவற்றுக்கு ஆழமான அர்த்தமோ, விளைவோ எதுவும் எதிர்பார்ப்பதற்கில்லை. வழக்கமாக எல்லாருக்கும் எல்லா இடத்திலும் சொல்கிற விடைதான் அது. தன்னுடைய பேச்சின் இறுதிப் பகுதியில் பூபதியோடு தான் முரண்பட்டதை அவர் விரும்பவில்லை என்ற உண்மை சத்தியமூர்த்திக்குப் புலப்பட்டிருந்தாலும் அவ்வளவு பெருந்தன்மையான மனிதர் அந்தக் கருத்து முரண்பாட்டை ஒரு தகுதிக் குறைவாக எடுத்துக் கொண்டு தன்னை வெறுக்க முடியும் என்பதை அவனால் நம்ப முடியவில்லை. ஆனபடி ஆகட்டும் என்று அந்தச் சிந்தனையையே மறக்க முயன்றான் சத்தியமூர்த்தி.


இரயில் வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. கோடை நாட்களில் அந்த நிலையத்துக்கு 'ரிடர்ன் டிக்கெட்' வசதி உண்டாகையால் சத்தியமூர்த்தியிடம் திரும்புவதற்கும் டிக்கெட் இருந்தது. அந்த இரயில் மல்லிகைப் பந்தல் ரோடு நிலையத்துக்கே வரவேண்டிய நேரத்தைக் கடந்து இரண்டு — இரண்டரை மணி நேரம் தாமதமாக வந்திருந்ததனால் மதுரைக்குப் போய் இறங்கும் போது ஏறக்குறைய விடிகிற நேரமாகிவிடுமென்று தோன்றியது. வண்டியில் கூட்டமே இல்லை. நிலையத்தில் அந்த இரயிலுக்காகக் காத்திருந்தவர்கள் தொகையும் அதிகமில்லை. பிளாட்பாரத்தில் இரயில் வந்து நிற்கும் வேளைகளில் அந்த நிலையத்தில் வழக்கமாகக் கேட்கும் மலைப் பழம் விற்பவர்களின் கூக்குரல்கூட அப்போது ஏறக்குறைய இல்லாமல் ஓய்ந்து ஒடுங்கிப் போயிருந்தது. தான் நின்று கொண்டிருந்த இடத்துக்கு நேராக உள்ள ஒரு மூன்றாம் வகுப்புப் பெட்டியில் ஏறி மேலே சாமான்கள் வைக்கும் பலகையில் துண்டை விரித்துப் படுத்துக் கொண்டு விட்டான் சத்தியமூர்த்தி. முதல்நாள் உறக்கமிழந்து போயிருந்ததால் அதிகச் சோர்வின் காரணமாகப் படுத்தவுடன் தூக்கம் கண்களில் வந்து கெஞ்சிற்று. அந்த நிலையத்தில் அந்த நேரத்துக்குத் தெற்கேயிருந்து வருகிற இரயில் ஒன்று வடக்கேயிருந்துதெற்கே போய்க் கொண்டிருக்கும் இந்த இரயிலை 'கிராஸ்' செய்ய வேண்டியதாயிருந்தது. அதனால் தெற்கே போகிற இரயில் அரை மணி நேரம் கழித்துத்தான் புறப்பட்டது. இரயில் அங்கிருந்து புறப்பட்டது கூடச் சத்தியமூர்த்திக்குத் தெரியாது. அவன் நன்றாக உறங்கிப் போயிருந்தான். நாள் தங்கின விருந்தாளியைப் போல அந்த இரவு நேரத்துப் பிரயாணிகள் இரயில் சுவாரஸ்யமோ, சுறு

தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது

ஹத்திபாயின்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்

நீடித்து உழைப்பவை. ஜொலிப்புடன் திகழ்பவை





ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் தயாரிப்பவர்களில் முதன்மையானவர்கள்.

ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ் 122, கன்ஸராசால், பம்பாய் 2

கறுப்போ இல்லாமல் மெல்ல நகர்ந்து போய்க் கொண்டிருந்தது. 'மெயில் கௌரவமோ, 'எக்ஸ்பிரஸ் அந்தஸ்தோ' இல்லாத அந்த ஏழை பாஸஞ்சர் வண்டி ஏனோ தானோ என்று வாழும் விறுவிறுப்பில்லாத மக்களைச் சுமந்தபடி ஏனோதானோ என்று இயங்கியது.

அப்போது எந்த விதமான நினைவோ கனவோ உறுத்தாத மனத்தோடு அடித்துப் போட்ட மாதிரி நன்றாக உறங்கியிருந்தான் சத்தியமூர்த்தி. முக்கால் மணி நேரத்துக்கு மேல் அவனுடைய ஆழ்ந்த உறக்கம் இடையூறின்றித் தொடர்ந்தது. அவன் ஏறியிருந்த பெட்டியில் அவனைத் தவிர வேறு மனித சஞ்சாரமேயில்லை.



ஏதோ ஒரு சிறிய நிலையத்தில் இரயில் நின்று புறப் பட்ட போதுதான் அவன் படுத்திருந்த பெட்டியின் கீழே உள்ள இருக்கையிலிருந்து அந்தக் குரல் ஒலிகள் வலுத்து அவனை எழுப்பின. கண் விழித்துப் பார்த்த போது வண்டிக்குள் புதிதாக யாரோ பிரயாணிகள் ஏறியிருப்பதாய்த் தெரிந்தது. பலகையில் எழுந்து உட்கார்ந்து கீழ்ப்புறமாகக் குனிந்து வார்த்தைகளாலே ஒருவருக்கொருவர் சாடிக் கொள்ளும் அந்த விநோதப் பிரயாணிகள் யாரென்று பார்க்க வேண்டும்போல ஆவலாயிருந்தும் அப்படிச் செய்யாமல் படுத்திருந்தபடியே அவர்களுடைய உரையாடலை உற்றுக் கேட்டான் சத்தியமூர்த்தி. நடு நடுவே ஏதோ நாட்டிய மேடையில் கேட்கிறாற் போலச் சலங்கை ஒலிகளும், கண்ணாடி வளைகளின் ஒலிகளும் வேறு கேட்டன. சத்தியமூர்த்தியின் தூக்கம் நிச்சயமாகக் கலைந்தே போய் விட்டது. வாக்குவாதம் வலுத்துச் சண்டை போடுகிற தொனியில் பேசிய குரல்கள் இரண்டும் பெண்களுடையவையாயிருந்தன. அவர்கள் அந்த நிலையத்தில்தான் ஏறியிருக்க வேண்டும் என்று அவன் அநுமானம் செய்ய முடிந்தது. இரண்டு பெண் குரல்களில் சற்றே வயது மூத்து முதிர்ந்ததாக ஒலித்த குரல் கண்டிப்பும் அதிகார மிடுக்கும் பொருந்தியதாக இருந்தது:

''வெட்கங் கெட்ட மூளி! நீ இப்படிச் செய்யலாமா? இதே மாதிரிப் போய்க் கிட்டிருந்தா நீ பிழைச்சு உருப் பட்டாப் போலத்தான்... போ.....''

இதற்குப் பதிலுரைத்த இளைய குரல் வீணையின் தந்தியை மெதுவாக வருடினாற் போல் இனிமையும் நளினமும் இழைந்து மெல்லச் சீறியது:

''இப்படி மானங்கெட்டுப் பிழைக்கிறதுக்கு எங்கேயாவது ஆற்றிலே குளத்திலே விழுந்து செத்தா நல்லது. நீயா என்னைக் கொல்லவும் போகிறதில்லே; நானாகச் சாக விடவும் போகிறதில்லே.... இப்படியேதான் தொடர்ந்து நீ என்னைச் சித்திரவதை செய்துக்கிட்டிருக்கப் போறே....''

இப்படி ஒலித்த இந்தச் சொற்களின் தொடர்ச்சியாகவே வளைகளும் சலங்கைகளும் குலுங்கி ஒலித்ததனால் அவைகளை இந்தச் சொற்களுக்குரியவள் தான் அணிந்திருக்க வேண்டும் என்பதையும் அவன் புரிந்து கொள்ள முடிந்தது. இரயில் பெட்டி நிறைய முகப் பௌடரும், சந்தனமும் சாதிப் பூக்களும் கம்மென்று மணக்கத் தொடங்கியிருந்தன.

சத்தியமூர்த்தி மேலும் அந்த உரையாடலைத் தொடர்ந்து கவனித்தான்.

''உன் மனசிலே நீ என்னதான் நினைச்சுக்கிட்டிருக்கியோ....? தெரியலே... சின்னஞ் சிறு கிராமத்திலே அம்மன் கோவில் திருவிழாவுக்கு நாலு விதமான மனுசாளும்தான் வந்திருப்பாங்க. ஒருத்தருக்குப் பாம்பாட்டி நடனம் பிடிச்சிருந்தா இன்னொருத்தருக்கு 'மயில் டான்ஸ்'தான் பிடிக்கும். யார் மனசும் குறைப்படாமேதான் நடந்துக்கணும்... காலிலே சலங்கையைக் கட்டிக்கிட்டு இதுக்குன்னு பெறந்து வளர்ந்தப்புறம்... அதெல்லாம் பார்த்தா முடியுமா?....''

''அதெல்லாம்னு... எதெல்லாம்?''

''உன் திமிர் பிடிச்ச கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல நான் ஆள் இல்லே டிம்மா.''

''அம்மன் கோவில் திருவிழா நடத்துற மனுசங்களா இவங்க....? நிஜமா அம்மனைக் கும்பிட்டுத் திருவிழா எடுக்கிறவங்களா இருந்தால் பெண்களைத் துச்சமா மதிக்கிற சின்ன நினைப்புத் தோணுமா இவங்களுக்கு? ஒருத்தன் உதடு ரெண்டையும் குவிச்சு 'ஹூய்'னு சீட்டியடிக்கிறான். இன்னொருத்தன் கண்ணைச் சாய்க்கிறான். அந்தக் கண்ணிலே கொள்ளியைத்தான் வைக்கணும்.....''

''இப்படி வாய்த் துடுக்கு இருக்கப் படாதுடீ உனக்கு.''

''ஏன்?.... இருந்தா என்னவாம்?''

''சீக்கிரமா அழிஞ்சு இருந்த இடம் தெரியாமப் போயிடுவே!''

"அப்படிப் போயிட்டா உனக்கே சந்தோஷம்தானே?...."

"இருந்து இப்படி என் கழுத்தை அறுக்கிறதுக்குப் பதில் அதையாவது செய்யலாம் நீ...."

எதிர்த்தரப்பிலிருந்து இதற்குப் பதில் இல்லை. வளைகளும் சலங்கைகளும் மெல்லக் குலுங்கியபின் சிறிது நேரம் கழித்து விசும்பியழுகிற இளங்குரல் எழுந்தது. அந்தக் குரல் விசும்பியழுவதுகூட மிகவும் நயனமானதோர் இன்னிசையாக உருவாகி ஒலித்தது.

"பேசறதையும் பேசிப்பிட்டு ஏதுக்கும்மா இந்தச் சாகஸம்?"

இந்தக் கேள்விக்கும் எதிர்த்தரப்பிலிருந்து பதில் இல்லை. அழுகைக் குரல் பெரிதாகியது.

"பெரிசா அழுதுட்டாப்பிலே ஆச்சா? நீ பெறந்த பெறப்புக்கு ரோஷம் என்ன வேண்டிக் கெடக்கு? பேசின தொகைக்கு ஒழுங்கா ஆடிட்டு வரணுமா, இல்லியா?"

"அப்பிடி ஆடறதுக்கு நா ஒண்ணும் தெருக் கூத்துப் படிச்சுக்கலே. 'இது சரகவதியோட இலட்சணம்'னு சொல்லியிருக்காரு வாத்தியாரு......." என்று அழுகையோடு குமுறிக் கொண்டு பதில் பேசியது இளங்குரல்.

திடீரென்று முதியவளிடமிருந்து சத்தியமூர்த்தியே இரண்டாவது முறை நினைக்கக் கூசும்படி துச்சமான வார்த்தை ஒன்று வெடித்தது. மேலே ஒருவன் படுத்திருப்பதை மறந்து தாங்கள் மட்டுமே அந்தப் பெட்டியில் இருப்பதாகப் பாவித்துக் கொண்டு வார்த்தைகளைத் தடிக்க விட்டுக்கொண்டிருந்தார்கள் அவர்கள். முதியவள் நெருப்பாய் விட்டெறிந்த அந்த ஒரு வார்த்தை இளையவளிடம் விளைவித்த ஆத்திரம் அடக்க முடியாததாக இருந்தது. இப்போது சத்தியமூர்த்தி எழுந்து உட்கார்ந்து கீழே தலையை நீட்டிப் பார்க்க வேண்டியதாயிற்று. பார்த்த கண்களுக்கு விருந்தாகத் தாமரை பூத்தாற்போன்ற அந்த முகம்தான் முதன்முதலாக அவனுக்குத் தோற்றியது. வான வில்லைப் போல் நிறங்களின் அழகிய பக்குவமெல்லாம் இணைந்த அற்புதமாய்த் தெரிந்தாள் அந்தப் பெண். காலில் நாட்டியத்துக்காகக் கட்டிக் கொண்டிருந்த சலங்கைக் கொத்துக்களை அறுத்தெறிந்து விட்டு,



"நான் விழுந்து செத்தால்தான் உனக்கு என்னைப் புரியும்....." என்று ரயில் கதவைத் திறந்து கொண்டு பாயத் தயாராகி விட்டாள் அந்த இளம் பெண். இனியும் தான் மேலேயிருந்து சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது மனிதத் தன்மையில்லை என்று படவே சத்தியமூர்த்தி கீழே இறங்கி அவர்களுக்குள் சமரசம் செய்ய முயன்றான். அவனைக் கண்டவுடன் தங்கள் இருவரைத் தவிர மூன்றாவதாக ஆண் பிள்ளை ஒருவன் அந்த வண்டியில் இருக்கிறான் என்பதை அறிந்ததே அவர்களுக்கு அதிர்ச்சியாயிருந்தது. அவனைக் கண்டு அந்த இளம் பெண்தான் அதிகக் கூச்சமடைந்தாள். அவளை அரட்டி மிரட்டிக் கொண்டிருந்த முதியவள் அதிக வெட்கமோ கூச்சமோ கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் அவளுக்கும் சேர்த்துக் கூச்சப்படுவது போல் அத்தனை அதிகமான வெட்கத்தோடு தலையைக் கவிழ்ந்து கொண்டு நின்றாள் அந்த இளம்பெண். நாட்டியக் கோலத்தில் அந்த இளம் பெண் மருண்டு நின்றதே ஓர் அழகிய அபிநயமாயிருந்தது. முன்னங்காலைத் தூக்கிக்கொண்டு பாய்வதற்குத் திமிறி நிற்கும் அரபிக் குதிரையைப் போல் கன்னிப் பருவம் மதர்த்து நிற்கும் அழகு அவளிடம் தென்பட்டது. அந்த அழகில் அடக்கமும் இருந்தது. அப்போது அவள் முகத்தில் தெரிந்த மடப்பமும், பயிர்ப்பும், கூச்சமும், நாணமும் மிக உயர்ந்த குடும்பத்துப் பெண்களிடம்கூடக் காண அருமையானவைகளாயிருப்பதைப் பார்த்துச் சத்தியமூர்த்தி ஆச்சரியப்பட்டான். தேடிக் கண்டு பிடிக்க முடியாத அல்லது விரும்பாத பல இடங்களில் வாழ்க்கையின் மிக மென்மையான குணங்கள் அமைந்திருந்து அவை பிறருக்குத் தெரியாமலே போய் விடுகிற சமுதாய நஷ்டத்துக்காகச் சத்தியமூர்த்தி தனக்குள் பல முறை வருந்தியிருக்கிறான். இன்றும் அப்படி அவன் வருந்த நேரிட்டது.

"அம்மா! நீங்கள் உங்கள் பெண்ணிடம் இன்னும் சிறிது நாகரிகமாகப் பேசலாமே? அப்படிப் பேசினால் இரயிலில் உடன் வருகிற மற்றப் பிரயாணிகளும் உங்களை அநாகரிகமாய் நினைத்துக் கொள்ளக் காரணமாயிராது" என்று சத்தியமூர்த்தி கூறிய




தைக் கேட்டு முகத்தைச் சுளித்தாள் அந்த அம்மாள்.

''எங்கள் அம்மாவுக்கு நாகரிகத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. 'நாகரிகத்தை' எவ்வளவு 'அட்வான்ஸ்' வாங்கிக் கொண்டு விற்கலாமென்று அவள் நினைப்பாள்....'' என்று கீழே தலையைக் கவிழ்ந்து கொண்டே குமுறலோடு அவனிடம் பேசியது அந்த இனிய குரல்.

'இன்னொருத்தனுக்கு முன் சந்தி சிரித்துவிடும் போல் இருக்கிறதே' என்ற பயத்தினாலோ என்னவோ அம்மாக்காரி பதில் பேசாமல் இருந்து விட்டாள். சண்டை ஒருவிதமாக ஓய்ந்து அமைதியடைந்த நிலைக்கு வந்தது. சத்தியமூர்த்தி மறுபடியும் மேலே ஏறிப் படுத்துக் கொண்டான். சிறிது நேரத்தில் கீழ்ப்புறமிருந்து அந்தப் பெரிய அம்மாள் குறட்டை விடுகிற ஓசை கிளம்பிற்று. அந்த அம்மாளின் குறட்டைகூட மிடுக்குடனே மிரட்டுவது போல் இருந்தது. சத்தியமூர்த்திக்குத் தூக்கம் மறுபடியும் வரவில்லை. படுத்தபடியே புரண்டு கொண்டிருந்தான். கண்கள் மட்டும் தூங்குவது போல் சும்மா மூடியிருந்தன. கீழே இருந்து பரவும் நறுமணங்கள் அவற்றைச் சுமந்து கொண்டிருப்பவளின் சோகமயமான வேதனைகளை அவனுடைய ஞாபகத்தில் படரச் செய்தன. அவன் ஏதேதோ தொடர்பு உடையனவும், தொடர்பு அற்றனவுமாகிய சிந்தனைகளைச் சிந்திக்கத் தொடங்கினான்.

அதிகாலை மூன்றரை மணி இருக்கும். இரயில் மதுரைப் பாலம் நிலையத்தைக் கடந்து வைகைப் பாலத்தில் 'தட தட' வென்று ஓசையிட்டு ஓடத் தொடங்கி யிருந்தது. அப்போதுதான் அந்தப் பெண் தன்னுடைய உணர்ச்சியின் மானத்தை இரண்டாம் முறையாக அவனுக்கு நிரூபிக்கும் காரியத்தைச் செய்யலானாள். அவனுடைய கைவளைகள் ஓசைப்பட்டுக் கண்ணை மூடிக் கொண்டிருந்த அவனை எழுப்பி விட்டன. கண்களைத் திறந்து விழித்ததும் இரயில் கதவைத் திறந்து கொண்டு வைகையில் பாய்ந்து விடத் துணியும் நிலையில் அவளைப் பார்த்தான் சத்தியமூர்த்தி. பார்த்ததும் திடுக்கிட்டான். அவள் நினைத்ததைச் செய்துவிட அந்த நிலையில் அவளுக்கு அரைக்கணமே போதும். மேல் பலகையிலிருந்து கீழே குதித்துத் தாவி அவளைக் காப்பாற்றவோ குறைந்தபட்சம் அவனுக்கு இரண்டு கணமாவது வேண்டுமே...? (தொடரும்)


முட்டையிலிருந்து வெளிவந்து இன்னும் மூணு நிமிஷம் ஆகலை! 'நான் முட்டையிலிருந்து வெளி வந்தது சரி! முட்டைக்குள் எப்படிப் போனேன்? அதைச் சொல்லு!' என்கிறது இந்தச் சின்னக் குஞ்சு!
எப்பொழுது பார்த்தாலும் வானத்தைப் பார்த்தின் டிருந்தது போதும். அதோ தூரத்திலே இருக்கிற சினிமா தியேட்டரில் இன்னிக்கு என்ன படம், எந்த நட்சத்திரங்கள் என்று பாருங்கள்!
இந்தப் பனியிலும் குளிரிலும் எழுந்து இந்த ஐஸ் தண்ணீரில் ஸ்நானம் செய்து விட்டு...
...துளிக்கூட நடுக்கம் இல்லாமல் நிற்கிறாரே!..
...அவசியம் அவரை ஒரு போட்டோ எடுக்கணும்!
ஐயோ! போட்டோவில் இப்படி நடுக்கமா காட்சியளிக்கிறாரே! என்கிறார் போட்டோ எடுத்தவர்.
நடுங்கியது யார்? பக்கங்களைப் புரட்டுங்கள் ரகசியம் புரியும்!

இவரைத் தெரியுமா?

இந்தத் தாடிக்காரப் பெரியவர் யார் என்று தெரியுமா உங்களுக்கு? 'ஹலோ' என்றழைத்து ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ளவருடன் பேசக் கூடிய சாதனமான டெலிபோனைக் கண்டுபிடித்த விஞ்ஞானி இவர். அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் என்ற இவர் ஸ்காட்லாந்து நாட்டின் எடின்பரோ நகரில் 1847-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ம் தேதி பிறந்தார். தந்தையும் பெரிய அறிவாளி. அலெக்ஸாந்தர் மெல்வில் பெல் என்பது அவர் பெயர்.

பெல் உயர்ந்த படிப்புக்களெல்லாம் படித்தார். இருபத்து மூன்றாவது வயதில் அவர் உடல் நிலை பாதிக்கப்பட்டது. அதனால் கவலை கொண்ட அவரது பெற்றோர் தாய்நாட்டை விட்டுக் கானடாவுக்குக் குடியேறினார்கள். பாஸ்டன் நகரில் செவிடர் ஊமையர்களுக்கு ஒலியை உணர்த்தும் பயிற்சிப் பள்ளியைத் தொடங்கி நடத்தினார். பிறவிச் செவிட்டுத்



தன்மையை நீக்கி, ஒலிகளை அவர்கள் உணருவதற்கான ஒரு சாதனத்தைத் தயாரிப்பதில் முனைந்திருக்கும்போதுதான் எதிர்பாராத விதமாக டெலிபோனை அமைக்க முடியும் என்பதை உணர்ந்தார் பெல்.

இரவு பகல் பாராமல் இதே சிந்தனையாகப் புதிய சாதனத்தில் ஆராய்ச்சிகள் நடத்தலானார். இவருக்கு உதவியாக வாட்ஸன் என்பவர் இருந்தார். பாஸ்டன் நகரில் சாதாரண அறையொன்றில் இவ்விருவரும் கம்பி மூலம் ஒலியை வேறு இடத்துக்கு அனுப்பும் முயற்சியைத் தொடர்ந்து செய்து வந்தார்கள்.

1876-ம் வருடம் மார்ச் மாதம் 10-ந் தேதி வாட்ஸன் ஹோட்டலின் கீழ்த் தளத்தில் ரிஸீவரைத் தம் காதோடு வைத்து அழுத்திக் கொண்டு காத்திருந்தார். மாடி அறையொன்றில் பெல் தம் யந்திரத்தின் முன்னால் உட்கார்ந்து தவிப்போடு ஒவ்வொரு வார்த்தையாகப் பேசினார். கீழேயுள்ள வாட்ஸனின் முகம் மலர்ந்தது. அவர் உடல் சிலிர்த்தது. தம் நண்பரின் குரலை—தெளிவான அவரது பேச்சை—குழல்மூலம் கேட்டார்.

"மிஸ்டர் வாட்ஸன்! தயவுசெய்து மேலே வாருங்கள்." இவைதான் முதன் முதலில் டெலிபோன் கருவி மூலம் பேசப்பட்ட வார்த்தைகள். வாட்ஸன் பள்ளிப் பையனைப் போல் மாடிப் படிகளை இரண்டு மூன்றாகத் தாவி ஏறிப் பெல் இருக்கும் அறைக்குள் புகுந்தார். "உங்கள் குரலைக் கேட்டேன்" என்று கிரஹாம் பெல்லைக் கட்டிக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினார் வாட்ஸன். அன்றைக்கே டெலிபோன் பிறந்தது.




உங்கள் ஆல்பத்துக்கு

வீடும் வாழ்வும் – 2


பாரதத்தின் மீது வலுத் தாக்குதல் நடத்தி இருக்கும் வஞ்சகச் சீனாதான் உலகத்திலேயே ஜனத்தொகை மிகுந்த தேசம். இங்குள்ள மக்களுக்கு வாழ இடம் கிடையாது. பெரும்பாலான மக்களின் வீடு நதிகளில் மிதக்கும் படகுகள்தான். படகிலேயே உண்டு உறங்கி வாழும் இவர்களுக்குப் படகுவாசிகள் என்று பெயர். இன்னும் சிலர் நதிகளைக் கடக்கும் பாலங்களை ஒட்டி மூங்கிலையும் ஒரு வகை மரக் கம்பங்களையும் கொண்டு வீடுகள் கட்டிக் கொண்டு வாழுகிறார்கள். நதிகளில் வெள்ளம் வரும் போது இந்தப் பால வீடுகள் அழிந்து விடும், அல்லது பல வாரங்கள் வெளி உலகோடு தொடர்பின்றி வெள்ள நீரால் துண்டிக்கப்படும். படகுகளில் வாழுபவர்கள் வெய்யிலிலிருந்தும் மழையிலிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ள மூங்கில் தட்டிகளைக் கொண்டு படகுகளையே வீடுகள் போல் அமைத்துக் கொண்டிருப்பார்கள். மீன் பிடித்தும் கோழிகளை வளர்த்தும் குறைந்த கட்டணத்தில் சாமான்களைச் சுமந்து சென்றும் வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்கிறார்கள் இவர்கள். சீன தேசத்தின் படகு வீடு வாசிகளையே இங்கு காண்கிறீர்கள்.

செய்து பார்!

உன் வீட்டில் ஒரு கண்ணாடி பாட்டில் உடைந்து விடுகிறது என்று வைத்துக் கொள். நல்ல அழகான கண்ணாடிப் பாத்திரம் கோணல் மாணலாக உடைந்து விட்டது. குத்திக் கிழிக்கும் அதன் முனைகளை ஓர் ஒழுங்காக வெட்டிவிட்டால் அதை ஒரு கண்ணாடிக் கோப்பைபோல் ஆக்கலாம். ஆனால் அதை அப்படிச் செய்வது எப்படி? அதற்குத் தக்க ஆயுதங்கள் ஏதும் இல்லையே என்று நீ கையை விரிக்க வேண்டாம். நான் ஒரு சுலபமான வழியைச் சொல்லித் தருகிறேன். கோணல் மாணலாக உடைந்த கண்ணாடிப் பாத்திரத்தின் அடிப் பாகத்தில் அதை எதுவரை வெட்ட வேண்டுமோ, அந்த அளவுக்கு ஏதாவது ஓர் எண்ணெயால் (தேங்காயெண்ணெயோ, நல்லெண்ணெயோ) நிரப்பு. கண்ணாடிப் பாத்திரம் சரி சமமான இடத்தில் இருக்கும்படி வைக்க வேண்டும். இனி ஒரு கனமான இரும்புக் கம்பியைத் தணலைப் போலச் சிவப்பாகும்படி பழுக்கக் காயவை. அதைச் சட்டென்று எடுத்து உடனே எண்ணெய்க்குள் குப்பென்று முக்கு. இப்போது கண்ணாடி விரியும் ஓசை கேட்கும். எண்ணெயின் மட்டத்துக்கு வட்டமாக, ஒழுங்காகக் கண்ணாடி உடைந்திருக்கும். ஒழுங்கற்ற மேல் பாகம் தனியாக வந்து விடும். கீழே ஒழுங்கான விளிம்போடு கூடிய கண்ணாடிக் கப் உருவாகியிருக்கும். இதை நீங்கள் செய்வதைவிட உங்கள் அப்பாவையோ பெரிய அண்ணாவையோ கொண்டு செய்யச் சொல்லி நீங்கள் வேடிக்கை பார்ப்பதுதான் நல்லது.



கண்ணாடியைக் கத்திரிக்கோலால் அட்டையைக் கத்திரிப்பது போல் இஷ்டப்படி வேண்டிய கோணத்தில் உங்களால் வெட்ட முடியுமா? 'அதெப்படி? கோணம் மாணலாக விரிசல் அல்லவா ஏற்படும்?' என்று சொல்வாய். ஆனால் நான் ஒரு வழி சொல்லித் தருகிறேன். நல்ல கத்திரிக்கோலை எடுத்துக் கொள். வெட்ட வேண்டிய கண்ணாடியைத் தொட்டி நீருக்குள் முக்கிக் கொள். கத்திரி, கண்ணாடி, கைகள் எல்லாம் நீருக்குள் இருக்கும்படி கண்ணாடியை வெட்ட ஆரம்பி. சுலபமாகக் கோணல் மாணல் விரிசல் இன்றிக் கண்ணாடி வெட்டப்படும். விரிசலை உண்டாக்கும் துரித அசைவு (வைபரேஷன்) நீரினுள் ஏற்படுவதில்லை.



உலகத் தீவுகள்-3

மடகாஸ்கர்

உலகில் உள்ள பெரிய தீவுகளில் மூன்றாவது ஸ்தானத்தை வகிப்பது இந்தத் தீவு. ஆப்பிரிக்கா கண்டத்தின் தென் கிழக்கே; இந்தியாவை ஒட்டி இலங்கை இருப்பதுபோல் மடகாஸ்கர் அமைந்திருக்கிறது. இது பிரான்ஸ் தேசத்துக்குச் சொந்தமானது. உத்தேசமாக 995 மைல் நீளமும் 250 மைல் அகலமுமுடைய தீவு இது. இதன் பரப்பளவுக்குத் தகுந்த ஜன நெருக்கம் கிடையாது இங்கே. இங்கு வாழும் சுதேசிகளுக்கு மெலகாஸி என்று பெயர். மலாயா தேசத்தவர்களைப் போல் இருப்பார்கள். பழுப்பு நிறத்தோடும் நீண்ட முடியோடும் காணப்படுகிறார்கள். மேற்குக் கடற்கரைப் பகுதியில் வாழும் சுதேசிகள் ஆப்பிரிக்க நாட்டு நீக்ரோக்களுடன் கலந்து அவர்களைப்போலவே சுருள் முடியையும் கறுப்பு நிறத்தையும் அடைந்து விட்டவர்கள்.



மடகாஸ்கரின் கடற்கரை மிகுந்த உஷ்ணமானது. சதுப்பு நிலமும் அடர்ந்த காடுகளும் உடையது. மக்கள் வாழுவதற்கு ஏற்றதல்ல இது. இந்தத் தீவின் பெரும் பகுதியான மத்தியப் பிரதேசம் ஒரு பீடபூமி. கடல் மட்டத்திலிருந்து 3000-லிருந்து 4000 அடிகள் உயரமானது. இங்குதான் மக்கள் ஆடு மாடுகளுடன் வாழுகிறார்கள். மடகாஸ்கர் ஏற்றுமதி செய்யும் முக்கிய பொருள் இறைச்சி. இன்னும் அரிசி, காப்பி, தங்கம், வெள்ளி, இரும்பு, ஈயம், தாமிரம், துத்தநாகம், மரம், ரப்பர் ஆகியவைகளும் இந்தத் தீவில் உற்பத்தியாகும் பொருள்கள். இங்கு வாழும் சுதேசிப் பெண்கள் படத்தில் உள்ளது போல் தட்டிகளையும் கூடைகளையும், குல்லாய்களையும் அங்கு விளையும் ராபியா என்ற ஒரு வகை மரத்தின் ஓலையைக் கொண்டு பின்னுவதில் வல்லவர்கள். இந்தத் தீவின் ஜனத்தொகை 40,00,000. இதன் தலைநகர் ஆன்டனானரிவோ.

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்




ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும். உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினுல் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் ருசித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல் துலக்க விரும்புகிருர்கள்.



வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது

நீங்கள் பற்பொடியை விரும்பினுல், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்குக் காணும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிருர்கள்.

DC-D-94-TAM.

'கண் கொட்ட காருடையா'

பிலோ இருதயநாத்

கன்னட தேசமாகிய மைசூரிலிருந்து படகர்கள், பல காரணங்களை முன்னிட்டுப் பல ஊர்களுக்குச் சிதறுண்டு போனார்கள். அங்ஙனம் சென்றவர்களில் ஒரு கூட்டத்தார் தான் நீலகிரியில் வாழ்கிறார்கள்.

நீலகிரிக்கு வந்த இந்தப் படகர்களின் கல்வெட்டுக்களை ஆராய்ச்சி செய்யுங்கால், இவர்கள் மூன்று மார்க்கங்களில் வந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. திப்பு சுல்தான் காலத்தில், மைசூரை விட்டுப் பயந்து ஓடி வந்தபோது, இவர்கள் குழந்தைகளை ஏணையில் விட்டு விட்டு ஓடி வந்து விட்டார்களாம். அதனால் நீலகிரியில் வாழும் படகர்கள் இன்றும் தங்கள் குழந்தைகளுக்கு ஏணையோ, தொட்டிலோ போடுவதில்லை. குழந்தைகளை மடியில் வைத்தே ஆட்டித் தூங்க வைக்கின்றனர்.

இவர்கள் சத்தியமங்கலம், தனநாயக்கன் கோட்டை, கோணவக் கொரை மலை ஆகிய மூன்று மார்க்கங்களில் வந்திருக்கிறார்கள். இவர்களோடு ஒரு குருடனும் வந்தானாம். மலைகளும் மரங்களும், பாறைகளும் நிறைந்த நீலகிரி மலைக் காட்டில், ஒற்றையடிப் பாதை கூட இல்லாத அந்தக் காலத்தில், ஒரு குருடனையும் இழுத்துக் கொண்டு மலை ஏறி வருவது அவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்திருக்கிறது. குருட்டு வாலிபனைக் கவனிப்பார்களா? காட்டு மிருகங்களால் தங்களுக்கு ஆபத்து உண்டாகாமல், தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்களா? அல்லது பகையரசனுடைய சேனைகள் தங்களைத் தொடர்ந்து வராதவண்ணம் பார்த்துக் கொண்டு நடப்பார்களா?

எனவே, அந்தக் குருட்டு வாலிபனை வழியில் ஒரு பாறையின் மேல் உட்கார வைத்து விட்டு, "நாங்கள் முதலில் சென்று பகைவரின் நிலைமையும், சிப்பாய்கள் தொடர்ந்து வருகிறார்களா என்பதையும் கவனித்துக் கொண்டு அடர்ந்த காட்டில் எங்கேயாவது நிலையாகத் தங்க ஓர் இடம் கிடைக்கிறதா என்பதையும் பார்த்து வருகிறோம். அது வரை நீ இங்கேயே இரு" என்று கூறிச் சென்றார்கள். அவனைத் தனியே நடுக்காட்டில் விட்டுச் செல்ல அவர்களுக்கு மனம் இல்லைதான். ஆயினும் என்ன செய்வது? நிலைமை அப்படி. இசைகேடாக இருந்ததே!

காட்டில் தனியே விடப்பட்ட குருடன், அவர்கள் தன்னை அழைத்துப் போக வருவார்கள், வருவார்கள் என்று எதிர்பார்த்தான். எத்தனையோ இரவுகள் ஓடின. அவனது குருட்டுக் கண்களுக்கு இரவும் பகலும் தெரிய நியாயம் ஏது? தூக்கம் வரும்பொழுது தூங்கி, விழிப்பு வந்த வேளையில் விழித்து, பசித்த வயிறும் நொந்த மனமுமாக ஆண்டவனை வேண்டலானான். "ஆண்டவா! என்னைப் படைத்தது தான் படைத்தாயே! இப்படிப் பிறவிக் குருடாகவா படைக்க வேண்டும்? எல்லோரையும் போலக் கண் கொடுத்துப் படைத்திருக்கக் கூடாதா?" என்றெல்லாம் மனத்தாங்கலுடன் கேட்டான்.

இந்நிலையில்தான் ஒருநாள் யாரோ தன்னுடைய சட்டையைப் பிடித்து இழுப்பது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. பகைவர்களாக இருப்பார்களோ என்று நடுநடுங்கினான். கைகூப்பி, "ஐயா! நானொரு குருடன். என்னை ஒன்றும் செய்யாதீர்கள். எனக்கு இருப்பது ஒரே போர்வைதான். குளிர் தாங்க முடியவில்லை. என்னை அழைத்து வந்தவர்களோ என்னை இப்படி நடுக் காட்டில் தவிக்க விட்டு விட்டுப் போய் விட்டார்கள். படைத்தவனும் என்னை இப்படிக் குருடாகப் படைத்தான். உங்களுக்குமா என் மேல் இரக்கம் இல்லை?" என்று கெஞ்சினான்.

அவன் எவ்வளவு உருக்கமாகச் சொல்லியும் இரக்கமான பதில் இல்லை. அவன் ஆயாசமாக அயர்ந்துவிட்டசமயத்தில் பின்னாலிருந்த புதரிலிருந்து, "பகைவர்களின் சேனை உன் போர்வையைப் பிடித்து இழுக்கவில்லை. சில்லென்ற காற்றை நான் ஏவினேன். அதன் அசைவில் உன் துணி பக்கத்திலிருந்த முள்ளில் சிக்குண்டு இழுத்தது. ஆம், நான் உனக்குக் கண் கொடுத்தால், நீ எனக்கு என்ன கொடுப்பாய்?" என்று அசரீரி ஒன்று கேட்டது.

குருடன் வேண்டுவது என்ன? கண் தானே! எனவே, வாலிபன், "ஐயனே! எனக்குக் கண் கொடுக்கும் கடவுளுக்கு ஒவ்வோர் ஆண்டும் ஓர் ஆடு பலி தருகிறேன்" என்றான்.

என்ன ஆச்சரியம்! அடுத்த கணமே அந்த வாலிபன் கண்ணைப் பெற்றான். கண்களைக் கொட்டிக் கொட்டி விழித்து வியப்புற்றான். கருணைக் கடலின் அருளை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சியில் தன் இனத்தாரைத் தானே தேடிச் சென்றடைந்தான். அவர்

கோணவக் கோரையில் ஆடு வெட்டுமிடம்



களும் அவனுடைய தெய்வ பக்தியைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். ''இவ்வளவு தெய்வ பக்தி வாய்ந்தவனை நாம் தனிமையில் விட்டு வந்தோமே!'' என்று மனம் வருந்தினார்கள்.

''அப்படித் தனியே விட்டு வந்ததும் ஒரு விதத்தில் நல்லதாயிற்று! நம்மோடு அழைத்து வந்திருந்தால், ஒரு வேளை ஆண்டவனுடைய அருள் இவனுக்குக் கிடைத்திருக்காதோ, என்னவோ?'' என்றும் ஒருபுறம் மனத்தைத் தேற்றிக் கொண்டார்கள்.

விரோதிகளுக்குப் பயந்து வெகு தூரத்தில் இருந்த தாந்த நாட்டுக்கு அவர்கள் சென்றார்கள். அவ்வாலிபனும் தொடர்ந்தான்.

ஆயினும் குருடனுக்குக் கண் பார்வை கிடைத்த இடம் புண்ணியமான இடமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் நிலைத்தது. எனவே, திரும்பவும் அந்த இடத்தைக் காணச் சென்றார்கள். அந்த இடம்தான் இன்று நீலகிரி, கோத்தகிரி, கோணவக் கொரை அருகில் இருக்கும் கண்ணவர் சோலை, கன்னி மாரி அம்மன் சோலை என்று படக மக்களால் வழங்கப்படுகிறது.

கண் பெற்ற குருட்டு வாலிபன் வாக்கு அளித்தபடி இன்றும் அவனது சந்ததியாராகிய படகர்கள் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்சு மாதம் அமாவாசைக்கு முந்திய சனிக்கிழமை, சினை ஆடு ஒன்றைப் பிடித்து வந்து நீராட்டிப் பூசை செய்து, ஒரே வெட்டியில் பலி கொடுத்து வருகிறார்கள்.

''பலி கொடுக்கும் ஆட்டுக்கு எட்டுக் கால்களும், இரண்டு தலைகளும் இருக்க வேண்டும்'' என்று கூறுகிறார்கள். அதனால்தான் சினை ஆட்டைப் பலி கொடுக்கிறார்கள்!

ஆட்டைவெட்டும் படகர் முதலில் குளித்துவிட்டுச் சுத்தமாக இருப்பார். பலிகொடுத்த பின் மறு நாள் ஞாயிற்றுக் கிழமை மாலை சூரியன் மறையும் வரையில் குளிக்க மாட்டார். அடுத்த நாள் திங்கட்கிழமை அன்று படகர்கள் அனைவரும் கூடி மகாலிங்க சுவாமித் திருவிழாவை விமரிசையாக நடத்துவார்கள். கன்னி மாரி அம்மன் சோலையில் வெட்டும் ஆட்டைக் கீழ் கோணவக் கொரைக்குக் கொண்டு வராமல், மேல் ஊராகிய கோத்தகிரியை அடுத்த 'தாந்த நாட்டு'க்கே எடுத்துச் செல்கிறார்கள். ஆடு வெட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டவர்கள் இந்தக் 'கண் கொட்ட காருடையா'வுக்குப் பலி ஆனபின் அடுத்து வரும் ஒரே ஒரு சனிக்கிழமையில் மட்டும் ஆட்டை மேற்கண்ட இடத்தில் வெட்டலாம். மீதி சனிக்கிழமைகளில் வெட்டக் கூடாது.

இப்பொழுதெல்லாம் பலிக்குரிய ஆட்டினை வேறெங்கும் வாங்காமல், தாந்த நாட்டிலேயே வளர்க்கிறார்கள். இன்று தாந்த நாட்டில் அவர்களின் மூதாதையர்களின் பெயரைச் சொல்லிக் கட்டப்பட்டுள்ள கோவில், ''தெய்வா கோவில்'' என்ற ''ஹிரியுடைய கோவில்'' ஆகும்.

கலையும் பழியும்

ஓர் ஓவியன் சித்திரங்களைக் கடை பரப்பி விற்றுக் கொண்டிருந்தான். அப்போது அவ்வழியே மந்திரியின் சின்னஞ் சிறு பாலகன் வேலைக்காரர்கள் புடைசூழ வந்தான். இச்சிறுவனைப் பார்த்ததும் ஓவியனுக்குப் பழைய சம்பவம் நினைவுக்கு வந்தது. இம்மந்திரிதான் இள வயதில் இச்சித்திரக்காரரின் தந்தையை ஏமாற்றியிருக்கிறார். அந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் சித்திரக்காரரின் தந்தை மனம் உடைந்து இறந்து போனார்.

சிறுவன், அந்தச் சித்திரங்களின் கடை முன் நின்றான். அச்சித்திரங்களைப் பார்த்துக் கொண்டே யிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்தான். உடனே கடைக்கார ஓவியன் அச்சித்திரத்தின் மீது தனது மேல் துண்டை எடுத்துப் போட்டு மூடி, 'இதை உனக்கு விற்க முடியாது' என்று சொல்லி விட்டான்.

பையன் மனம் சோர்ந்து போனான். இதை அறிந்த தந்தை பெரிய தொகை கொடுத்து அவன் விரும்பிய சித்திரத்தை வாங்கி வரச் சொன்னார். சித்திரக்காரன் பிடிவாதமாக விற்க முடியாது என்று கூறி விட்டான். ''இதுதான் நான் தீர்த்துக் கொள்ளும் பழி!'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

சித்திரக்காரன் தினம் காலையில், தனது இஷ்ட தெய்வத்தின் உருவத்தை ஓவியமாகத் தீட்டுவதே தனது பூஜையாகக் கொண்டிருந்தான்.

ஆனால் இப்போது அவ்வோவியம், தான் இதுவரை தீட்டிவந்த உருவத்துக்கு மாறுபட்டு வருவதை உணர்ந்தான். இது வேதனையளித்தது. என்ன காரணம் என்று புரியவில்லை.

ஒரு நாள் தனது இஷ்ட தெய்வத்தின் உருவத்தை வரைந்துவிட்டு ஒதுங்கியிருந்து பார்த்தபோது அதிர்ச்சி ஏற்பட்டது. அவ்வுருவத்தின் கண்கள் மந்திரியின் கண்களையே ஒத்திருந்தன! இதழ்களும் அவருடைய உதடுகளைப் போலவே யிருந்தன!!

''ஐயோ! நான் வாங்கிய பழி, என்னையே பழிவாங்கி விட்டதே!'' என்று அழுது கொண்டே அச்சித்திரத்தைக் கிழித்தெறிந்தான்.



—ரவீந்திரநாத் டாகுர்

‑டைப்படக் கதை

ஆப்பிள் மிகப் புளிப்பு. காயா
நக்கும்பொழுது யாரும தின்ன முடி
‑து; பழுத்தாலுமே அதை யாரும்
ராட மாட்டார்கள். காரணம்,
யாக இருந்தாலும், பழுத்தாலும்
ரிப்பு புளிப்புத்தான். தப்பித் தவறி
‑யில் வைத்து விட்டால், அப்புறம்
ன்று நாட்களுக்குப் பல் கூசும்.
ர்வத்துடன் அந்த ஆப்பிள் மரத்தை
மத்துப் பயிராக்கியவர், அந்தப்
கனாவை விலக்கு வாங்கின பின்,
ந்தப் பக்கம் அடி எடுத்து வைக்க
ல்லை. வந்திருந்தால், அந்த மரத்தை
ரோடு பிடுங்கி யெறிந்திருப்பார்?
எதிரேயிருந்த 'பைன்' மரங்கள்
க்கைகளுக்கு உகந்த வாசஸ்தல
ாகி யிருந்தன. அந்தக் காக்காய்கள்
‑ன் சில சமயம் ஆப்பிள்களை அலகி
ல் கொத்திக் குதறியிருக்கும்.
வற்றைத் தவிர அந்தப் பழங்
நக்காக அங்கே ஏங்கித் தவம்
ருப்போர் யாருமே கிடையாது.

ண்பனின் பங்களா

மஸ்ஜோஷி



சோப்ரா சாஹபுக்குக்கூட அந்த
ப்பிள்களின் மீது கொஞ்சமும்
சை கிடையாது.

பங்களாவுக்கு எதிரே ஒரு பெரிய
ான்'. அங்கே ஒரு 'டெக் சேரில்'
மர்ந்து சோப்ரா அவர்கள் மாலைத்
நீர் அருந்திக் கொண்டிருந்தார்.
வரது ஆங்கிலேய மனைவி ஏரு
மெழ்ச்சி நிறைந்த பார்வையோடு
திர்ப்புறத்தை நோக்கிக் கொண்
ருந்தாள்.

எழிற் களஞ்சியமான இடம் அது.
மை போர்த்த விசாலமான
ானி'ல் ஹைட்ரீஜியா, பீலியா,
ார்க் ஸ்பார் போன்ற மலர்கள்
ம்பார மெனப்
த்துக் குலுங்
ன. நாற்புற
ம் வசந்த கால
ளைத் தோற்ற
ளித்தது.
திரே 'பைன்'
ரங்களின் மடி
லே 'ஆர்கிட்'
மலர்கள் நிறைப்
க்கள் பூத்துக்

குலுங்கின. மரங்களின் மீது பாம்பைப் போலச் சுற்றி ஏறியிருந்தன 'ஆர்க்கிட்' கொடிகள். நாற்புறமும் மேடும் பள்ளமுமான கரிய நிற மலைகள் மீது மழை பொழிந்து களைத்துப் போன மேகங்கள் தூங்கிக் கொண்டிருப்பது போலத் தோற்றம் அளித்தன. 'லானி'ல் உட்கார்ந்தவண்ணமே அருகிலே சலசலத்தோடும் அருவியின் இன்னிசை ஒலியைத் தெளிவாகக் கேட்க முடிந்தது.

ஏனு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவண்ணம், "நாளைக் காலையிலேயே நாம் இங்கிருந்து புறப்பட வேண்டும் என்பதை நினைத்தால், மனத்தை என்னவோ செய்கிறது!" என்று கூறினாள்.

மிஸ்டர் சோப்ரா கடைசி வாய்த் தேநீரையும் குடித்து விட்டுக் கோப்பையை மேஜை மீது வைத்தார்.

"வேறு என்ன செய்யலாம்? நாளை மறுநாள் நான் அலுவலகத்துக்குப் போக வேண்டுமே! மூன்று நான்கு நாட்களில் தில்லியிலிருந்து மந்திரி வருவதாயிருக்கிறார்!"

தனது முகத்தைத் திருப்பிய ஏனு, ஏழு வகை நிறம் கொண்ட வண்ணத்துப் பூச்சி ஒன்று பறப்பதைக் கண்டாள். பிறகு, "திரும்பவும் அந்த லக்னோதானு? அந்த வெய்யில்! அந்தச் சந்தடி! அப்பப்பா! பழையபடி அதே வாழ்க்கை! நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறது!" என்று அலுத்துக் கொண்டாள்.

மிஸ்டர் சோப்ரா சிரிக்க வேண்டும் என்பதற்காகச் சிரித்தார்:

"ஆனால், அன்பே! நற்கனவை அதிக நேரம் நீட்டினால் அது தீய கனவாகக் கூட மாறி விடக் கூடும். அது பயங்கரமாவதற்கு முன்னால் முற்றுப் பெற்றுவிட வேண்டும். அதோடு நண்பனின் பங்களாவில் அதிக நாட்கள் இருப்பதும் சரியல்ல. மரியாதை — மதிப்பு குறைந்துவிடும். இலவசமாக இடம் கிடைத்து விட்டதனால் ஆள் அசைய மாட்டேன் என்கிறான் என்று அவன் நினைக்கக் கூடும் அல்லவா......?"

ஏனு மறுக்கும் தோரணையில், "அப்படியெல்லாம் அவர் நினைக்க மாட்டார். உங்கள் நண்பர் மிஸ்டர் சோகானி மிகவும் நல்ல மனிதர். நாம் அவரது மாளிகையில் ஒரு மாதம் இருக்க விரும்புகிறோம் என்பதைக் கேள்விப்பட்டதும் அவர் எவ்வளவு மகிழ்ச்சியுற்றார், தெரியுமா? 'பத்து ஆண்டுகளாக அந்தப் பங்களா காவல்காரனின் பொறுப்பில் காலியாகவே இருக்கிறது. நீங்கள் அங்கே போயிருந்தால், பங்களாவைப் பார்த்துக் கொள்ளவாவது செய்வீர்களல்லவா?' என்று சொன்னாரே, நினைவில்லையா?" என்றாள்.

"மெய்தான்!" மிஸ்டர் சோப்ரா ஒரு முறை தம் மனைவியைக் கடைக் கண்ணால் பார்த்து விட்டுக் கூறினார்: "சோகானி நல்ல மனிதன்தான். ஆனால் அருமை தெரியாதவன். மக்கள் நடமாட்டமற்ற இந்த மலைப் பிரதேசத்தில் இந்தப் பங்களாவை எவ்வளவு அழகாக அலங்கரித்து வைத்திருக்கிறான், பார்த்தாயா? இங்குள்ள மேஜை நாற்காலி போன்ற தளவாடங்களே நாலாயிரம், ஐயாயிரம் பெறும். வெள்ளியினால் காப்பி, டின்னர் செட்டுகள் செய்து வைத்திருக்கிறானே, அவைதான் என்ன மூவாயிரம் நாலாயிரத்துக்குக் குறைவாகவா இருக்கும்? இதிலே வேடிக்கை என்னவென்றால், கடந்த பத்தாண்டுகளில் அவன் ஒரு முறையாவது இந்த இடத்தை எட்டிப் பார்த்ததே இல்லையாம்."

"அது மெய்தான். ஆனால் நீங்கள் ஒரு விஷயத்தை மறந்து பேசுகிறீர்கள்!" ஏனுவின் குரலில் கிண்டல் தொனித்தது. "உங்கள் நண்பர் தொழிலில் பணம் பணமாக அள்ளிக் கொட்டுகிறார். அவருக்கு இந்த எட்டாயிரமும் பத்தாயிரமும் எம்மாத்திரம்? ஏழெட்டு ரூபாய்க்குச் சமமாகுமா? இந்தப் பங்களாவை நினைத்துக் கொண்டிருந்தால் அவர் தொழில் என்ன ஆவது?"

"நீ சொல்வதும் மெய்தான்!" என்று மிஸ்டர் சோப்ரா தம் தலையையசைத்து ஆமோதித்தார்.

ஸ்ரீ சோப்ரா ஐரோப்பா சென்று வந்தவர். ஆங்கிலேய மாது ஒருத்தியை மணந்து கொண்டு திரும்பியவர். அவர் பார்க்கும் வேலை மதிப்பும் மரியாதையும் மிகுந்தது. தமது மேலதிகாரிகளிடம் நல்ல செல்வாக்கு படைத்தவர். ஆயினும் செல்வந்தர்கள் வாழும் தெருவிலே வாடகைக்குப் பெரிய பங்களா எடுத்துக் கொண்டு, கார் முதலிய ஆடம்பரப் பொருள்களோடு, கிளப்புக்குச் சந்தா, வருமான வரி என்று வேறு கட்டிக் கொண்டு, அவர் எப்படித்தான் வாழ்க்கை நடத்தி வந்தாரோ? அவர் நடத்தும் வாழ்க்கையில் உள்ள சிரமங்கள் அவருக்குத்தான் தெரியும். எப்பொழுதுமே அவரது குடும்பப் பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட்தான். மாதா மாதம் கடன் சிறுகச் சிறுக ஏறிக் கொண்டே போய்க் கொண்டிருந்ததே தவிரக் குறைவதாகக் காணோம். அவர் பெரிய அதிகாரியானதால், சோகானி அவருக்கு மரியாதை செலுத்தி வந்தார். ஆனால் செல்வத்தைக் கொண்டு பார்க்கப் போனால் அவர் சோப்ராவைப் போன்ற நாலைந்து அதிகாரிகளை விலைக்கு வாங்கக் கூடியவர். இது சோப்ரா அவர்களுக்கும் தெரியாத விஷயமல்ல.

நண்பர் சோகானியையும் தம்மையும் ஒப்பிட்டுப் பார்த்த பொழுது சோப்ராவின் உள்ளத்திலே சிறிது நேரத்துக்குப் பொறாமை உணர்ச்சி தீயெனப் புகைந்து கொழுந்து விட்டுக்கூட எரிந்தது. பிறகு 'பைப்பை' எடுத்துத் தீக்குச்சியினால் அதைக் கொளுத்திவிட்டவண்ணம், "பணம் இருந்தால் ஆயிற்றா? வடிகட்டின முட்டாள் அவன். இத்தனை விலை உயர்ந்த பொருள்களை ஒரு காவற்காரனை நம்பி விடலாமா? என்றைக்காவது ஒரு நாள் அவன் எல்லாப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு கம்பி நீட்டி விட்டால்....?" என்ற ஐயத்தை எழுப்பினார்.

ஏனு மறுபடியும் எதிர்த்து வாதாடினாள்.

"பத்து ஆண்டுகளாக இந்தப் பொருள்களை இப்படிப் பாதுகாத்து வருகிறவன், நீங்கள் சொல்வது போலத் தீய நோக்கம் படைத்தவனாயிருந்தால், எப்பொழுதோ எடுத்துக் கொண்டு ஓடியிருக்க மாட்டானா?"

"இப்பொழுதுகூடச் சில பொருள்களை அவன் பதுக்கியிருக்க மாட்டான் என்பது

என்ன நிச்சயம்?'' வாதத்துக்கு வாதம் புரியும் முறையில் கேட்டார் மிஸ்டர் சோப்ரா.

ஏனு சிரித்தான். ''அவன் அப்படிச் செய் திருந்தால், இவ்வளவு நாட்கள் தெரிந் திருக்கும். பத்து வருஷங்களுக்கு முன் உடைத்த அரை டின் 'ஜெல்லி' கூட அப் படியே வைத்திருக்கிறதே! இந்த மலை நாட்டு மக்கள் எப்பொழுதுமே மிகவும் நாணயமுள்ள வர்கள்!'' என்று பரிந்து பேசினுன்.

''நாணயமுள்ளவர்களா?'' — மிஸ்டர். சோப்ரா புருவத்தை நெறித்த வண்ணம் கேட்டார். ''ஏழைகளும் இழிகுலத்தோரும் எங்கேயாவது நாணயமுள்ளவர்களாக இருந்த துண்டா? நான்தான் என் அலுவலகத்தில் தினமும் பார்க்கிறேனே! பியூனிலிருந்து குமாஸ்தா வரையில் எல்லாருமே பென்சில், பின், கிளிப், காகிதம் என்று எதையாவது சுருட்டிக் கொண்டு போகவே பார்க்கிறூர்கள். கொஞ்சம் கண் அயர்ந்திருந்தால் போதும், எதையும் 'அபேஸ்' செய்து கொண்டு போய் விடுவார்கள். ஒரு தடவை என் அலுவலகத்தி லேயே ஒரு குமாஸ்தா இரண்டு பென்சில்களை அமுக்கிக் கொண்டு போகப் பார்த்தான். நான் திருட்டைக் கண்டுபிடித்து அதே கையோடு சரியான தண்டனையும் அவனுக்குக் கொடுத்தேன். என்ன செய்தேன், தெரியுமா? உடனே பிடித்து அதே இடத்தில் அவனை வேலை நீக்கம் செய்து விட்டேன்!''

''இரண்டு பென்சில்களுக்காகப் பாவம், ஒருவனை வேலை நீக்கம் செய்து விட்டீர்களா? மிகவும் கல்நெஞ்சக்காரர் நீங்கள்!'' வேலை நீக்கம் செய்யப் பெற்றவனை எண்ணி இரக்கம் தொனிக்கும் குரலில் பேசினுன் ஏனு.

தமது கோட்டின் பெல்ட்டை இன்னும் சற்று இழுத்துக் கட்டிய வண்ணம், ''அப் படிச் செய்தால்தான் அந்தப் பயல்களுக்குப் புத்தி வரும். ஒருவனுக்குக் கிடைத்த தண் டனையைக் கண்டபின், மற்றவர்களாவது சரி யாக நடந்து கொள்வார்கள் அல்லவா? அலு வலகத்தில் ஓர் ஒழுங்குமுறை வேண்டும் என் ருல், சில சமயம் இப்படி யெல்லாம் கடுமை யாக நடந்து கொள்ளத்தான் வேண்டியிருக் கிறது! என்ன செய்வது?'' என்ருர் மிஸ்டர் சோப்ரா.

தமது பதவி, தமக்குள்ள மதிப்பு, தமக் குள்ள அதிகாரம் — இவற்றை எண்ணி மிஸ்டர் சோப்ரா மனத்துக்குள்ளேயே மகிழ்ந்து பூரித்துப் போனுர். அந்த மகிழ்ச்சி யில் அவருக்கு அவரையறியாமலே ஒரு புல் லரிப்புக்கூட ஏற்பட்டது.

இதே சமயம் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

பங்களாவின் நம்பிக்கைக்குகந்த காவ லாளி நீச்பால், ஏழெட்டு வயதுள்ள ஒரு சிறுவனை இழுத்து வந்து அவர்களுக்கெதிரே நிறுத்தினுன்.

''என்ன விஷயம்?'' — வேட்டைப் பொரு ளின் வாசனையை அறிந்து சிங்கம் துள்ளுமே, அது போலத் தலையைத் திருப்பிக் கேட்டார் மிஸ்டர் சோப்ரா.

''இவன் பொல்லாத பையன், எசமான்! ஆப்பிள் மரத்திலே ஏறி....''

''என்ன?'' — எதிலும் ஒழுங்குமுறையைக் கடைப் பிடிப்பதில் உற்சாகம் கொண்ட மிஸ்டர் சோப்ரா தீ கக்கும் கண்களுடன் பையனைப் பார்த்தார். ''என்டா, ஆப்பிள் திருடினுயா?'' என்று கேட்டார்.

''ஆமாம், எசமான்!'' விடையளித்தது பையன் அல்ல; காவலாளி நீச்பால்.

பையன் காவலாளியின் கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எப்படியாவது ஓடி விட வேண்டும் என்று வீண் முயற்சி செய்து கொண்டிருந்தான். ஆனல் மிஸ்டர் சோப்ராவின் சிவந்த கண்களைப் பார்த்ததும் அப்படியே அயர்ந்து போசாமல் நின்று விட் டான். அத்தனை நேரமும் அஜாக்கிரதையாக இருந்துவிட்ட மான், பார்வையைத் தூக்கிய தும், எதிரே நான்கைந்து முழத் தூரத்தி லேயே சிங்கத்தின் தீக்கண்களைக் காண நேர்ந் தால், எப்படி நடுங்குமோ, அப்படிக் கதி கலங்கிப் போய் விட்டான் பையன்.

''என்டாலே! உன் பெயரென்ன?'' இடி முழக்கம் போன்ற குரலில் கேட்டார் மிஸ்டர் சோப்ரா.

''லல்லு!''

''லல்லு!''—மிஸ்டர் சோப்ரா புருவத்தை நெறித்து. ''ஆப்பிள் திருடத்தானே வந் தாய்?'' என்ருர்.

பையன் லல்லு பலியாடு போலப் பேசாமல் நின்ருன்.

ஏனு பையனுக்குப் பரிந்து கொண்டு, ''போனுல் போகிறுன். அவனை விட்டு

விடுங்கள்! இந்த ஆப்பிள்களை இங்கே யார் தின்கிறார்கள்?'' என்றான்.

காவலாளி ரீச்பாலுக்கும் அரை குறையாக ஆங்கிலம் வரும். எனவே, தன் பற்களைக் காட்டி மிகுந்த பணிவோடு, ''ஆமாம், ஆமாம்! இந்த ஆப்பிள் ரொம்பப் புளிப்புத் தான்!'' என்றான்.

ஆனால் மிஸ்டர் சோப்ராவுக்குத் தம்மைப் பற்றி நெறிமுறை தவறாத நீதிபதி என்ற எண்ணம். ''புளிப்பாயிருந்தால் என்ன ? இனிப்பாயிருந்தால் என்ன? பிறருடைய பொருளைக் கேட்காமல் எடுப்பது திருட்டுத் தானே? திருட்டுப் பழக்கம் ஒரு தடவை ஏற் பட்டு விட்டால், அது அந்தப் புளிப்பு ஆப்பி ளோடு மட்டும் நிற்காது; பெரிய திருட்டில் போய்த்தான் நிற்கும். சிறு நாய்க் குட்டி வேட்டை நாயாக ஆகும் கதைதான். எடுத்த வுடனேயா திருடுபவர்கள் கொள்ளைக்காரர் களாகி விடுகிறார்கள்? இன்றைக்கு ஆப்பிள், நாளைக்குக் காசு, பணம். எனவே இப்போதே இவனைக் கண்டித்து வைப்பதுதான் நல்லது!'' என்றார் கண்டிப்பாக.

''கண்டிப்புக்கும் ஓர் எல்லை வேண்டும்!'' சூழ்நிலையின் கம்பீரத்தைக் குறைக்கும் நோக் கத்துடன், ''பொதுவாகச் சிறு குழந்தைகள் எல்லாரும் இப்படித்தான் இருப்பார்கள்!'' என்று கூறினாள் ஏனு.

''இப்படித்தான் இருக்குமா?'' பயந்து நடுங்கிக் கொண்டே நிற்கும் பையனுடைய அரை நிஜாரையும், பல இடங்களில் ஒட்டுப் போட்டுத் தைத்த சட்டையையும் ஒரு முறை கூர்ந்து பார்த்து விட்டுச் சோப்ரா கூறினார்: ''நான் மேநாடு போய் வந்தவன். அங்கும் குழந்தைகள் இருக்கின்றன. ஆனால் இத்தகைய தவறான பழக்கத்தை அங்கே நான் எங்கும் கண்டதில்லை. தெரு ஓரத்தில் விற் பனைக்குச் செய்தித் தாள்கள் வைத்திருப் பார்கள். ஆனால் காசு போடாமல் யாரும் எடுக்க மாட்டார்கள். கடைகளில் உள்ள காட்சி அலமாரிகளில் எத்தனையோ பொருள் களை ஜோடித்து வைத்திருப்பார்கள். அவை களை யாருமே தீண்ட மாட்டார்கள். அவ் விடத்துக் குழந்தைகள் இவ்விடத்துக் குழந் தைகள் போல் இருக்குமானால்.......''

ஏனு ஓர் புன்னகை பூத்தாள். அதில் ஏள னம் தொனித்தது.

''என் அன்பே! நானும் மேநாட்டவள்தான். லண்டன், பாரிஸ், பெர்லின் முதலிய இடங் களில் எத்தனை எத்தனையோ பெரிய பெரிய கடைகள் இருக்கின்றனவே, அங்கெல்லாம் துப்பறியும் நிபுணர்கள் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரி யுமோ, தெரியாதோ? எனக்குத் தெரியும்!'' என்றாள் ஏனு.

ஏனு அப்படிப் பேசியது மிஸ்டர் சோப்ரா வுக்குப் பிடிக்க வில்லை. ''சரி, அந்தப் பேச்சை விடு. இந்தப் பயலை என்ன செய்யலாம், சொல்லு!'' என்றார்.


''என்ன செய்வது? மன்னித்து விட்டு விடுங்கள்!'' என்றாள் ஏனு.

''ஊஹூம்! அதெல்லாம் முடியாது!'' பெரும் சீற்றத்துடன் அந்த நோஞ்சல் பையனை ஒரு முறை பார்த்தார். ''இவனை இப்படியே சும்மா விட்டு விட்டால் பிற்காலத் தில் இவனுக்குப் பெரும் துணிச்சல் பிறந்து விடும். இன்று இங்கே கனி திருடியவன் நாளை எங்கேயாவது கன்னம் வைக்க மாட் டான் என்று எப்படி உறுதி கூற முடியும்?''

''என் அன்பே! கவைக்குதவாத காரியத்தை நீங்கள் மிகவும் பெரிதுபடுத்துகிறீர்கள். இரண்டு புளிப்பு ஆப்பிள் பழங்களுக்காக...''

தம் பருத்த உடலை மிகச் சிரமப்பட்டுத் தூக்கிக் கொண்டு நாற்காலியிலிருந்து எழுந் தார் சோப்ரா. உடல் குலுங்க, உடை சலசலக்க, அவர் இரண்டு மூன்று முறை இங் கும் அங்கும் நடை போட்டார். தூக்குத் தண்டனை வழங்கப்போகும் நீதிபதி யோசனை செய்வது போல் இருந்தது அவர் போட்ட அந்த நடை. அவர் பாதங்களின் பாரம் தாளாமல் பூமி அழுந்தி அதிர்ந்தது.

மிஸ்டர் சோப்ரா தமது பதவிக்கே உரிய செருக்கோடு ஏனுவை ஒருமுறை பார்த்தார். பிறகு கண்டிப்பான குரலில், ''நீ வர வர உணர்ச்சிக்கு அடிமையாகிக் கொண்டிருக்கி றாய், ஏனு! திருடிய குற்றத்துக்காக இப் பொழுது பையனுக்குத் தகுந்த தண்டனை யளிப்பதே நம் கடமை. அது மட்டுமின்றி, இந்தப் பங்களாவோ, இந்தப் பங்களாவில் உள்ள எந்தப் பொருளுமோ நமக்குச் சொந்த







மில்லை. நாம் நமது நண்பனின் வீட்டில் ஒரு மாதம் தங்கிப் போவதற்காக வந்திருக்கிறோம். அவன் தனது எல்லாப் பொருள்களையும் நம்மை நம்பி ஒப்படைத்திருக்கிறான். பார்க்கப் போனால் அவன் பொருள்களுக்கெல்லாம் நாமே பொறுப்பாளிகள். இங்குள்ள சிறு துரும்பு கெட்டுப் போனாலும் நாம்தான் பதில் சொல்லியாக வேண்டும். அதனால்....'' என்றார்.

''அதனால்......?'' — ஏனுவின் குரலில் அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் துடித்தது.

மிஸ்டர் சோப்ரா சுருக்கமாகப் பதில் அளித்தார், ''இரு. இதோ வந்து விட்டேன்!'' என்று.

அடுத்த இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் பங்களாவுக்குள் சென்று திரும்பி வந்தார். அவர் கையில் ஒரு மெல்லிய பிரம்பு இருந்தது.

ஏனு சிறிது பயந்த குரலில், ''இது எதற்கு என் அன்பே!'' என்று கேட்டாள்.

''எதற்கா? என்றென்றும் நினைவு வைத்துக் கொள்ளும்படியாக இவனுக்கு ஒரு தண்டனை அளிக்கப் போகிறேன். அதற்காக!'' என்று கூறி லல்லுவின் அருகில் சென்று, ''நீட்டடா கையை!'' என்றார்.

காவலாளி ரிச்பாலுக்குக் கூட அதைக் காண வருத்தமாயிருந்தது. ''எசமான்!'' என்று தயங்கியபடியே இழுத்தான்.

ஆனால் அதற்கு முன்பாகவே, சோப்ராவின் கைப் பிரம்பு லல்லுவின் உடலைச் சிறிதும் இரக்கமின்றிப் பதம் பார்க்கத் தொடங்கி விட்டது. மிஸ்டர் சோப்ரா சாமானியப் பட்ட அதிகாரியா? தம் அலுவலகத்து ஜபர்தஸ்தை யெல்லாம் இங்கும் காட்டலானார், அந்திக்குச் சிறிதும் இடம் தரவில்லை. பையனின் கூக்குரலைக் கேட்டு, மனோகரமான மாலை வேளையும், சுற்றுப்புறத்து எழில் மிகுந்த சூழ்நிலையும்கூட நடு நடுங்கின. 'பைன்' மரத்திலிருந்து நான்கைந்து காக்கைகள் பயந்து போய்ச் சிறகடித்துக் கொண்டு பறந்து சென்றன.

சிறிது நேரம் எதுவும் செய்யத் தோன்றாமல், பிரமித்து நின்ற ஏனு, ஓடிப் போய் மிஸ்டர் சோப்ராவின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''போதும், போதும்! பிசாசாக அடிக்காதீர்கள். பிறகு பையன் செத்துப் போய் விடுவான்!'' என்றாள்.

மிஸ்டர் சோப்ரா பெருமூச்சு விட்டவண்ணம், ''என்ன இருந்தாலும் உனக்கு இப்படி இளகிய மனம் கூடாது ஏனு! குற்றம் என்று புரிந்தால், அதற்குரிய தண்டனையை யாரும் அடைந்துதானே ஆகவேண்டும்!'' என்று கூறினார்.

நண்பனின் பங்களாவில், ஒரு மாதம் உல்லாசமாக இருந்தபின், மிஸ்டர் சோப்ரா லக்னோவுக்குப் புறப்பட்டார். காவலாளி ரிச்பால் அவருடைய பொருள்களை யெல்லாம் மோட்டாரில் வைத்தான். ஏனு, நம்பிக்கைக்குகந்த அவனது பணிகளுக்காக மகிழ்ந்து ஐந்து ரூபாய் இனாம் கொடுத்தான்.

ஏனுவின் விழிகளில் கண்ணீர் குத்திட்டு நின்றது. தனது கணவனின் கொடூர குணத்தையும், ரிச்பாலின் எசமான விசுவாசத்தையும் எண்ணிப் பார்த்த பொழுது, அவளது பூவுள்ளம் மிகவும் புழுங்கியது. சொல் ஒன்று செயல் ஒன்றாக இருக்கும் தன் கணவனை அவளால் திருத்த முடியவில்லை. 'எத்தனை ஈவு இரக்கம் என் உள்ளத்தில் இருந்தென்ன? என் கணவனின் இழி செயலை என்னால் தடுக்க முடியவில்லையே! வெறுத்ததெல்லாம் பால் என்றிருக்கும் இந்த ரிச்பாலின் கால்காசு பெறுவாரா என் கணவர்?' நீர் கோத்த கண்களுடன் இப்படி எண்ணியவாறே அவள் மோட்டாரில் ஏறினாள்.

ரிச்பாலும் மிகுந்த நன்றியறிதலுடன் பல முறை அந்தத் தம்பதிகளுக்கு வணக்கம் தெரிவித்து விடை கொடுத்தான்.

மோட்டார் புறப்பட்டுப் போனபின் ரிச்பால் மூலைக் கடைக்குச் சென்று ஒரு பீடி வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டு பங்களாவுக்குத் திரும்பினான். பங்களாவைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தமாக வைக்க வேண்டும், பொருள்களை யெல்லாம் ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டே அவன் அந்தப் பங்களாவுக்குள் நுழைந்தான்.

பூட்டைத் திறந்து கொண்டு ரிச்பால் முதன் முதலில் போஜன சாலைக்குத்தான் சென்றான். வெள்ளி டின்னர் ஸெட், காப்பி ஸெட் முதலிய விலை உயர்ந்த பொருள்கள் அங்கே அலமாரியில் இருந்தன. 'அவற்றைச் சரி பார்த்து அலமாரியில் எடுத்து வைத்து மூட வேண்டும். வீட்டு எசமானரின் விலை உயர்ந்த பொருள்களாயிற்றே அவை!' என்ற நல்ல எண்ணம்தான் காரணம்.

ஆனால் அலமாரியைத் திறந்து பார்த்ததும் அவன் விழிகள் விழித்தது விழித்தபடியே நிலைக் குத்தலிட்டு நின்றன.

கண்ணாடி, பீங்கான் பாத்திரங்களைத் தவிர, அங்கே வெள்ளிப் பாத்திரங்கள் எதையுமே காணோம். வெள்ளி ஸ்பூன்கூட இல்லையென்றால், அதிகம் சொல்லுவானேன்?

பிரமித்து நின்ற ரிச்பாலுக்குத் திடீரென்று நினைவு வந்தது! மிஸ்டர் சோப்ராவின் 'காபி ஸெட்' பெட்டி அவ்வளவு கனத்ததே! இதனால்தானா? நேற்று அவர் தம் பொருள்களை யெல்லாம் மூட்டை கட்டும் போது அவனை அங்கே வரக்கூட விடவில்லையே, இதற்காகத்தானா? அவனை மட்டுமென்ன? அவர் மனைவி ஏனுவைக்கூட அல்லவா அவர் ஒத்தாசைக்குக் கூட்டிக் கொள்ளவில்லை?

ரிச்பாலுக்குத் திடீரென்று உடலே மரத்து விட்டது போலத் தோன்றியது. காலடியிலிருந்த பூமி நழுவிக் கொண்டே போவது போலவும் பட்டது. முதல் நாள் மிஸ்டர் சோப்ரா கையில் வைத்திருந்தாரே, அந்தப் பிரம்பே, அவனுக்குக் கண்ணுக்குத் தெரியாமல் வந்து, அவன் முதுகுத் தோலை உரித்து ரத்தக் களரியாகச் செய்வது போலவும் பட்டது! கண்கள் இருட்டிக் கொண்டு வர அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு தொப்பென்று கீழே உட்கார்ந்து விட்டான் காவலாளி ரிச்பால். —தமிழாக்கம்: **ரா. வீ.**

பத்தினிக் கோட்டம்

அத்தியாயம் நாற்பத்தைந்து

உயிரினும் பெரியது



இளங் காற்றில் அசைந்து உதிரும் மகிழம் பூக்கள்போலச் சமந்தபத்திரரின் வாக்கிலிருந்து மென்மையாகவும் தெளிவாகவும் சொற்கள் வெளிப்பட்டன: ''ஆம், இளவரசி! தமிழ் நாட்டில் ஒரு காலத்திலே சமண சமயம் ஓங்கிப் பரவி உன்னத நிலையில் இருந்த தென்னவோ உண்மைதான். அந்த நிலை கடந்த இரண்டு தலைமுறைகளாகக் கட்டு விட்டுச் சரிந்து வருகிற தென்பதும் உண்மைதான். அதனைப் பழைய நிலைக்கு உயர்த்திக் கொண்டு போகப் பாடுபட வேண்டியது சமணராகிய ஒவ்வொருவரின் கடமை என்பதிலும் சந்தேகமில்லை. அந்தக் கடமையை எவருடைய தூண்டுதலும் வேண்டுதலும் இன்றித் தன்னிச்சையாகவே உணர்ந்து செயலாற்ற ஆர்வம் கொண்ட தங்களையும் தங்கள் தந்தையார் விஷ்ணுவர்த்தனரையும் மனமாரப் போற்றுகிறேன். சமண சமயத்தினிடம் தங்களுக்குள்ள பேரன்புக்கும் உறுதிப்பாட்டுக்கும் தலைவணங்குகிறேன். ஆனால் அந்த ஆர்வப் பணிக்குத்



ஜெகசிற்பியன்

தாங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும்தான் என்னால் ஏற்க முடியாமல் இருக்கிறது.''

நிலவுத் தாமரை போல் தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள் உத்தமசீலி. அரைக் கண் மூடிய நிலையில் சிறு பொழுது மௌனமாக இருந்த சங்கத் தலைவர் மீண்டும் தம் பேச்சைத் தொடர்ந்தார்: ''பல்லவ நாடு இன்று சளுக்கிய விக்கிரமாதித்தரிடம் அடிமைப் பட்டுக் கிடக்கிறது. இந்தச் சூழ் நிலையில் இங்கே நலிவுற்றுக் கிடக்கும் சமண சமயத்தை அவரது அதிகார ஆதரவின் துணை கொண்டு வலிவூட்டி நிமிர்த்திவிடலாம் என்று நம்பியே ஆந்திர இளவரசியார் இந்த நாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறார் என்று அறிகிறேன். ஆந்திர மன்னரும் தமது அந்த இலட்சிய விருப்பத்தைச் செயலாக்க இப்படியொரு சந்தர்ப்பத்தை வெகு காலமாகவே எதிர் பார்த்திருந்ததால்தான் இத்தனை அவசரமாகத் தம் குமாரியை இங்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்றும் நினைக்கிறேன். அரசவர்க்கத்தினர் எந்தக் காரியத்தைச் செய்வதானாலும் அதற்கேற்ற ஓர் அரசியல்



சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வார்கள், அல்லது உருவாகும் வரையில் காத்திருப்பார்கள் என்பதனையே இது நிரூபிக்கிறது. ஆனால், ஆந்திர மன்னரும் அவரது குமாரியும் இங்கே ஆற்ற விரும்பும் பணியைப் பொறுத்தவரையில் அவ்வாறு செயல்பட நினைப்பது முற்றிலும் தவறு. இன்றையச் சூழ்நிலையில் அந்த இலட்சியப் பணி இங்கே தொடங்கப் பெறுமானால் இந்த நாட்டிலுள்ள பிற சமயங்களைச் சார்ந்த பெருமக்கள் என்ன நினைப்பார்கள் என்பது ஒரு புறம் இருக்கட்டும்; சமணர்களாகிய நாங்கள் அதுபற்றி என்ன நினைக்கிறோம் என்பதை மட்டும் இப்போதைக்குச் சொல்கிறேன்."

உத்தமசீலியின் முகத்தை ஒருகணம் ஊடுருவிப் பார்த்த சமந்தபத்திரர்



அமைதியான குரலில் மேலும் கூறினர்: ''உன்னத நெறிகளும் உயர்ந்த குறிக்கோள்களும் கொண்ட சமண சமயம் பழைய சீரும் சிறப்பும் செல்வாக்கும் பெற்றுத் தமிழகமெங்கும் தழைத்துப் பரவ வேண் டும் என்பதில் எங்களுக்குத் தணியாத வேட்கை உண்டு. இதற் காக நாங்கள் எந்தத் தியாகமும் செய்ய எப்போதும் தயாராக இருக்கிறோம். எங்களின் இந்த வேட்கைக்கும் விருப்பத் துக்கும் உதவியாக எங்கிருந்து யார் வந்தாலும் அவர்களை இரு கரங்களையும் நீட்டி வரவேற்கச் சித்தமாயிருக் கிறோம். அந்த உதவிக்காக அவர்கள் எங்கள் உயிரையோ, உடலையோ, உடைமையையோ விலை வைத்துக் கேட்டாலும் அவற்றை அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், அவற்றுக்கும் மேலாக எங்களிடம் ஒன்று உண்டு; அதுதான் எங்கள் குடிமையுரிமை. அதை மட்டும் நாங்கள் விலை கூறி விற்க ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டோம். சமண சமயமே அழிவதாயினும் நாங்கள் அதற்குச் சம்மதியோம். ஏனென் ருல், சமணத்தை எங்கள் மேல் மூச்சாகவும், தேசிய உரிமையை எங்கள் கீழ் மூச்சாகவும் கொண்டிருக்கிறோம். மேல் மூச்சு விட்டே மனிதர் வாழ்ந்துவிட முடியாது; கீழ் மூச்சும் வேண்டும். இவற்றில், ஒன்றை அடைத்து இன்னொன்றுக்கு வழி செய்ய எங்களால் ஆகாது. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் கொள்கை கொண்ட சமணர்களாகிய நாங்கள், மண்ணையும் மக்கள் பிரிவையும் வைத் துப் புற வாழ்க்கைச் சௌகரியத்துக் கென அமைத்த ஒரு குறுகிய கோட் பாட்டின் தலைச் சொல்லுக்கு இத்தனை முன்னிடமும் முக்கியத்துவமும் அளிக் கலாமா என்று இளவரசியார் கேட்க லாம். அம்பர வெளியில் பறந்து திரியும் பறவைகூட ஆகாயத்திலேயே இருந்து விடுவதில்லை; பூமியிலுள்ள ஒரு மரத்தை நாடி இறங்கி வந்து அதில் சிறுபொழுதாகிலும் தங்கியிருந்தே ஆக வேண்டியிருக்கிறது. அப்படித் தங்கி யிருக்கும் வரையில் அந்த மரமே தனக்குச் சொந்தம் என்றும் அது எண்ண வேண்டி யிருக்கிறது. அவ்வெண்ணம் பிறந்ததும் அந்த மரத்தை நேசிக்க வேண்டியும் இருக் கிறது. அதை யாரும் வெட்டிச் சாய்த்துவிடக் கூடாதே என்ற கவலையும் கரிசனமும் கொள்ள வேண்டியுள்ளது. அடுத்த மரத்தில் உள்ள ஆந்தையோ வல்லூறோ அந்த மரத்தில் வந்து இடம் பிடித்து விடாமல் பாதுகாக்க வேண்டியும் இருக்கிறது. சமணர்களாகிய எங்களுடைய நிலையும் இதுவேதான்.''

தம்மையறியாமலே தாம் உணர்ச்சி வசப்படுவதை அறிந்த சமந்தபத்திரர் சட்டென்று பேச்சை நிறுத்தினர். வெல வெலத்து நின்ற உத்தமசீலியோ வியர்வையில் கரைந்து கொண் டிருந்தாள். மனத்தில் படிந்த உணர்ச்சிக் கறையை அலம்பி விட்ட வர்போல் அமைதியாகத் தலைநிமிர்ந்த சங்கத் தலைவர் மேலும் கூறினர்: ''பல்லவநாட்டைக் கைப்பற்றிக் கொண்டிருக்கும் சளுக்கிய விக்கிரமாதித்தர் சமணசமயத்தைச் சார்ந்தவர் என்பதால் இங்குள்ள சமணப் பெருமக்கள் அனைவ ரும் அவரது ஆட்சியை வரவேற்று அவருக்கு ஆதரவு நல்கி விடுவர் என்று எதிர் பார்ப்பது அறியாமை. அப்படி ஆதரவு தருவது முறையாயின், ஒவ்வொரு நாட்டிலும்

உள்ள சிறுபான்மை மதத்தவரெல்லாம் தேசத் துரோகிகளாக இருக்க வேண்டும் என்கிறது. எந்த நாட்டு மக்களும் இத்தகைய இழிபெயருக்குத் தம்மை உட்படுத்திக் கொள்ள மாட்டார்கள். அவ்வாறு உட்படுவோர் மானிட குலத்தின் பெருமையையும், மதங்களின் உயர்வையும், குடிமையுரிமையின் மேன்மையையும் அறியாத புல்லர்களாகவே இருப்பர்; அப்படி உட்பட வேண்டுமென எதிர்பார்ப்போர் அவர்களினும் கீழான மாக்களாகவே இருப்பர். இது தவிர, இந்நாட்டில் இன்று சமண சமயம் வலி குன்றி ஒடுங்கியிருப்பதால் அதன் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட நாங்கள் — அந்த ஒரே இலட்சியத்துக்காகவேனும் — சமணரான சளுக்கிய மன்னரின் துணையை நாடிப் போவோம் என்றோ, அல்லது அவர் தரும் ஆதரவைப் பெற்றுக்கொள்வோம் என்றோ நினைப்பது முன்னதைவிடப் பெரும் பேதைமையாகும். ஏனென்றால், ஒரு மன்னனின் துணை கொண்டு அவனது அரசாங்கத்தின் ஆதரவிலே சமயத்தை வளர்க்க முற்படலாகாது என்னும் கொள்கையில் உறுதியாக நிற்பவர்கள் நாங்கள். கடந்த கால அநுபவங்களிலிருந்து கற்றுக் கொண்ட பாடம் இது. அரசாங்கத்தை நம்பிச் சமயத்தை வளர்ப்பதிலுள்ள ஆபத்து வேறு எதிலுமே இல்லை. இன்று சமண சமயம் ஒடுங்கி இருப்பதற்குக் காரணம், முன்பு அரசர்களையும் அரசாங்கங்களையுஞ் அது சார்ந்து இருந்ததுதான் என்பது எங்கள் அபிப்பிராயம். எனவே, மீண்டும் அந்தப் பெரும் தவற்றை நாங்கள் செய்யத் துணிய மாட்டோம். அரசாங்கம் சமயத்தைச் சார்ந்திருக்கலாம்; ஆனால் சமயம் அரசாங்கத்தைச் சார்ந்து இருக்கக் கூடாது. இதுவே எங்கள் அநுபவ முடிவு. 'சரி; சமண சமய வளர்ச்சிக்காக அல்லாவிட்டாலும், அதன் வலிமை குன்றப் பெரிதும் காரணராயிருந்த பல்லவரைப் பழி வாங்குவதற்காகவேனும் சளுக்கிய விக்கிரமாதித்தரை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாமே?' என்று கேட்கலாம். எங்கள் தேசபக்தியையும் ராஜ பக்தியையும் அறியாதவர்கள்தாம் இப்படிக் கேட்பார்கள். சமண மதச் சரிவுக்குப் பல்லவர்களே அடிகோலினர் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக மகேந்திரவர்மர்தான் இதை முன்னின்று நடத்தினர் என்பதிலும் ஐயமில்லை. ஆனால், அவர் சமண சமயத்தைத்தான் சரிக்க முயன்றாரே தவிர சமணர்களாகிய எங்களுக்கு என்னளவு ஊறும் செய்யவில்லை. அவரால் நாங்கள் எத்தகைய இடர்ப்பாடுகளுக்கும் உள்ளாகவில்லை. எங்களுக்கு எல்லா விதமான உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கி, எல்லையற்ற பேரன்புடனேயே நடத்தினர். அவருக்குப் பின் வந்த நரசிம்மவர்மரும் தமது தந்தை வழிச் சென்று எங்களைத் தந்காத்தார். இப்போதுள்ள பல்லவ குலச் செம்மலாம் எங்கள் பார்த்திபரான பரமேசுவர வர்மரோ, அவர்களைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு மேலானவர். ஆடகப்பொற் பானம் போன்றவர். அருங் குணங்களின் தலைமகனை அவர் சமயப்பொறை காக்கும் உத்தம சீலர். அவரது குறைகாண ஆட்சியில் இந்த நாடு கண்ட நிறைவான மகிழ்ச்சிக்கு உவமையே இல்லை. அந்த ஒப்பில்லா மாணிக்கத்தையா நாங்கள் பழி வாங்க எண்ணுவோம்? அந்தத் தூய மாமணிக்கா நாங்கள் வஞ்சனை செய்வோம்? அப்படிச் செய்தால் அது எங்களையே அழித்துக் கொள்வது போலாகுமே! அவ்வளவு பெரிய பழியைச் சுமக்க எளியவர்களான எங்களால் முடியாதே!''

இந்நேரம் வரையில் கூம்பிய குமுதமென நின்று கொண்டிருந்த உத்தம சீலி, ஏனோ இப்போது உற்சாக மலர்ச்சியுற்றுத் தலை நிமிர்ந்தாள்.

''வேங்கி இளவரசியாரிடம் இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். தமிழ் நாட்டில் சமண சமயம் குன்றியிருப்பதற்குச் சைவ சமயமே காரணம் என்றும், சைவம் சமணத்தை அழித்து விட்டதென்றும் சிலர் நினைக்கிறார்கள். இது பெருந் தவறு. சைவம் சமணத்தை அழிக்கவில்லை; சைவத்தால் சமணம் அழியவும் இல்லை. சைவம் சமணத்தைத் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டு வருகிறது; சமணம் சைவத்துள் ஐக்கியப்பட்டுக் கொண்டு போகிறது. இதுதான் உண்மை. விலை மதிப்பற்ற இரத்தினக் கற்கள் நிறைந்த ஒரு ஸ்படிகப் பேழை போன்றது சமண சமயம்; சைவ சமயமோ வெட்டியெடுத்த பசும் பொற்கட்டியை ஒத்தது. இளகும் தன்மையற்ற ஸ்படிகப் பேழையிலுள்ள சில உயரிய ஒளிக்கற்கள், உருகும் தன்மை வாய்ந்த தங்கக் கட்டியில் உருண்டு போய்ப் பதிகின்றன; அதனால் அதன் ஒளிக் கதிர்கள் மிகுதியாகித் தமிழ்கூறும் நல்லுலகைத் தன்பால் ஈர்க்கிறது. நேற்று நடந்ததும், இன்று நடப்பதும் இதுதான். மற்றப்படி சைவம் சமணத்தை அழிக்கவும் இல்லை; சைவத்தால் சமணம் அழியவும் இல்லை. மண்ணுக்காகவும் மகுடத்துக்காகவும் நடத்தப் பெறும் மறப் போருடன், சைவ சமண அறப் போரை — தத்துவப் போரை — ஒப்பிட்

டுப் பேசுவது அறியாமை. உயரிய நெறிகள் எப்போதும் ஒன்றுடன் ஒன்று இணையத்தான் செய்யுமே தவிர, ஒன்றையொன்று அழிக்க முயலாது. இது உணர்ந்து அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகளில் ஒன்றாகும். காலத்தை உருவாக்கும் சக்தி கொள்கைகளுக்கு உண்டு; கொள்கைகளை உருக்குலைக்கும் சக்தி காலத்துக்கு உண்டு. காலத்தை உருவாக்கிய சமணக் கொள்கைகள் இப்போது காலத்தின் சோதனைக்கு உள்ளாகி நிற்கின்றன. இதற்காக யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. சளுக்கிய விக்கிரமாதித்தரோ, ஆந்திர மன்னரோ, அவரது அருமைக் குமாரியோ சிறிதும் கவலைப்படத் தேவையே இல்லை.''

மகிழ்ச்சிக் கலகலப்புடன் காணப்பட்ட உத்தமசீலி புன்முறுவல் பூத்தாள். சமந்தபத்திரரோ வருத்த மேலீட்டால் குரல் கம்மக் கூறினார்: ''இறுதியாக இன்னுமொன்றைச் சொல்ல விரும்புகிறேன். 'சளுக்கிய விக்கிரமாதித்தருக்கு அரசியல் ரீதியில் எங்கள் ஆதரவைத் தர மறுப்பது சரி; சமணராகிய அவரைச் சமணர்களாகிய நாங்கள் எதிர்க்காமலாவது இருக்கலாம் அல்லவா?' என்று இளவரசியார் வாய் விட்டுக் கேட்காவிட்டாலும் மனத்துக்குள்ளாவது நினைக்கலாம். இந்தக் கேள்விக்கு நாங்கள் சொல்லக் கூடிய பதில் இதுவே: இல்லற தர்மத்தை ஏற்ற சமணர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பல விரதங்களில் 'திசை விரதம்' அல்லது 'திசை வரைதல்' என்ற ஒன்று உண்டு. எட்டுத் திசைகளிலும் ஒரு வரையறை செய்து கொண்டு அந்த வரையறைக்கு அப்பால் எக்காரணத்தை முன்னிட்டும் போவதில்லை என்பதே அது. மன்னவனாலும், மாடு மேய்க்கும் சின்னவனாலும் இந்த விரதத்தை அநுசரித்தே ஆக வேண்டும் என்பது விதி. இல்லற தர்மத்தை ஏற்ற விக்கிரமாதித்தரோ இவ்விரதத்தைக் காற்றில் பறக்க விட்டவர். எட்டுத் திசைகள் மட்டுமல்ல, பதினாறு திசைகளின் அடிவானங்களுக்கு அப்பாலும் படையெடுத்துப் போக வேண்டுமென்று ஆசைப்படுகிறவர். திசை விரதம் ஏற்றவராக இருந்தால் இந்தப் பல்லவ நாட்டின் எல்லையிலே அவர் காலடி எடுத்து வைத்திருக்க மாட்டார். இப்படிப்பட்ட சமணரல்லாத ஒரு சமணரைச் சமணர்களான நாங்கள் எப்படி எதிர்க்காமல் இருப்போம்?''


இதைக் கேட்டுக் கலீரென நகைத்தாள் உத்தமசீலி. ''நான் சுருக்கமாகச் சொல்ல வந்த விஷயங்களை, அடிகளார் மிக விரிவாகவே பேசி விட்டார்!'' என்று கூறி மீண்டும் சிரித்தாள் அவள்.

திடுக்குற்றவர் போல் நிமிர்ந்த சமந்தபத்திரர் அவளைப் பரபரப்புடன் பார்த்தார்.

''ஆமாம், அடிகளே! தாங்கள் முதலில் கூறியவாறு நான் எனது தந்தையாரின் பொருள் பலத்தையும், என் பெரிய தந்தையார் விக்கிரமாதித்தரின் ஆட்சியதிகாரத் துணையையும் கொண்டு, இந்த நாட்டில் நலிந்து கிடக்கும் சமணத்தை வலிவூட்டி வளர்க்க வேண்டும் என்ற இலட்சியத்தோடுதான் வந்தேன். ஆனால் அந்த இலட்சியம் நேற்றோடு சிதைந்து விட்டது. நான் வந்த நோக்கத்தை முற்றிலும் மாற்றிக் கொண்டு விட்டேன்; அதைத் தங்களிடம் சொல்லிப் போகவே இங்கு வந்திருக்கிறேன்.''

வியப்பும் திகைப்புமாக அவளைக் கூர்ந்து நோக்கிய சமந்தபத்திரர், ''இளவரசியார் சொல்வது?...'' என்று சொற்கள் சுருண்டு புரள இழுத்தார்.

''பொய்யுரை அல்ல, அடிகளே! மெய்யுரையே!'' என்று புன்னகை புரிந்த உத்தமசீலியின் முகம் மறுகணமே வெளிறிச் சிறுத்தது. பயப்பிராந்தியுடன் அங்குமிங்கும் பார்த்துக் கொண்ட அவள் ஓரடி முன்வைத்து, ''அடிகளா





ரிடம் இன்னொரு முக்கியமான சேதியையும் கூற விரும்புகிறேன்....'' என்றான் நடுங்கிய குரலில்.

சமந்தபத்திரரின் வியப்பு மேலும் முறுக்கவிட்டது. வாய் திறக்க இயலாதவர்போல் மௌனமாக அவளைப் பார்த்தார் அவர்.

''என் பெரிய தந்தையார் விக்கிரமாதித்தரும், தளபதி வில்வேலியும் சேர்ந்து அரசியல் அடிப்படையில் ஏதோ ஒரு தகாத திட்டத்தை வகுத்துக் கொண்டு; அதைச் சமண மதத்தின் பெயரால் சாதித்துக் கொள்ள எண்ணி, சிரவண பெள்குளத்துச் சமண சங்கத் தலைவரிடம் என்னுடைய பெயரையும் நான் இந்த நாட்டுக்கு வந்திருக்கும் நோக்கத்தையும் மட்டுமே கூறி அவரை அழைத்து வர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உண்மையை அறியாத நானும் அந்தச் சேதி கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தேன். ஆனால், நேற்றுத்தான் அவர்களுடைய அந்தரங்கம் என்ன என்பது எனக்குப் புலனாயிற்று. இந்த அநியாயத்தைத் தங்களிடம் தெரிவித்து, நமது மாபெரும் ஞான சிரேஷ்டரான அகளங்க அடிகளை வரவொண்ணாமல் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கு ஓடோடி வந்திருக்கிறேன்.'' — துடிப்பும் வெடிப்புமாகக் கூறினாள் அவள்.

உலகத்தின் பொய்களையும், புன்மைகளையும், வஞ்சனைகளையும், வாதுசூதுகளையும் கண்டறியாத — அவற்றின் காற்றையும் தீண்டியறியாத — மாதவ முனிவரான சமந்தபத்திரரின் அருள் மேவிய கருணைக் கண்கள் இந்தச் சேதியைக் கேட்டுக் கசிந்து நீரை உகுத்தன! பனியில் நனைந்த அசோக மரம்போல் விறைத்து நின்றிருந்த அவர், நீண்ட நேரத்துக்குப் பின் தமது விழியிமைகளை மெல்லப் பிரித்து உத்தமசீலியை வாஞ்சை பொங்கப் பார்த்தார். பிறகு அங்கிருந்து ஆதுரசாலையின் அறையை நோக்கி மௌனமாக நடந்தார். ஒன்றும் புரியாமல் குழம்பிய உத்தமசீலியும் அவரைப் பின்தொடர்ந்தாள்.

கல் படுக்கையில் படுத்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த அகளங்க அடிகளின் அருகில் போய் நின்ற சமந்தபத்திரர் மெல்லப் பின்னால் திரும்பி, ''இதோ பாருங்கள், இளவரசி! இவர்தான் சிரவணபெள்குளத்துச் சமண சங்கத் தலைவர் அகளங்க அடிகள்! விக்கிரமாதித்தருடைய அழைப்புக்கிணங்கிப் பல்லவ நாட்டுக்கு வந்ததன் பலனை இப்போது அவர் நன்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்!'' என்றார் துயரம் குமுறிய குரலில்.


அந்த விசாலமான அறையின் வாயிலண்டை ஒடுங்கி நின்று கொண்டிருந்த உத்தமசீலி இதைக் கேட்டுச் செவியில் இடி இறங்கினாற்போல் பதறித் துவண்டு சுவரில் சாய்ந்தாள்.


அத்தியாயம் நாற்பத்தாறு

ஜல சித்திரம்

வானத்தின் அடிவயிற்றில் படுத்திருந்த இளைய கதிரவன் கோலப் பொற்தாழி வடிவாய்க் குணதிசை விசும்பிலே தவ்வித் தவழ்ந்தேறிக் கொண்டிருக்கும் நேரத்தில் சமண சங்கப் பள்ளியிலிருந்து வெளியே வந்த பரமேசுவரவர்மன், பெருவளநல்லூர்ச் சாலைக்கு மேலண்டைப்புறமாக வளைந்து சென்ற ஓர் ஒற்றையடிப் பாதையில் மெள்ள நடந்து கொண்டிருந்தான்.

அந்தச் சமணப் பள்ளியின் ஒலிச் சுவடி நூல்நிலையத்தில் இருப்பது போன்ற பிரமை இன்னமும் அவனை விட்டு நீங்கவில்லை. அங்கே தன்னை





மறந்து 'படித்து'க் கொண்டிருந்த அப்பரின் தேன்சுவைப் பாக்கள் அவன் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தன. சமந்தபத்திரர் மட்டும் அங்கு வராமல் இருந்திருந்தால் இன்றைய முழுப் பொழுதையும் அந்த நூல் நிலையத்திலேதான் கழித்திருப்பான். அவனைக் காத்திருக்கச் செய்தமைக்காக வருத்தம் தெரிவித்த சமந்தபத்திரர், அதற்கான காரணத்தைக் கூறாமல், ''மன்னரவர்கள் சில தினங்களாவது இங்கு தங்கியிருக்க வேண்டும் என்பது என் விருப்பம், வேண்டுகோள்'' என்றார் அன்பும் பரிவுமாக. திடீரென்று அவர் இவ்வாறு சொன்னதைக் கேட்டதும் அவனுக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முடியாத நிலையில் தான் இருப்பதாக எண்ணித் தனக்குப் பாதுகாப்போ புகலிடமோ அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவர் இப்படிச் சொல்கிறார் என்று அவனுக்குப் பட்டது. தன்னைப் பார்க்கிறவர்களெல்லாம் தன்மீது அளவுக்கு மீறிய அநுதாபம் காட்டித் தனக்கு உதவியும் பாதுகாப்பும் அளிக்க முன்வருவதற்குக் காரணம், தன்னை ஓர் அசக்தனாகவும் தனித்து வாழ முடியாதவனாகவும் அவர்கள் நினைப்பதுதான் என்றும் அவனுக்குத் தோன்றியது. தன்னைப் பற்றிப் பிறர் அவ்வாறு எண்ணுவது அவனுக்குப் பேரவமானமாக இருந்தது. அதனால் அவன் அந்தச் சமண முனிவரின் அன்பு வேண்டுகோளை இதமாக மறுத்து விட்டு அப்போதே அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்து விட்டான். அவர் அவனைச் சில தினங்கள் தங்கியிருக்கும்படி கேட்காமல் இருந்திருந்தால், அவனே அவரிடம் அப்படியொரு கோரிக்கையை விடுத்திருப்பான். ஏனென்றால், அப்பள்ளியிலே நிலவிய அமைதியும், அங்கு வாழும் சமணத் துறவிகள் காட்டிய அன்பும், அவ்வற்புத ஓலைச்சுவடி நூல்நிலையமும் அவன் மனத்தை அந்த அளவுக்குக் கவர்ந்து விட்டிருந்தன. ஆனால், திடீரென்று அவனுள் ஏற்பட்ட தன்மான உணர்ச்சி அவனை அங்கிருந்து வெளியேறும்படி செய்து விட்டது.

'சமந்தபத்திரர் என்னை ஏன் சமணப் பள்ளியில் தங்கியிருக்குமாறு கேட்டுக் கொண்டார்? என்னுடன் இருந்த அவர் ஏதும் சொல்லிக் கொள்ளாமல் எங்கோ வெளியே போய்த் திரும்பி வந்ததும் திடுமென அப்படியொரு வேண்டுகோள் விடுக்கக் காரணம் என்ன? என்னுடைய நன்மையை உத்தேசித்துத்தான் அவர் அவ்வாறு செய்திருப்பாரோ? அப்படியானால் எனக்குத் தெரியாமலே என்னை நோக்கி ஏதோ ஓர் ஆபத்து வரப் போகிறது என்பதை அவர் முன்கூட்டியே அறிந்திருக்கிறார் என்றல்லவா ஆகிறது? உணர்ச்சிவயப்பட்டு அவரது அன்புக் கோரிக்கையை ஏற்காமல் வந்து விட்டேனே! அப்படி வந்த அவசரத்தில், அந்தச் சிரவண பெள்குளத்துச் சமண சங்கத் தலைவரான அகளங்க அடிகளைப் பற்றிய தகவல்களையும் கேட்க மறந்து விட்டேனே!'

குழப்பமும் திகிலும் மனத்தை உருட்டிப் புரட்டத் தன் நடை வேகத்தைச் சற்றே மிகுதியாக்கினான் பரமேசுவரவர்மன். ஆனால் அவன் நடையில் வேகம் ஏறவில்லை. இரவெல்லாம் கண் விழித்த களைப்பும் சோர்வும் கால்களைப் பின்னவிடச் செய்தன. காலை இளங் கதிரவனின் உறைப்பான வெயில் வேறு அவனை வாட்டி வதக்கியது.

துவண்டு நின்ற அவன் தன் பார்வையை அங்குமிங்குமாகப் பரப்பிச் செலுத்தினான். சற்றுத் தொலைவில் — ஆத்தி மரங்களின் சூழலிலே — ஒரு சிறிய குளம் இருப்பது தென்பட்டது. பெருவளநல்லூர்ச் சாலையோரம் இருந்த ஒரு ஜினாலயத்துக்குப் பின்னால் அது அமைந்திருந்தது. அவன் அந்தக் குளத்தை நோக்கி நடந்தான்.

சளுக்கியப் படையெடுப்புக்குப் பின் பல்லவ நாட்டிலுள்ள ஏரி, குளங்களெல்லாம் கவனிப்பாரற்ற நிலையில் வறண்டும் தூர்ந்தும் கிடந்ததால் எங்கும் தண்ணீர் வற்கடம் தலைவிரித்து ஆடிக் கொண்டிருந்தது. ஆனால் அதற்கு இந்தக் குளம் விதி விலக்கானதுபோல் நீர் நிறைந்து விளங்கியது. ஆதுரசாலையை நடத்தி வரும் சமண முனிவர்களே இதனையும் கண்காணிக்கிறார்கள் போலும்.

பளிங்கு போன்ற அந்தக் குளத்து நீரைப் பார்த்ததுமே பரமேசுவரவர்மனுக்குப் பெருவிடாய் தோன்றி விட்டது. குளக்கரையில் ஓங்கிப் பரந்து வளர்ந்து நின்ற ஓர் ஆத்தி மரத்தின் தடித்த கிளை ஒன்று கீழ்நோக்கிச் சரிந்து வளைந்து நீர்நிலை வரையில் நீண்டிருந்தது. அந்தக் கிளையின் ஓரமாகவே குளத்துப் படிகளில் இறங்கிய அவன், நீர்ப் பரப்பின் விளிம்புக்கு மேல் இருந்த ஒரு படியில் அமர்ந்து கொண்டு, நீரை நீவி விட்டு இரு கரங்களாலும் அள்ளிப் பருக ஆவலுடன் குனிந்தான். அப்படிக் குனிந்தவன் அந்தத் தெள்ளிய நீர்ப் பரப்பில் ஏதோ ஓர் அதிசயத்தைக் கண்டு விட்டவன் போல் திடுக்குற்றுத் தலை நிமிர்ந்து சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். பிறகு அவசரமாகக் கண்களை நிமிண்டி விட்டுக் மீண்டும் குனிந்து நோக்கினான்.

இது என்ன விந்தை! இந்த நீர்ப் பரப்பிலே தெரிவது ஆந்திர இளவரசி உத்தமசீலியின் எழிலுருவ பிம்பம் அல்லவா? ஆமாம்; அதில் சந்தேகமில்லை! அவள் அழகு உருவம்தான் அங்கே ஜல சித்திரமாக மிதந்து கொண்டிருந்தது!..

வியப்பின் எல்லையைத் தொட்ட பரமேசுவரவர்மன் மறுபடியும் கண்களைக் கசக்கிக்கொண்டு அந்த நீரோவியத்தை உற்றுப் பார்த்தான்.

'ஓ! இது என் மனக் கண் செய்யும் ஜால வித்தையா? அப்படித்தான் இருக்க வேண்டும்!'

புன்முறுவலுடன் குனிந்த பரமேசுவரவர்மன் தன் வலக் கரத்தினால் நீர்ப் பரப்பை அலைத்துக் கலக்கினான். மறுவிநாடி அந்த நீரோவியம் மாயமாய் மறைந்து, அங்கே விரிந்துசெல்லும் நீர் வட்டங்களும், மிதந்து செல்லும் நீர்க் குமிழ்களும் மட்டுமே தெரிந்தன.

அவன் கலகலவென்று நகைத்தான். நகைத்துக் கொண்டே நீர் பருகக் குனிந்தான். என்ன ஆச்சரியம்! மீண்டும் அந்த நீரோவியம் இதோ, மிதப்பது தெரிகிறது! உத்தமசீலியின் அப்ராக்ருத சௌந்தர்ய பிம்பம்தான் அது!

பிரமித்து விட்டான் பரமேசுவர வர்மன். ஆனால் இப்போதும் அதைத் தன் மனக் குறளியின் ஒரு விசித்திர செப்படி வித்தை என்றே எண்ணினான். முன் போல நீரைக் கலக்கி அந்த அற்புத அழகு பிம்பத்தை மறையச் செய்ய அவன் மனம் இடம் தரவில்லை. தனக்கேற்பட்ட தாகத்தையும் மறந்தவனாய், நீர்ப் பரப்பிலே கிடந்து அசையும் அவ்வழகு பிம்பத்தையே கண்ணிமைக்காமல் பார்க்கலானான். அதைப் பார்க்கப் பார்க்க அவன் உடலின் கனம் குறைவது போலவும், பிறகு அது பஞ்சாகப் பசபசத்து மேலே மேலே பறந்து செல்வது போலவுமான பிரமை ஏற்பட்டது.

ஜலப் பரப்பில் மிதந்து கொண்டிருந்த அந்த ஜல சித்திரம் இப்போது அவனைப் பார்த்துச் சிரிப்பது போலத் தோன்றியது.

அவன் தன்னை மறந்தான். மெல்லக் குனிந்தான். சிரிப்பை உதிர்க்கும் அந்தச் சிங்கார நீரோவியத்தின் அதரங்களுக்கு நேரே தன் இரு கரங்களையும் நீட்டி, அவ்வதரங்களை ஸ்பரிசிப்பது போல் அங்குள்ள நீரைக் குத்தாக அள்ளியெடுத்து வாயருகே கொண்டு போனான். ஜலதரங்கத்தை உணர்த்தாற் போன்ற கணீர்ச் சிரிப்பொலி!

பதறித் துடித்து நிமிர்ந்தான் பரமேசுவரவர்மன். அதே சமயம், அவன் தலைக்கு மேலே இருந்த ஆத்தி மரக் கிளையிலிருந்து மின்னற் கொடியொன்று சரிந்து வந்தாற்போல் கீழே குதித்தாள் ஆந்திர இளவரசி உத்தமசீலி. (தொடரும்)



'மூன்று காதல்' என்று ஒரு பாட்டைப் பாடுகிறார் கவிஞர் பாரதி. சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி என்று மூன்று சக்திகளும் தனக்கு அருள் புரிந்த முறையைப் பற்றிய பாட்டு அது.

ஆற்றங் கரையினிலே—அழ
  கானதோர் மண்டபமீதினிலே—தென்றல்
காற்றை நுகர்ந்திருந்தேன் அங்கு
  கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள்

என்று கலைமகள் அருளை வியந்தவன்,

இந்த நிலையினிலே — அங்கோர்
  இன்பப் பொழிலிடையே வேறொரு
சுந்தரி வந்து நின்றாள் — அவள்
  சோதி முகத்தின் அழகினைக் கண்டு
  என்றன்
சிந்தை திறை கொடுத்தேன் — அவள்
  செந்திரு எனப் பெயர் சொல்லினள்

என்று அலைமகள் தரிசனமும் கண்டிருக்கிறான். மேலும்,

பின்னோர் இராவினிலே —கரும்
  பெண்மை அழகொன்று வந்தது
  கண்முன்
கன்னி வடிவமென்றே — களி
  கொண்டு சற்றே அருகிற் சென்று
  பார்க்கையில்
அன்னை வடிவமடா — இவள்
  ஆதி பராசக்தி தேவியடா


என்று மலைமகளையும் ஆராதித்திருக்கிறார்.

இப்படியெல்லாம் பாடிய கவிஞருக்கு, சரஸ்வதியின் அருள் பரிபூரணமாக இருந்திருக்கிறது. அன்னை பராசக்தியோ அவளது கடைக்கண் அருளை அவருக்கு அளித்திருக்கிறாள். ஆனால் இந்த மகாலக்ஷ்மியோ அவரைக் கண் திறந்து நோக்கவேயில்லை. கவிஞர் பாரதி மாத்திரம் என்ன, தமிழ் மக்களையே அவள் கடைக்கண்ணால் நோக்கியிருக்கிறாளா என்பது சந்தேகம்தான். ஆனால் தன் அருள் முழுவதையும்தான் அவள் அந்த பம்பாய் ராஜ்யத்துக்கு அருளி விட்டாளே. அதனால் தானே அங்கு செல்வத்தில் சிறந்த சீமான்கள் பலரும் தொழிலதிபர்கள் பலரும் குவிந்திருக்கிறார்கள். எப்படிக் காளி கல்கத்தாவில் பிரபலம் பெற்று விளங்குகிறாளோ அப்படியே மகாலக்ஷ்மி அந்த மராத்தியரது பம்பாயில் பிரபலம் பெற்றிருக்கிறாள். பம்பாய் ராஜ்யத்தில் கோலாப்பூரில் உள்ள மகாலக்ஷ்மி கோயில் மிக்க பிரசித்தி பெற்றது. காஞ்சியில் அன்னை பார்வதி, காமாட்சி என்ற பெயரில் தனிக் கோயிலில் இருந்து அருள் புரிகிறாள். தஞ்சையில் உள்ள கூத்தனூரில் சரஸ்வதிக்கும் ஒரு தனிக் கோயில் உண்டு. இந்த சரஸ்வதியே கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தருக்கு அருள் புரிந்தவள் என்ற வரலாறும் உண்டு. ஆனால் இந்த மகாலட்சுமிக்கு என்று ஒரு தனிக் கோயில் தமிழ் நாட்டில் இல்லைதான். எங்கெல்லாம் மகாவிஷ்ணு கோயில் கொண்டிருக்கிறாரோ அங்கெல்லாம் அவரது நிழலில் அவரது துணைவியாக இந்த மகாலட்சுமியும் பல பெயர்களில் உருவாகி யிருக்கிறாள். இந்த மகாவிஷ்ணுதான் ஏகபத்தினி விரதர் அல்லவே. ஆகவே இந்த மகாலட்சுமியும், பூதேவி, ஸ்ரீதேவி, ஆண்டாள் முதலிய தன் சக்களத்திமார்களுடனேதான் குடியிருக்க வேண்டியவளாக இருக்கிறாள். ஏதோ பட்டமகிஷி என்ற காரணத்தால் ஒரு தனி இடத்தை அவளுக்கு ஒதுக்கியிருப்பார்கள். அவ்வளவுதான். ஆனால் இந்த மராத்தியரிடையே அவளுக்குத் தனித்ததொரு செல்வாக்கு. கோலாப்பூரில் தனிக்கோயில் கொண்டிருந்தாலும் நிறைந்த புகழுடனும், மிக்க அருளுடனும் அவள் வாழ்வது பம்பாயில்தான். அங்குதானே மகாலட்சுமிக்கு என்று ஒரு பெரிய கோயில்; மகாலட்சுமி என்ற பெயராலேயே ஒரு ரயில்வே ஸ்டேஷன்; மகாலட்சுமி என்ற பெயரிலேயே ஒரு 'ரேஸ் கோர்ஸ்' எல்லாம் இருக்கின்றன.

பம்பாய் செல்லுவதற்கு நான் வழி துறைகள் சொல்ல வேண்டியதில்லை. சென்னையிலிருந்து புறப்படும் எக்ஸ்பிரஸ் ரயில்கள் எல்லாம் சென்று சேருமிடம் விக்டோரியா டெர்மினஸ் என்ற பெரியதொரு ஸ்டேஷன். ஆனால் நாம் நமது தமிழ் அன்பர்கள் வசிக்கும் பகுதியான மாதுங்காவுக்குத்தானே செல்ல விரும்புவோம். ஆதலால் தாதர் என்ற ஸ்டேஷனிலேயே இறங்கி விடலாம். மாதுங்காவில் நண்பர்கள் இருந்தால் அவர்களோடேயே தங்கலாம். இல்லாவிட்டால் சியான் பகுதியில் பம்பாய்த் தமிழர்கள் நாலு லட்சம் ரூபாய் செலவில் கட்டி வைத்திருக்கும் பம்பாய் தமிழ்ச் சங்கக் கட்டடத்திலேயே தங்கலாம். அங்கிருந்து பம்பாய் நகரத்திலுள்ள பல பகுதிகளுக்கும் காரிலோ அல்லது பஸ்ஸிலோ செல்லலாம்.

இனி நாம் பம்பாயிலுள்ள முக்கியமான இடங்களையும் கோயில்களையும் சுற்றிப் பார்க்கலாம். பம்பாய் நகரம் ஒரு சிறு

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்



மகாலக்ஷ்மி கோயில்

தீவில்தான் இருக்கிறது. தீவையும் பிரதான நிலப் பரப்புடன் இணைந்து விட்டிருப்பதால் தீவு என்றே தெரியாது. தீவாக இருப்பதன் காரணமாக இயற்கையாக அமைந்த துறை முகப்பட்டினமாக இருக்கிறது. மேல்நாட்டிலிருந்து கப்பலில் பிரயாணம் செய்து வருபவர்களெல்லாம் வந்து இறங்கும் இடம் இந்தத் துறைமுகம்தான். விண்வழிப் பயணம் ஆரம்பிப்பதற்கு முன் மேல்நாட்டினர் எல்லாம் கப்பல் வழியாகத்தானே வந்திருக்கிறார்கள்? அப்படி வந்தவர்களில் நம்மை ஆண்ட ஆங்கிலேயர்கள் முக்கியமானவர்கள். அதிலும் வைஸ்ராய் முதலியவர்கள் வரும்போது அவர்கள் வந்திறங்கும் துறை அழகுடையதாக இருக்க வேண்டாமா? அதற்காக அந்தத் துறையில் ஒரு பெரிய வாயிலைக் கட்டியிருக்கிறார்கள். அதனையே 'இந்தியாவின் நுழை வாயில்' என்றும் அழைத்திருக்கிறார்கள். மிக அழகாகப் பிரம்மாண்டமான அளவில் கட்டப்பட்ட வாயில் அது. நாம் வைஸ்ராய் அல்ல என்றாலும் நாமும் அங்கு செல்லலாம். அந்த நுழை வாயிலிலேயே நுழைந்து பம்பாயைச் சுற்றிப் பார்க்கலாம். பிறகு மகாலட்சுமி கோயிலுக்குப் புறப்படலாம். 'கேட்வே ஆப் இந்தியா'விலிருந்து வடமேற்கே சுமார் ஐந்து மைல் தூரத்தில் கடற்கரையிலுள்ள ஒரு குன்றில் இந்தக் கோயில் இருக்கிறது. கீழேயுள்ள தெருவிலே காரை நிறுத்தி விட்டுப் பல படிகள் ஏறித்தான் இந்தக் கோயிலுக்குச் செல்ல வேணும். அங்கு தமிழ் நாட்டில் உள்ள கோயில்களைப் போல் கோபுரத்தோடு கூடிய கோயில் இருக்கும் என்று எதிர் பார்த்தால் ஏமாந்து போவீர்கள். ஏதோ ஒரு பெரிய பங்களாவைப் போல் கட்டியுள்ளதைத்தான் கோயில் என்கிறார்கள். முன் வாயிலில் மூன்று பெரிய ஆர்ச்சுகள்; இந்த ஆர்ச்சுகளைத் தாங்கி நிற்கும் அழகிய தூண்கள். அதில் எல்லாம் சிற்பம் என்ற பேச்சே கிடையாது. இரவு நேரத்தில் போனால் மின்விளக்குகளால் அலங்கரித்திருப்பார்கள். இப்படியே பக்கங்களிலும் பல ஆர்ச்சுகள் அமைத்து ஒரு பெரிய மண்டபம் இருக்கும். அந்த மண்டபத்தின் மத்தியில்தான் ஒரு மேடை. அதனையும் ஒரு சிறு கட்டடமாகவே அமைத்திருக்கிறார்கள். அதுதான் மகாலட்சுமி சந்நிதி. இந்த மகாலட்சுமி தன்னலம் மிக்கவள் அல்ல. கோயிலில் நடு நாயகமாக இருக்கும் அவள் வலப் பக்கத்தில் மகா காளியையும், இடப் பக்கத்தில் மகா சரஸ்வதியையும் வைத்துக் கொண்டிருக்கிறாள். எல்லோரும் மூன்றடி உயரத்தில் உள்ள சிறிய வடிவினரே; முகத்தைத் தவிர மற்றப் பாகங்களைத் துணியால் மறைத்திருப்பதால் அவர்களது உடல், கால்களையெல்லாம் காண முடியாது. மூவர் தலையிலும் கிரீடங்கள் இருக்கும். இந்தச் சந்நிதியின் விதானத்தை அழகு செய்திருக்கிறார்கள். கலை அழகு என்றெல்லாம் இல்லாவிட்டாலும் அன்னையர் மூவரையும் ஒருங்கு காணும் வாய்ப்புப் பெறுகின்றோம் அல்லவா ?

திரும்புமுன் இந்தக் கோயில் எப்போது, எப்படி உருவாயிற்று என்று தெரிந்து கொள்ள வேண்டாமா என்று ஆசை எழும். பம்பாய் 'வொர்லி காஸ்வே' என்று ஒரு பாலம் கட்டியிருக்கின்றனர். இந்தப் பாலத்தைக் கட்டிய போதெல்லாம் இடிந்து போயிருக்கிறது. பல தடவைகள் முயன்றும் இதைக் கட்டி முடிக்க முடியவில்லை; இந்தச் சமயத்தில் 'பிரபு' என்னும் பட்டம் பெற்ற ஒருவரது கனவில் மகாலட்சுமி தோன்றித் தானும் தன் துணைவியரும் கடலுள் அமிழ்ந்து கிடப்பதாகவும் அந்தப் பிரபுவே பாலம் கட்டும் காண்டிராக்ட் எடுத்துக் கட்டுவதோடு தங்களையும் வெளிக் கொணர்ந்து கோயில் கட்டினால் பாலம் கட்டுவதற்குத் தான் துணைபுரிவதாகவும் சொல்லியிருக்கிறாள். அதன்படியே அந்தப் பிரபு சிலை உருவில் இருந்த தேவியர் மூவரையும் கடலிலிருந்து எடுத்து வெளிக் கொணர்ந்து கோயில் கட்டியிருக்கிறார்; பாலத்தையும் கட்டி முடித்திருக்கிறார். ஆதலால் மகாலட்சுமி மிக்க வரசித்தியுடையவள், பிரார்த்தனை செய்து கொள்பவர்களது விருப்பங்களை நிறைவேற்றி வைத்திருக்கிறாள். இப்படி இக் கோயில் கட்டப்பட்டது கி. பி. 1761ல்தான் என்றும் அறிகிறோம்.


இந்த மகாலட்சுமி கோயிலுக்குத் தென்புறம் கொஞ்ச தூரத்தில்தான் அந்தப் பிரசித்திபெற்ற மலபார்ஹில் என்னும் பிரதேசம் இருக்கிறது. அந்த மலைப் பகுதியின் சரிவிலே அமைந்திருப்பதுதான் தொங்கு தோட்டம். அத்தோட்டம் மிகவும் ரமணீயமாக இருக்கும். அங்கிருந்து பம்பாய் நகரம் கடற்கரை எல்லாவற்றையுமே கண்ணோட்டமிடலாம். தோட்டத்தில் உல்லாசமாகச் சுற்றி வரும் போது, கொஞ்ச தூரத்தில் கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். அடர்ந்த புதர்களுக்கிடையே ஒரு வெள்ளைக் கட்டடமும் தோன்றும். அது என்ன கட்டடம், அங்கு ஏன் கழுகுகள் சுற்றுகின்றன என்று விசாரித்தால் ஓர் அதிசயமான செய்தியை அறிவோம். பம்பாயில் பார்சி வகுப்பினர் நிறைய இருக்கின்றனர்; அவர்கள் அக்கினியையே தெய்வமாக வணங்குபவர்கள். அவர்களில் யாராவது இறந்து போனால் அந்தப் பிணமான உடலைத் தகனம் செய்வதில்லை; பூமியில் புதைப்பதும் இல்லை. பிரேதமான உடலை எடுத்துச் சென்று நாம்

பார்த்தோமே கட்டடம், அந்த இடத்தில் வைத்து விட்டுத் திரும்பி வருகின்றனர். உயிரற்ற அந்த உடலைக் கழுகுகள் கொத்தித் தின்கின்றன. உபயோகமற்றது என்று கருதும் இந்த உடலும் பின்னர் கழுகுகளுக்காவது உணவாகட்டுமே என்ற பரோபகார எண்ணமே இப்படிச் செய்யத் தூண்டியிருக்கிறது அவர்களை. இப்படி உயிரற்ற சடலங்களைக் கொண்டு வந்து போடும் இடம்தான் மௌன ஸ்தம்பம் என்ற பெயரோடு விளங்குகிறது. பார்சி மக்கள், நேற்றிருந்தார்; இன்று வெந்து நீறு ஆனார் என்றோ, மண்ணிற் பிறந்தார் மீண்டும் மண்ணுக்கே இரையானார் என்றோ சொல்ல வாய்ப்பு அற்றவர்கள். இந்த மௌன ஸ்தம்பத்தை எட்ட இருந்து பார்த்து விட்டே மலபார் ஹில்லிலிருந்து கீழே இறங்கலாம்.

பின்னர் நகருக்கு வரும் வழியில் சௌபாத்தி பகுதியில் ஒரு கோயில்; அது சிவன் கோயில். அதனைப் பாபுல்நாத் கோயில் என்கின்றனர். அன்று ஆலின் கீழிருந்து அறம் சொன்ன பெருமான் இங்கும் ஒரு பெரிய ஆலமரத்தடியில் கோயில் கொண்டிருக்கிறார். இக்கோயில் ஒரு செய்குன்றின் மேல் கட்டப்பட்டிருப்பதால் பல படிகள் ஏறிக் கடந்தே கோயிலுக்குச் செல்ல வேணும். கோயிலை ஒரு நீண்டு உயர்ந்த விமானம் அழகு செய்கிறது. ஆதியில் இந்த இடம் ஒரு காடாக இருந்திருக்கிறது; அங்கு சுயம்புலிங்கமாக ஒரு மூர்த்தி இருந்திருக்கிறார். அக்காட்டுக்குச் சென்ற பசுக்கள் தானாகப் பாலைச் சொரிந்திருக்கின்றன, அந்த லிங்கமூர்த்தியின் மேல். அதன் பின் தான் அவரை வெளிக்கொணர்ந்து கோயில் கட்டி வணங்கியிருக்கின்றனர் மக்கள்.

இன்று கோயில் முழுவதும் சலவைக் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. படிகள் ஏறியதும் விநாயகரும் அனுமனும் நமக்குத் தரிசனம் தருகின்றனர். மகாமண்டபத்தைக் கடந்து கருவறை வாயில் வந்தால் அங்கு விநாயகரும் காளியுமே துவாரபாலகர்களாக நிற்கின்றனர். கருவறையின் நடுவில் பாபுல்நாத் லிங்க உருவில் இருக்கிறார். அவருக்குப் பின்னும் மூன்று மாடக் குழிகள் – நடுமையமுள்ள குழியில் பார்வதி இருக்கிறாள், வலப் பக்கக் குழியில் சிவபார்வதி வடிவங்கள் இருக்கின்றன. பிள்ளைப் பிராயத்திலுள்ள பிள்ளையார் தந்தையின் மடியில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறார். இடப்பக்கத்தில் காளிகாதேவி இருக்கிறாள். எல்லாரையும் வணங்கிவிட்டுக் கோயிலை வலம் வந்த படி இறங்கலாம்.

இனி நாம் கிழக்கு நோக்கி மிக்க நெருக்கமான பகுதியான பம்பாய் பஜாருக்கே வரலாம். அந்த நெருக்கடிக்குள் ஏன் எங்களை இழுக்கிறீர் என்று நீங்கள் கேட்கலாம்.



வேங்கடவன் கோயில்

அங்குதானே மும்பைதேவி கோயில் இருக்கிறது. அந்த மும்பை தேவிதானே ஆதியில் அந்தப் பிராந்தியத்தில் உள்ளவர்களின் வழிபாட்டுத் தெய்வம். அந்த மும்பை தேவியின் நகரம்தானே பம்பாய் நகரம் என்று திரிந்திருக்கிறது பின்னால். ஆதலால் அந்த மும்பாதேவியைத் தரிசிக்காமல் இருக்கலாமா? அதனால் தான் இந்த நெருக்கடிக்குள்ளும் உங்களை அழைத்துச் செல்ல விரும்புகிறேன். கோயிலைப் பார்த்தால் கிட்டத்தட்ட மதுரை திருமலை நாயகர் மஹாலைப் போல் பெரிய பெரிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. அங்கும் மூன்று சந்நிதிகள். சிங்க வாகனத்தில் மும்பைதேவியும், அன்ன வாகனத்தில் ஜகதாம்பாளும் அன்ன பூரணியும் தனித்தனி சந்நிதியில் இருக்கிறார்கள். மும்பாதேவியின் வாகனத்தைத் தினந்தோறும் மாற்றி மாற்றி அமைக்கிறார்கள். சிவந்த முகமும் விரித்த தலையும் உடையவளாக மும்பா தேவி காட்சி தருகிறாள். மகாலட்சுமி கோயிலுக்கு வரும் கூட்டத்தைவிட இந்த மும்பா தேவி கோயிலுக்கு வரும் கூட்டம் அதிகம் என்கின்றனர். தினசரி லட்சம் பேர்கள் வந்து வணங்கிச் செல்கின்றனர் என்கிறார்கள். ஆதியில் இந்தக் கோயில் இருந்த இடத்தை ரயில்வே நிர்வாகிகள் எடுத்துக் கொள்ள, பின்னரே இப்போதுள்ள இடத்துக்கு இந்தக் கோயிலைக் கொண்டு வந்திருக்கின்றனர். இக்கோயில் கட்டி அறுபது அறுபத்தைந்து வருஷங்களே ஆகின்றன என்கின்றனர். பஞ்சவடியில் ராமன் இருந்த போது மாரீசன் மாயமானாக வந்ததும், அந்த மானைத் துரத்திச் சென்று ராமன் அம்பெய்து கொன்றதும் நாம் ராமாயணத்தில் படித்திருக்கிறோம். அந்த மாரீச மானைக் கொல்ல ராமனுக்குச் சக்தியருளியவளே இந்த மும்பை தேவிதான். மாமாயி என்ற பெயரோடு விளங்கியவளே பின்னர் மும்பாயி என்ற பெயரோடு விளங்கியிருக்கிறாள். பம்பாய்க்கு வந்து இந்த மும்பா தேவியை வணங்கா விட்டால் நமது க்ஷேத்திராடனம் பூரணத்துவம் பெற்றதாகாதே.


இதை எல்லாம்விட நமக்கு ஓர் அதிசயம் இந்த பம்பாய் நகரில் காத்து நிற்கும். வேங்கடத்துக்கு அப்பால் நாம் தொடங்கியுள்ள இந்தத் தல யாத்திரையில் அந்த வேங்கடவாணன் நம்மை எல்லாம் முந்திக் கொண்டு இந்நகருக்கு முன்னமேயே வந்து ஒரு நல்ல இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறான் என்றால் நீங்கள் வியப்புத்தான் அடைவீர்கள்! ஆம், பம்பாயில் பன்ஸ்வாடிப் பகுதி என்னும் இடத்தில் ஒரு பெரிய கோயில் இருக்கிறது. அதனை வேங்கடேச தேவஸ்தானம் என்கின்றனர். கோயில் வாயிலுக்கு வந்ததுமே தமிழ் நாட்டு வாடை அடிக்கிறது. நீண்டு உயர்ந்த கோபுரத்தின்

வாயில் வழியாக நுழைந்து வெளிப் பிராகாரம் வந்ததும் நாம் பம்பாயில் இருக்கிறோம் என்ற நினைப்பே இருக்காது. உள் கோயிலைச் சுற்றி இருக்கும் மண்டபம் எல்லாம் "மொசெய்க்" தளம் போட்டுச் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். பாகவதத்தை முழுவதையும் வெளிச் சுவரில் பொறித்து வைத்திருக்கிறார்கள்; கோயில் கருவறையில் மூலவராக வேங்கடேசன் நிற்கிறார்; அவருக்கு வலப்புறம் ராஜகோபாலும் இடப்புறம் வரதராஜனும் கோயில் கொண்டிருக்கிறார்கள். ராமர் வேறே சீதா லக்ஷ்மண அனுமத் சமேதராக எழுந்தருளியிருக்கிறார். அர்ச்சகர்கள் எல்லாம் தமிழ் பேசுகிறார்கள். கோயில் பிராகாரத்தின் வடபுறம் ராமானுஜருக்குத் தனி சந்நிதி. தென்புறம் மகாலட்சுமி, பத்மாசனி என்ற பெயரில் தனிக் கோயிலில் வீற்றிருக்கிறார். அவர் பக்கத்திலேயே ஒரு கண்ணாடி அறை. அந்த அறை பத்து அடிச் சதுரத்தில் கட்டியதொன்றுதான். என்றாலும் உள்ளே நுழைந்து விட்டால் அங்கே அமைத்திருக்கும் கண்ணாடிகள் பிரதிபலிப்பதிலிருந்து ஏதோ நூற்றுக்கணக்கான அடிகள் கொண்ட விஸ்தாரமான மண்டபம் போலத் தெரியும். இந்தக் கண்ணாடி அறை மின்விளக்கு வசதிகளுடனும் கண்கவர் வனப்புடனும் இருக்கிறது. காஞ்சியிலிருந்து அனந்தாச்சாரியார் என்று ஒரு பெரிய பீதாம்பரதாரி இங்கே வந்திருக்கிறார். அவர் சுதர்சனசக்கர உபாசகராக இருந்திருக்கிறார். அவரிடம் பாலாஜி பக்த் என்ற ஒரு பெரிய சேட் ஈடுபட்டிருக்கிறார். அவர் விரும்பியவண்ணமே சேட் இந்தக் கோயிலைக் கட்டியிருக்கிறார். கோயில் விமானம் பிரணவாகாரமாக அமைந்திருக்கிறது. ஆறுகால பூசை நடக்கிறது. ஐப்பசியில் பிரம்மோற்சவமும், பங்குனி உத்திரம், வைகுண்ட ஏகாதசி, இராப் பத்து, பகல் பத்து, ஆடி மாதம் ஜூலா என்னும் ஊஞ்சல் உத்சவம் எல்லாம் ஒழுங்காக நடக்கின்றன. மார்வாரி மக்கள் ஆணும் பெண்ணும் பாலாஜி பக்தர்களாகக் கோயிலுக்குத் தினம் வந்து போகின்றனர்.

இப்படி ஊரை யெல்லாம் சுற்றி விட்டுத் தமிழர்கள் வாழும் பகுதியாகிய மாதுங்காவுக்கு வந்தால் அங்கு ஒரு பஜனை சமாஜம் அதை ஒட்டி ஒரு சிவன் கோயில், ஆஸ்திக சமாஜம், அதனை ஒட்டி ராமர் கோயில், விநாயகர் கோயில் இருப்பதைக் காணலாம். சுப்பிரமணிய சமாஜத்தார், சண்முகனுக்கு ஒரு கோயில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் எங்கு சென்றாலும் தமிழ்க் கடவுளை மறக்கமாட்டார்கள்தானே! இன்னும் பம்பாயில் எத்தனை எத்தனையோ கோயில்கள். இக்கல் சர்ச்சின் பக்கம் ஒரு சமணர் கோயிலும், வொர்லி பக்கம் ஒரு புத்தர் கோயிலும் உருவாகியிருக்கின்றன. எல்லாவற்றையும் விடப் பெரிய கலைக் கோயிலாகத்தான் பம்பாய்த் தமிழ்ச் சங்கம் உருவாகியிருக்கிறதே. பம்பாயில் பகுதிக்கு ஒரு சங்கம் என்று பல சங்கங்கள் இன்று தோன்றிக் கலைக்கும், தமிழுக்கும் தொண்டாற்றி வருகின்றன. சங்கீதத்துக்கும், நாடகத்துக்கும் அரும் பணி புரியவும் பல சங்கீத சபைகளும் உள்ளன.

கதையும் கல்யாணமும்

'தாமரைச் செல்வன்'



திங்கட்கிழமை மாலை ஆறு மணி.

எழுத்தாளர் 'வாத்து' தலையைச் சொறிந்து கொண்டு யோசித்துக் கொண்டிருந்தார். விஜிக்கு யாரைக் கல்யாணம் செய்து வைப்பது என்பதுதான் பிரச்னை. "கமலா, இங்கே வா" என்று இரைந்து கத்தினார். அவருடைய மூளை வேலை செய்ய மறுத்தால், தம் மனைவியைக் கூப்பிடுவது அவர் வழக்கம்.

"என்ன தலை போகிற காரியம்?" என்று கேட்டுக் கொண்டே கையில் கரண்டியுடன் வந்தாள் கமலா.

"விஜிக்கு யாரைக் கல்யாணம் செய்து வைக்கலாம்? சீக்கிரம் சொல்லு" என்றார் 'வாத்து.'

"விஜிக்கா, கல்யாணமா? பைத்தியமா உங்களுக்கு? நம்ம விஜிக்கு மூணு வயசுகூட முடியவில்லையே!"

"ஏய், ஏய், நிறுத்து! நம்ம விஜியைப் பற்றி நான் சொல்லவில்லை. என் தொடர்கதை 'நிலவுக் கிளி'யின் கதாநாயகி விஜி இருக்கிறாளே அவள் கல்யாண விஷயமாகக் கேட்கிறேன். 'சந்தர், சுந்தர் என்று இரண்டு கதாநாயகர்கள் என் கதையில். நீதான் ஒரு ஐடியா சொல்லேன்."

"சொல்லட்டுமா? விஜி யாரையும் கல்யாணம் பண்ணிண்டு என்னைப் போல் கஷ்டப்பட வேண்டாம். டாக்டர் படிப்புப் படித்துக் கன்னியாகவே இருந்து விட்டாள்னு கதையை முடித்து விடுங்கள்."

"போயும் போயும் உன்னைப் போய்க் கேட்கிறேனே? உம்...நீ போய்ச் சமையலைக் கவனி. அதற்குத் தான் லாயக்கு நீ" என்றார் வாத்து.

மணி ஏழு.

"ஸார்...ஸார்..." என்றது ஓர் எருமைக் குரல். வாத்து கற்பனையுலகிலிருந்து நனவுலகுக்குக் கொண்டு வரப்பட்டார். விஜி கல்யாண விஷயம் அவரை இன்னமும் குழப்பிக் கொண்டிருந்தது. அவர் யாரையும் பார்க்க விரும்பவில்லை. ஆனாலும், "யாரது?" என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தார். வெளியே நவநாகரிக வாலிபன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவனுடைய குரலையும் உருவத்தையும் பார்க்கும்போது யாரும் அவனை அந்தக் குரலுக்குரியவன் என்று சொல்ல மாட்டார்கள். பார்க்க அழகாக இருந்தான். சுமார் இருபத்தைந்து வயதிருக்கலாம் என்று வாத்து தமக்குள் சொல்லிக் கொண்டார்.

"ஸார்! நீங்கள்தானே எழுத்தாளர் வாத்து? என் பெயர் சேகர். வருமானவரி அதிகாரியாக இருக்கிறேன். உங்களை ஒரு விஷயமாகப் பார்க்க வந்தேன்" என்றான் வந்த வாலிபன்.

"வருமானவரி அதிகாரியா? அப்படியா வாருங்கள். ரொம்ப சந்தோஷம். நான் ஒழுங்காகத்தானே வரி கட்டிக் கொண்டு வருகிறேன்? என் மேல் ஏதாவது புகார் இருக்கிறதா?" என்றார் வாத்து.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. எனக்கு நாக்பூரில் வேலை. நான் வந்தது சொந்த விஷயம். சற்றுத் தனியாகப் பேச வேண்டும். உங்கள் அறைக்கே போகலாமே?" என்றான் சேகர்.

வாத்து சேகரை அழைத்துக் கொண்டு தம் அறைக்குப் போனார். இருவரும் அமர்ந்து கொண்டனர்.

"உங்களுடைய கதைகள் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்....." என்று ஆரம்பித்தான் சேகர்.

"ஓ...ஓ...ரொம்ப சந்தோஷம்" என்றார் வாத்து.

"நீங்கள் 'தோட்டம்' என்ற வாரப் பத்திரிகையில் எழுதிவரும் 'நிலவுக் கிளி' தொடர் கதை எனக்கு மிக மிகப் பிடித்திருக்கிறது. அது அடுத்த இதழில் முடியும் என்று இந்த வாரம் போட்டிருந்தது. அது விஷயமாக உங்களைப் பார்க்க வந்தேன்."

"பேஷாகப் பார்க்கலாமே என்னை!"

"அந்தத் தொடர்கதைக்கும் என்னுடைய நிஜ வாழ்க்கைக்கும் நிறையத் தொடர்பு. அதில் வரும் கதாநாயகி விஜியைப் போலவே எனக்கு மாமா பெண் நீலா என்றொருத்தி இருக்கிறாள். அவளுக்கு மாமா பையன் சூர்யா என்று ஒருவன் இருக்கிறான். சூர்யா, நான் இரண்டு பேருமே நீலாவை விரும்புகிறோம். எல்லாம் உங்கள் 'நிலவுக் கிளி'யில் வருவது போலத்தான். நீலா எங்கள் இருவரையுமே சமமாகப் பாவிக்கிறாள். இது விஷயமாக என் மாமாவின்—அதாவது நீலாவின் அப்பாவின் — முடிவு என்னவென்றால் அது நிலவுக் கிளியின் முடிவைப் பொறுத்திருக்கிறது. விஜி—சந்தர் திருமணம் நடந்தால் எனக்கு நீலா கிடைப்பாள். விஜி — சுந்தர் மணம் என்றால் நீலா எனக்கில்லை, சூர்யாவுக்குத்தான். என் மாமா ஒன்று சொன்னால் சொன்னதுதான். மாத்




லே மாட்டார். ஆகவே நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்." சேகர் கூறி முடித்தான். வாத்து சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு சொன்னார்: "மிஸ்டர் சேகர்! எழுத்தாளன் என்பவன் யாருடைய பேச்சையும் கேட்க மாட்டான். மனோ தர்மம் என்ற ஒன்றுக்குக் கட்டுப்பட்டுத்தான் அவன் எல்லாம் செய்வான். ஆனாலும் உங்களுக்காக இந்த உதவியைச் செய்கிறேன். சந்தர் — விஜி கல்யாணத்துடன் நிலவுக் கிளியை முடித்து விடுகிறேன். போதுமா...?"

"உங்களுக்கு என் ஆயுள் முழுவதும் அடிமையாக இருக்க வேண்டும் ஸார் நான்!" என்றான் சேகர்.

"சே, சே, அதெப்படி முடியும்? இனிமேல் நீர் நிலாவுக்கல்லவோ அடிமை?" என்றார் வாத்து.

"ஸார்! இந்த விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம். உங்களுக்கு மிக மிக நன்றி. இன்னொரு நாள் சாவகாசமாய்ப் பார்க்கிறேன்" என்று சொல்லி விட்டு எழுத்தாளர் வாத்திடமிருந்து விடை பெற்றுக் கொண்டான் சேகர்.



மணி எட்டு.

வாத்து சாப்பாட்டு நினைவு கூட இல்லாமல் எழுதிக் கொண்டிருந்தார். 'இதோ மணப் பெண் வந்து விட்டாள்' என்ற வரியை எழுதி முடிப்பதற்குள் யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது. வாத்துக்குக் கோபமாக வந்தது. விஜி — சந்தர் கல்யாண ஏற்பாட்டைச் செய்து கொண்டிருந்த அவர் யாருடைய வரவையும் விரும்பவில்லை. மனைவியைக் கூப்பிட்டார். "கமலா! வாசலிலே யாரென்று பார்த்து, அங்கேயே பேசி அனுப்பி விடு. நான் ரொம்ப பிஸி" என்றார்.

கமலா கதவைத் திறந்து பார்த்தாள். சுமார் இருபது வயது மதிக்கத் தக்க ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். காதிலே ஒரு மாங்காய்த் தோடு, கழுத்திலே ஒரு மாங்காய் மாலை, மூக்கில் ஒன்றுமில்லை. எளிய உடைதான். நல்ல உயரம். நிறம் மாநிறம். அவளைப் பார்த்தவுடனேயே கமலாவுக்குப் பிடித்து விட்டது.

"எழுத்தாளர் வாத்து வீடு இதுதானே? அவரைப் பார்க்க வேண்டும்" என்றாள் வந்த வனிதை.

"ஆமாம், இதுதான் அவர் வீடு. நான் அவர் மனைவி. உங்களுக்கு என்ன வேண்டும்? அவர் ரொம்பப் 'பிஸி'யாக இருக்கிறார். என்னிடம் சொல்லலாமோ விஷயத்தை?" என்றாள் கமலா.

வந்த பெண் கெட்டிக்காரி போலும். கமலாவைத் தன் பேச்சாலும் கவரத் தொடங்கி விட்டாள். "மாமி, உங்களிடம்தான் சொல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. எனக்கு உங்கள் உதவி வேண்டும். செய்வீர்களா, மாமி?" என்று குழைந்தாள்.

"சொல்லம்மா, என்னாலானதைக் கட்டாயம் செய்கிறேன்" என்றாள் கமலா.

"மாமி! என் பெயர் நிலா. நான் மயிலாப்பூரில் என் அப்பா அம்மாவுடன் இருக்கிறேன். எனக்கு ஒரு மாமா பிள்ளையும் அத்தை பிள்ளையும் இருக்கிறார்கள். இருவரில் யாரைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது என்று என்னைக் கேட்பதற்குப் பதில் என் அப்பா உங்களவர் மூலம் என் கல்யாணத்தை முடிக்கப் போகிறார்" என்றாள் நிலா.

கமலாவுக்கு இது ஏதோ ஒரு கதை போல் தோன்றியது.

"எங்கள் வீட்டுக்காரருக்கும் உன் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம் நிலா? கொஞ்சம் புரியும்படி சொல்லேன்" என்று கேட்டாள் கமலா.

"மாமி! நான் என் அத்தை பிள்ளை, மாமா பிள்ளை இரண்டு பேரிடமும் சகஜமாகப் பழகி வருகிறேன். ஆனாலும் என் மாமா பிள்ளை சூர்யாவைத்தான் எனக்கு மிகவும் பிடிக்கும். இது ஒருத்தருக்கும் தெரியாது. என் அப்பாவுக்கோ இரண்டு பேரையும் பிடிக்கும். ஆகவே அவர் என்ன சொல்லிவிட்டார் தெரியுமா நேற்று? உங்களவர் எழுதும் 'நிலவுக் கிளி'யில் வரும் கதா நாயகி என்ன செய்கிறாளோ, அதையே நானும் செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டார். நிலவுக்கிளி கதாநாயகி விஜி சுந்தரைக் கல்யாணம் செய்து கொண்டால் நான் சூர்யாவை, அதாவது என் மாமா பிள்ளையைக் கல்யாணம் செய்து கொள்ளலாம். அப்படி யில்லா விட்டால்....மாமி, நீங்கள் எனக்கு உதவி செய்ய மாட்டீர்களா?" என்று கெஞ்சினாள் நிலா.

கமலா சொன்னாள்: "அடுத்த இதழ் தொட்டம் நீ விரும்பும் கணவனையே உனக்குக் கொடுக்கும். அதற்கு நான் பொறுப்பு. சரிதானே?"

"ரொம்ப தாங்ஸ் மாமி! நான் போய் வருகிறேன். விஜி — சுந்தர் கல்யாணத்தை மறக்காதீர்கள்!" — நிலா போய் விட்டாள்.

மணி பத்து.

"இதோ பாருங்க, தூங்கி விட்டீர்களா?" என்று கேட்டாள் கமலா.

"இல்லையே, என்ன வேண்டும்?"

"சாயங்காலம் என்னைக் கேட்டீங்களே, நிலவுக் கிளியை எப்படி முடிக்கிறதுன்னு. அதற்குப் பதில் வைச்சிருக்கேன்."

"உன் பதில் எனக்கு வேண்டாம். நான் கதையை அப்போதே முடித்து விட்டேன்."

''என்னது, முடித்துவிட்டீர்களா? விஜி, யாரைக் கல்யாணம் செய்து கொள்கிறாள்?''

''சந்தரை.''

''ஐயையோ, குடி — கெட்டது போங்கள். கதையின் முடிவை எனக்காக மாற்றுங்கள். விஜி சுந்தரைக் கல்யாணம் செய்து கொள்ளட்டும்.''

''ஏன், உனக்கென்ன இன்டரஸ்ட் இதில்?''

''நான் ஒரு பெண்ணுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன்.''

''பெண்ணுக்கா? வாக்கா? என்னபேத்தல்?''

''எட்டு மணி சுமாருக்கு நீலா என்றொரு பெண் வந்தாள் நம் வீட்டுக்கு. அவளுடைய வாழ்க்கையே நிலவுக் கிளியின் முடிவைப் பொறுத்திருக்கிறது என்றாள். விஜி — சுந்தர் கல்யாணம் நடந்தால்தான் அவள் தன் விருப்பப்படி தன் மாமா பையனைக் கல்யாணம் செய்து கொள்ள முடியுமாம். இல்லாவிட்டால் அவள் வாழ்வே பாழாகி விடுமாம். என் காலிலே விழாத குறையாகக் கெஞ்சினாள். நான் அவளுக்கு உதவி செய்வதாக வாக்குக் கொடுத்து விட்டேன்.''

''என் கதை தெரியுமோ? சாயங்காலம் அஞ்சு மணிக்குச் சேகர் என்ற நீலாவின் அத்தை பையன் வந்தான். அவனுடைய வேண்டுகோள்படி சந்தர் — விஜி கல்யாணத்தோடு நிலவுக் கிளியை முடிக்க ஒப்புக் கொண்டுவிட்டேன்.''

''இதோ பாருங்கள். தனக்கு விருப்பமில்லாத ஒருவனை எப்படிக் கல்யாணம் பண்ணிக்கொண்டு ஒரு பெண் நிம்மதியாக வாழ முடியும்? தயவுசெய்து எனக்காக நீங்கள் தான் விட்டுக் கொடுக்க வேண்டும்.''

''இப்போது எனக்கு ஒன்றும் ஓடவில்லை. தூங்கு. காலையில் இதைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம்.'' — இது வாத்துக்கும் அவர் மனைவிக்கும் நடந்த பேச்சு.

மறு நாள் கமலா எழுத்தாளரிடம் நிலவுக் கிளியைப் பற்றி நினைவூட்டினாள். வாத்து முடிவாகச் சொன்னார்: ''நான் வாக்குக் கொடுத்த பிறகுதான் நீ வாக்குக் கொடுத்திருக்கிறாய். ஆகவே என் வாக்குக்குத்தான் ஸீனியாரிட்டி அதிகம். ஆகவே நீ போய் உன் வேலையைப் பார்.''

கமலா தன் கடைசி அஸ்திரத்தைப் பிரயோகித்தாள். அதுதான் அழுகை. ஆனால் வாத்து பணியவில்லை. கண்ணீரும் தண்ணீர் தானே! வாத்து தண்ணீரைக் கண்டு பயப்படுமா? வாத்து நிலவுக் கிளியின் முடிவைத் 'தோட்டம்' ஆசிரியருக்கு அனுப்பி விட்டார்.

வியாழக் கிழமை காலை மணி ஐந்தரை. வாத்து 'தோட்டத்தை' எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அன்றுதான் 'தோட்டம்' வார இதழ் வரும் நாள்.



தொப் பென்று ஜன்னல் வழியே வந்து விழுந்தன தோட்டமும், அன்றைய செய்தித் தாளும். தோட்டத்தைப் பிரித்தார். நிலவுக் கிளியைப் பார்த்தார். கடைசி வரிகளை அவர் கண்கள் தேடின. ஆகா! என்ன ஆச்சரியம்! 'விஜியும் சுந்தரும் தேன் நிலவுக்காக ஸ்விட்சர்லாந்துக்குப் புறப்பட்டார்கள். நண்பர்கள் வழி யனுப்பினர்' என்றிருந்தது. வாத்துக்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை. நிலவுக் கிளியை மறுபடியும் நன்றாகப் பார்த்தார். விஜி — சுந்தர் மணம் பற்றியே கதை முழுதும் இருந்தது. சந்தர் மணம் வெறுத்து ராணுவத்தில் சேர்ந்து விட்டான் என்றும் இருந்தது.

எல்லாம் கமலாவின் வேலையாகத் தான் இருக்க வேண்டும். மனத்திற்குள் பொருமினார்.

''ஏய் கமலா கழுதை! கடம், இங்கே வா சீக்கிரம்'' என்று கத்தினார். கமலா அங்கே வந்தாள்.

''இதைப் படி. இது யார் செய்த வேலை?'' என்று நிலவுக் கிளியைக் காட்டிக் கேட்டார் வாத்து. கமலா படித்துப் பார்த்தாள். அவளுக்கு மகிழ்ச்சி ஒரு புறம், வியப்பு இன்னொரு புறம். இது எப்படி நடந்தது என்று அவளுக்கும் புரியவில்லை.

''இதோ பாருங்கள். இதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஒருவேளை, இது ஆசிரியர் செய்த வேலையாக இருக்கலாம். அவரையே போய்க் கேட்டுப் பாருங்கள்'' என்றாள் கமலா.

ஆசிரியர் வீட்டை நோக்கி ஓடினார் வாத்து. விஷயத்தைச் சொல்லி விளக்கம் கேட்டார். ஆசிரியரும் விழித்தார். ''இது ஒருவேளை கம்பாஸிட்டரின் வேலையாக இருக்கலாம்'' என்று சொன்னார்.

கம்பாஸிட்டரை விசாரித்தனர் ஆசிரியரும் வாத்தும்.

கம்பாஸிட்டர் ஆறுமுகம் 'ஹோ'வென்று அழுதுவிட்டான். ''தெரியாத்தனமாக நடந்து போச்சு ஸார். அச்சுப் பிழைதான் காரணம் ஸார். சந்தர் என்பதற்குப் பதில் சுந்தர் என்று போட்டுவிட்டேன். உங்க கையெழுத்துப் பிரதியிலே 'ச'வுக்கும் 'சு'வுக்கும் ரொம்ப வித்தியாசம் தெரியல்லே ஸார்!'' என்றான்.

''இனிமேல் என்ன செய்வது? 'திருத்தம்' என்று அடுத்த இதழில் போடலாமா?'' என்று வாத்து யோசித்தார். யோசித்துக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தார். அவருடைய வீட்டில் ''உங்களுக்கு மிக மிக நன்றி, எங்களை ஆசிர்வதியுங்கள்'' என்று இரண்டு வானம்பாடிகள் அவரைக் கேட்டன. வாழ்த்துக்களைக் கூறிவிட்டு 'மன்னிப்புக் கடிதம்' ஒன்றைச் சேகருக்கு அனுப்பி வைத்தார் வாத்து. அவரால் வேறென்ன செய்யமுடியும்?

படித்துப்  பாருங்கள்

சத்தியமேவ

இந்த நாவலின் கதை இப்பொழுது நடக்கலாம். கி. பி. 2000த்திலும் நடக்கலாம். கி. பி. 3000த்திலும் நடக்கலாம். அத்தகைய ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்து ஒரு புதிய கற்பனையை விளையாடி விருக்கிறார் ஆசிரியை. தமிழ் நாவல்களை நூற்றுக் கணக்கில் படித்த வாசகர்கள், இது வரை அனுபவிக்காத ஒரு புதிய அனுபவமாக இந்த அழகிய கற்பனையை ரசிப்பார்கள்.

சத்தியோத்தியா நகரம் ஆதித்ய ராஜ்யத்தின் தலை நகரம். அங்குதான் கதை நிகழ்கிறது. அயல்நாட்டினரான மதர்லாந்துக்காரர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்த ராஜ்யத்தில் விடுதலைக் கிளர்ச்சி மூள்கின்றது. விடுதலை பெற ஒரு புதிய உத்தியைக் கையாள்கிறார்கள் இந்த நாட்டவர்கள். அதுதான் பேசுவது, வாசாலமாகப் பேசுவது. வாண்டுகள் முதல் வயோதிகர்கள் வரை பேசிப் பேசி ஆட்சியாளரை நிலை குலையச் செய்கிறார்கள். வாய்வன்மை அற்ற மதர்லாந்தினர் விடுதலை கொடுத்து விட்டு ஓடுகிறார்கள். பின்பு, பண்டைக் காலச் சிறப்புடன் ஆதித்யர்கள் மீண்டும் நாட்டை ஆள்கின்றனர். குடியரசுத் தத்துவம், மந்திரிகள், கட்சிகள், சட்டங்கள், பட்டங்கள், சாத்திரங்கள், கலைகள், விஞ்ஞானம்—எல்லாம் அங்கே வளர்கின்றன. இரண்டு மந்திரிகளுக்கிடையே உள்ளூறக் காய்ச்சல்.... சுமந்திரன் என்ற மந்திரிக்கும் அமைச்சர் அசோகனுக்கும் இடையே நடக்கும் இந்தப் பலப் பரீட்சையை ஒரு சம்பவம் பெருக்கி விடுகிறது. செங்குத்தாக இருந்த இடத்திலிருந்தே வானத்தில் ஏறிப் பார்க்கக் கூடிய பாமரரும் எளியோரும்கூட வாங்கக் கூடிய விமானங்களை ஆதித்திய ராஜ்யத்திலேயே தயார் செய்ய மதர்லாந்தினர் உதவ முன் வருகிறார்கள். திடீரென்று வதந்தி புகைகிறது. தயாரிக்கப்படும் விமானம் சரியாக அமையவில்லை என்றும் செங்குத்தாகத் தரையில் இறங்கி நிற்காமல், கொஞ்ச தூரம் ஓடித்தான் வானில் ஏறவோ தரையில் இறங்கி நிற்கவோ முடியும் என்றும் பொதுமக்களுக்கு இது உகந்ததல்லவென்றும், இதைச் சரியாகக் கவனிக்காத அமைச்சன் அசோகனை சபையில் கேள்வி கேட்டு, கண்ணில் விரலைக் கொடுத்து ஆட்டி ஒரு நெருக்கடியைத் தோற்றுவிப்பதாகவும் கருவுகிறார் ஓர் அங்கத்தினர். ராஜ தந்திரிகளுக்கிடையே நடக்கும் இந்தப் பலப் போராட்டத்தை மிகவும் ரசமாக முடித்து வைக்கிறார் ஆசிரியர். விறுவிறுப்பு, கேலி, குறும்பு, ஆழ்ந்த நோக்கு, அனுபவப் பெருக்கம், இவற்றுடன் ஒரு மாய சித்திரமாகக் கதையை வரைந்திருக்கிறார். கனவுலகம், நனவுலகம் என்ற இரண்டு உணர்வுகளையும் ஒரே சமயத்தில் எழுப்பும் திறமையை எங்கும் காண்கிறோம். பெரிய உத்தியோகம் வகிப்பவர்களிடையே நிகழும் உள் காய்ச்சல்கள், படாடோபம், அச்சம், திலில், முண்டியடித்துப் பதவிக்கு வரப் புறப்படும் சமூக சேவகிகள், பக்தியையும் நம் பண்பாகச் செய்து கொண்ட விஞ்ஞானி, போலிக் காதல், உலகை உய்விக்க வந்த துறவி, ஒன்றும் அறியாத அப்பாவி போல் எங்கும் தோன்றி வயிற்றில் புளியைக் கரைக்கும் பத்திரிகாசிரியர், மேல் உத்தியோகஸ்தர்களின் மனைவிகளிடையே புகையும் வர்க்க உணர்வு, சர்க்கார் தலைமைக் காரியாலய மாயாஜாலங்கள்-எல்லாம் இதில் பளிச்சென்று தோன்றி, நம்மை வாய்க்குள்ளே சிரிக்க வைக்கின்றன. நமக்குத் தெரிந்த பல தலைநகரங்கள் நினைவுக்கு வரலாம். ஆனால் கதை முழுவதும் கற்பனை; புது விதக் கற்பனை.

தமிழில் முற்றிலும் புதிய முயற்சி. வெற்றிகரமான முயற்சி. மன ஓட்டங்களைப் பிரமாதமான வாசகத்துடனும் அதிர்ச்சியைத் தரும் திறந்த மனத்துடனும், தீட்டுகிறார் ஆசிரியர். நடையில் ஓர் எளிமையும், தெளிவும் குறும்பும் எங்கும் விரவி நிற்கின்றன. சில வேளைகளில் நாட்டுப் புறத்துப் பெண்ணின் அப்பாவிக் குறும்பாகவும், சில வேளைகளில் நாகரிக விஷமம் போலவும் தோற்றம் எடுத்து நம்மைச் சிரிக்க வைக்கும் குறும்பு அது. தமிழ் நாவல் துறையில் ஒரு புதிய கவடு என்று போற்ற வேண்டிய எழுத்து. — புரந்தரன்

ஆசிரியை: கிருத்திகா; மல்லிகா வெளியீடு. முதற் பதிப்பு; கிடைக்குமிடம்: மெர்க்குரி புத்தகக் கம்பெனி, ராஜவீதி, கோயமுத்தூர்–1; விலை: ரூ. 5. 00.

விவசாயத் துணைத் தொழில்கள்

''உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு'' என்ற மூதுரை வாக்கு விவசாயத் தொழிலுக்கு மிகவும் ஏற்றம் அளித்திருக்கிறது. அனைத்துலக மக்களுக்கும் அன்னமிட்டு, ஆதரிக்கும் இணையற்ற தொழில் விவசாயம்; ''சீரைத் தேடின் ஏரைத் தேடு'' என்று சிறப்பித்துக் கூறப்பட்ட தொழில் விவசாயம். ஆனால் அத்தகைய சிறப்பு மிக்க தொழில் ஆண்டு முழுவதும் வருமானம் தருவதில்லை; ஆகையால்தான் விவசாயத்தை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்ள முடியாமல் உழவர்கள் தவிக்கிறார்கள். ''உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது'' என்ற பழமொழியும் இதன் காரணமாகத்தான் எழுந்திருக்க வேண்டும்.

தொன்றுதொட்டு விவசாயத்துக்கு ஏற்பட்டிருக்கும் இந்தக் குறையைப் போக்க வேண்டுமானால், உழவர்கள் விவசாயத்தை மட்டும் நம்பி யிராமல் வேறு உப தொழில்களை மேற்கொள்ள வேண்டும். விவசாயத்தில் பாடுபடும் நேரம் போக எஞ்சிய நேரத்தில் ஏதேனும் ஒரு குடிசைத் தொழிலை மேற்கொண்டால் வாழ்க்கைத் தரம் உயரும்;

வருமானம் பெருகும்; சோம்பேறித்தனம் ஒழியும்.

விவசாயிகள் வாழ்வு வளம் பெற எந்த வகை தொழில்களை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு உபயோகமான தகவல்கள் இந் நூலில் விளக்கமாகத் தரப்பட்டிருக்கின்றன. அவை அனுபவத்துக்கு ஒத்தவையாகவும் இருப்பது விசேஷம்.

தேனீ வளர்த்தல், கோழி வளர்த்தல், மீன் வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்ப்பு முதலிய தொழில்களுடன் கனி பக்குவ முறைகள், ஜாம், ஜெல்லி தயாரிப்பு முறைகள், பழமுரபாக்கள் ஆகிய சிறு குடிசைத் தொழில் களும் விளக்கமாகத் தரப்பட்டிருக்கின்றன.

மிகவும் உபயோகமான நூல். ஆசிரியை யின் முயற்சி பாராட்டுக் குரியது.

எழுதியவர்: சுந்தரம் மீனாட்சி, வெளியீடு: மெர்க்குரி புத்தகக் கம்பெனி, ராஜ வீதி, கோயமுத்தூர் — 1; விலை ரூ. 2.00

மைசூர் சௌடையா

சங்கீத நாடக உலகில் தமக்கெனத் தனியிடம் தேடிக் கொண்டு விட்ட ஸ்ரீ சௌடையா அவர்களைத் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். பிரபல வித்துவான் களைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆர் வம் இல்லாதவர்களும் இருக்கமாட்டார்கள். அத்தகைய ஆர்வமுள்ளவர்களுக்கு இந்நூல் பெரிய விருந்தாகும்.

'குருகுல வாசம்' என்ற பகுதியில் ஸ்ரீ சௌடையா எவ்வளவு பாடுபட்டு வித்தை யைப் பயின்றிருக்கிறார் என்பது விரிவாக விளக்கப் படுகிறது. 'கலை உலகில்' என்ற பகுதியில் வரலாற்றுக் குறிப்புக்களோடு சுவை யான பல நிகழ்ச்சிகளும் காணப்படுகின் றன. கலை உலகில் பிரவேசிக்கும் ஒருவன் எத்தகைய சோதனைகளுக்கெல்லாம் ஆளாக வேண்டி யிருக்கிறது; எத்தகைய வேதனை களையெல்லாம் அனுபவிக்க வேண்டியிருக் கிறது என்பதை ஓர் இசைக் கலைஞனின் நிஜ வாழ்க்கையி லிருந்து அறியும்போது வியப்பாகவே இருக்கிறது.

ஒரு கலைஞரின் வாழ்க்கை வரலாற்றைப் பிறப்பு, வளர்ப்பு முதல் கேட்டு அறிந்து தொகுப்பதென்பது எளிதான வேலையல்ல. அந்தப் பொறுப்பை மேற்கொண்டு ஆசிரியர் 'எல்லார்வி' பிரமாதமாகச் செய்து முடித் திருக்கிறார்.

'பயிற்சி முறை' என்ற பகுதியில் சங்கீதக் கலையைப் பயிலும் முறைகளையும், ஓரளவு பயின்ற கலையைச் சாதகம் செய்யும் முறை களையும் ஆசிரியர் விவரமாக விளக்கியிருக் கிறார். ஸ்ரீ சௌடையாவைப் பற்றி எழுதும் போது ஓர் இசைக் கலைஞரின் வாழ்க்கைச் சரித்திரம் போல் எழுதாமல், சுவையான பல பிரிவுகளைத் தந்து படிக்கப் படிக்கச் சுவாரஸ்யம் அதிகரிக்கும் வண்ணம் எழுதி யிருப்பது இந் நூலின் சிறப்பு அம்சம். ஆசிரியர் 'எல்லார்வி' தமிழ் உலகுக்குப் புதிய வரல்லர்; எத்தனையோ சுவையான கதைகள் எழுதியிருக்கிறார். இந்நூலையும் சுவை ததும்ப எழுதியிருப்பது பாராட்டுக் குரியது.

பிரசுரம்: அமுத நிலையம், பிரைவேட் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை—18 விலை ரூ. 5.00

சிலம்பு பிறந்தது

சிலப்பதிகாரக் கதையைச் சற்றே சார்ந் தும், தழுவியும், வழுவியும், புனையப்பெற் றிருக்கிற இந் நாடகம் சிறந்த இலக்கிய நடையில் எழுதப் பெற்றிருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டின் உயர்வை எடுத்துரைக்கக் கருதியது போலவே இழிவையும் சிலப்பதி காரத்தின் மூலம் இளங்கோ எடுத்துரைக்க முயன்றார் என்பதும் வஞ்சிக் காண்டத்தை இளங்கோ எழுதவில்லை என்பதும், வேறு சில செய்திகளும் ஆராய்வதற் குரியவை. ஈழத்து நாடக இலக்கிய வளர்ச்சிக்கு இந் நூல் பெருந் துணையா யிருக்கு மென்று முன் னுரையில் கூறியதைக் கண்டு நாமும் பெரு மைப் படுகிறோம். ஆனால் இதன்பாலுள்ள ஆராய்ச்சிக்குரிய செய்திகளை மக்களுக்கு விட்டு விடுகிறோம்.

ஆசிரியர்: சொக்கன்; வெளியீடு: இலங் கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழு: இலங்கை; விலை: ரூ. 1.25 (1 ரூ 25 சதம்).

உண்மை வந்தது!

திருவல்லிக்கேணியில் சத்திரம் போன்ற ஒரு பெரிய வீடு. குழி முயலின் சுரங்கப் பொந்துகள் போல் பல அறைகளும் பல வாசல்களும் கொண்டது. அவற்றை எப்படியோ பங்கு போட்டுக் கொண்டு எட்டுப் பத்துக் குடும்பத்தார் குடித்தனம் நடத்தினர். அவர்களிடையே ஏதேனும் மனஸ்தாபங்களும் பூசல்களும் நடமாடிக் கொண்டே இருக்கும்.



ஒரு முறை ஒரு குடும்பத்தாரின் பால் கிண்டி காணாமற் போய் விட்டது. குழந்தையின் பெற்றோரின் மனத்தில் ஒன்றிரண்டு நபர்கள் மேல் சந்தேகம் தோன்றியது. ''எலி இழுத்து வந்து உங்கள் அறையில் போட்டு விட்டதா பார்வதி அம்மாள்? மூலை முடுக்குகளில் பாருங்களேன்'' என்பதுபோன்ற சங்கேதமான யோசனைகளுக்கு, ''அப்படிப் போட்டிருந்தாலும் இரண்டு நாட்கள் சும்மா இருந்திருக்க மாட்டோம். நாங்களே விசாரித்துக் கொடுத்திருப்போம். எங்கள் மேல் சந்தேகமிருந்தால் வெளிப்படையாகச் சொல்லி விடுங்களேன்'' என்பதுபோன்ற விடைகள் நறுக்கென்று கிடைத்தன.

சில நாட்களுக்குப் பிறகு இந்த விவகாரங்களில் சம்பந்தப்படாத ஒரு குடும்பத்தாரின் நண்பர் ஒருவர் இந்தச் சச்சரவைப் பற்றிக் கேள்விப்பட்டு, ''பொய் பேசும் மனத்தை அம்பலப் படுத்த ஒரு துப்பறியும் கருவி இருக்கிறது — லை டிடெக்டர். அதை வைத்துச் சுலபத்தில் கண்டு பிடித்துவிடலாம். என் சிநேகிதர் ப்ரொஃபஸர் ராவ் அவ் விஷயத்தில் கெட்டிக்காரர்'' என்று கூறினார். பண்டத்தை இழந்தவர், வீணாய்ச் சந்தேகிக்கப்பட்டவர் உள்பட அனைவருக்குமே அதை உபயோகித்துப் பார்க்க வேண்டுமென்று தோன்றிற்று.

மறு ஞாயிற்றுக்கிழமை சோதனை நடந்தது. ராவ், ''இதை ரொம்ப சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டாம். ஞாயிற்றுக்கிழமை பொழுதுபோக்குத் தமாஷ் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த யந்திரத்தால் வெளியாகும் சாட்சியம் கோர்ட்டில் செல்லாது'' என்று ஆரம்பித்து, விளையாட்டாக ''மனச் சாட்சி மிகவும் பொல்லாதது. நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் — ஒரு உஞ்சவிருத்தி பிராமணர் 'ஹரே ஸ்ரீ கிருஷ்ணாய நம:' என்று இரண்டு மூன்று முறை கூவியும் யாரும் கவனிக்காதிருக்கவே அலுத்துக்கொண்டு திரும்புகையில் காலடியில் கிடந்த ஒரு கிண்டியை எடுத்துத் தம் அரிசிப் பாத்திரத்துக்குள் போட்டுக் கொண்டுவிட்டாராம். அதன் பிறகு ஒரு மாதம் வரை அவர் அந்தத் தெருப் பக்கம் போகவில்லையாம். அதற்குப் பிறகு மறுபடியும் அந்த வீட்டில் நுழையும்போது 'ஹரே கிண்டியாய நம:' என்று சொல்லித் தம் குற்றத்தை வெளியிட்டு விட்டாராம்'' என்று சொல்லிச் சிரித்து, எல்லார் முகத்தையும் ஆராய்ந்தார்.



அதன் பிறகு ஒவ்வொருவராக அந்தக் கருவியின் ரப்பர்க் குழல்கள், மின்சாரக் கம்பிகள் முதலியவற்றுடன் முறைப்படி இணைக்கப்பட்டனர். ராவ் சிரித்துக் கொண்டே சென்னை ராஜபவனம், குதிரைப் பந்தயம், எஞ்ஜினீயரிங் கல்லூரி என்ற பல வியாஜங்களை வைத்துக் 'கிண்டி' என்னும் வார்த்தையைத் தம் கேள்விகளில் புகுத்தினர். பார்வதி அம்மாளின் முறை வந்தபோது, ''மாம்பலம், சைதாப்பேட்டை, அதற்கடுத்த ஸ்டேஷன் என்ன அம்மா?'' என்ற கேள்விக்கு ''கிண்டி'' என்று விடையளிப்பதற்குள் அவள் பதறிப் போனாள்.

எல்லாரும் வியப்புடன் யந்திரத்தின் மூன்று ஊசிகளின் கிறுக்கல்களைக் கவனித்தார்கள். அவர்கள் நடத்தையால் மேலும் வியர்த்து விறுவிறுத்து அவளுடைய நிலை முன்னிலும் மோசமாயிற்று.

அதே சமயம் தன் அத்தை வீட்டுக்குப் போயிருந்த அவளுடைய கணவர் திரும்பி வந்து என்ன சமாசாரம் என்று விசாரித்தறிந்து, ''பேஷ், பேஷ், பழங்கால மூடநம்பிக்கைகள்போல், இது புதுயுக விஞ்ஞான நம்பிக்கை போல் இருக்கிறது. இருக்கட்டும். எனக்கு மூன்று யோசனைகள் தோன்றுகின்றன. கிண்டியின் விலையை நான் கொடுத்து விடுகிறேன். உடனே வேறு வீட்டில் இடம் பார்க்கிறேன். மிஸ்டர் ராவ், நீங்கள் இந்தச் சோதனையை வேறிடங்களில் நடத்த வேண்டாம்'' என்றார்.

''ஏன், என்ன சமாசாரம்?'' என்று ராவ் கேட்டதற்கு அவர், ''என் அத்தை என் மனைவியைப் பல ஆண்டுகளாகத் துன்பப்படுத்தி வந்திருக்கிறாள். சென்ற மாதம் தான் அவளுக்குக் கணிசமான ஜீவனாம்சமளித்து ஒரு உறவினர் வீட்டில் விட்டிருக்கிறோம். இந்த மாதப் பணம் கட்டிவிட்டு இப்போதுதான் வருகிறேன். அவள் இருப்பது கிண்டியில்'' என்று விளக்கம் அளித்தார். — ம. சீ. க.

ஆபீஸ் வேளை!

கோமதி சுவாமிநாதன்

"மாணிக்கம்! வர்றீங்களா? ஒரு ஒன் பை டூ போட்டு விட்டு வரலாம்!" என்று கூறிக் கொண்டே ராமானுஜம் எழுந்திருந்தான். ராமானுஜம் அப்படி எழுந்திருந்தால் அப்போது மணி பத்து இருபத்தி ஐந்து என்று கடிகாரத்தைப் பார்க்காமலே தெரிந்து கொள்ளலாம். பத்து ஐந்துக்குக் காரியாலய ஆசனத்தில் வந்து அமரும் ராமானுஜத்துக்குப் பத்து இருபத்தி ஐந்துக்குக் கான்டீனில் அரைகப் காப்பி குடித்தாகவில்லை என்றால் வேலை ஓடாது! கான்டீனிலோ அரைகப் காப்பி கொடுக்கும் வழக்கம் இல்லை. அதற்காகப் பஸ் கண்டக்டர்கள் முன் காலத்தில் பிரயாணிகளைக் கூப்பிடும் பாணியில் ஒன் பை டூவுக்கு — அதாவது ஒரு காப்பியை இரண்டு பங்கு போட்டுக் கொள்ளப் பங்காளி சேர்ப்பது வழக்கத்தில் வந்து விட்டது ராமானுஜத்துக்கு.



"நான் இப்போதுதான் ஒரு 'புல்' சாப்பிட்டுவிட்டு வந்தேன்" என்றார் எதிர்ப் பக்க ஆசனத்தில் இருந்த மாணிக்கம். பத்து பத்துக்கு வரும் மின்சார ரயிலில் வந்து இறங்கிப் பத்துப் பதினைந்துக்குக் காரியாலயத்தில் நுழைந்து ஆஜர்ப் பட்டியலில் கையெழுத்து கூடப் போடாமல் நேராகப் பின்னால் உள்ள கான்டீனுக்குப் போய் உட்கார்ந்து விடுவார். காப்பி உள்ளே போனால்தான் அவருக்குக் காரியாலயம் வந்துவிட்டோம் என்ற உணர்ச்சி தோன்றுமோ என்னமோ? பத்து இருபத்தி ஐந்துக்கு ஆசனத்தில் வந்து உட்காருவார்.

"வேறே யாரு வர்றீங்க?...ரங்கநாதன்! உங்களுக்கு ஒரு 'ஹாப்'... ஒன் பை டூ!..." என்று இன்னொரு பக்கம் பார்த்தான் ராமானுஜம். ஏலக் கடைகளில் சாமான்களைக் கையில் வைத்துக் கொண்டு 'ஒரு தரம், இரண்டு தரம்' சொல்லும் பாணியில் அமைந்திருந்தது அவன் வேண்டுகோள்!



"இன்றைக்கு ஆபீஸ் கான்டீனில் காப்பி சாப்பிடலாமா வேண்டாமா என்று ரங்கநாதன் வீட்டில் கேட்டுக் கொண்டு வரவில்லையாம். அவன் கையிலே போக வர பஸ் சார்ஜ் கொடுத்தால் அவன் பெரம்பூருக்குப் போய்க் கேட்டுக்கொண்டு வருவான். அதுவரை நீ பொறுத்துக் கொண்டிரு" என்றான், அப்போதுதான் உள்ளே வந்த பசுபதி.

ரங்கநாதன் கான்டீன் விரோதி இல்லை. அவனுக்குத் தான் கொண்டு வரும் டிபனைத் தவிர வேறு எதையும் வெளியே சாப்பிட்டோ, குடித்தோ பழக்கமில்லை. அனாவசியமாகச் செலவு செய்யும் பழக்கமும் இல்லை.

"உன்னை எல்லோரும் கைவிட்டுவிட்டார்களாக்கும்! பரவாயில்லை. நான் வருகிறேன். ஆனால் நீதான் கணக்கு எழுத வேண்டும்" என்றான் தட்டெழுத்துச் சங்கரன். அவன் உள்ளே நுழைந்து தட்டெழுத்து யந்திரத்தைத் திறந்து தயாராக வைத்துவிட்டுப் பேசினான்.

"நான் காப்பிப் பந்தல் வைத்திருக்கிறேனா, தர்மம் பண்ண? முழுக் காப்பியையும் நானே குடித்துவிட்டுப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே ராமானுஜம் துணிந்து எழுந்திருந்துவிட்டான்.

"சரி சரி! வந்து தொலைக்கிறேன்! யாராவது ஓசியில் அரைக் கப் காப்பி கொடுப்பார்களா என்று பார்த்தேன். கர்ணன் கவச குண்டலத்தையே கொடுத்தானும் கடைசி நேரத்தில். இங்கே அரை கப் காப்பிக்கு மூக்கால் அழும் 'வெருணன்'கள்தான் இருக்கிறார்கள்" என்று சொல்லிக் கொண்டே சங்கரன் ராமானுஜத்தைப் பின்தொடர்ந்து சென்றான்.

"ராமானுஜரைச் சங்கரர் பின்பற்றிவிட்டார். மாத்வாச்சாரியார் சும்மா இருக்கலாமோ? என்னையா, லட்சுமி நாராயண ராவ் நீர் போகவில்லையா?" என்றான் அப்போதுதான் உள்ளே வந்த ரகுபதி.

"ஆகா! நம் ஆபீஸ் மகா பெருமை வாய்ந்தது. ஆச்சார்ய புருஷர்களைப் படைத்தது" என்றான் ரங்கநாதன்.

"அபசாரம்! அபசாரம்! அந்தப் புண்ணிய புருஷர்கள் பெயரைச் சொல்லி விட்டு உடனே இந்தப் புளியோதரைக் கிண்டல்கள், வெங்காய வடை மகாத்மாக்கள் பெயரையும் சொல்லாதீர்கள்" என்று சொல்லிக்கொண்டே லட்சுமி நாராயணராவ் என்று குறிப்பிடப்பட்ட ஆசாமி தன் ஆசனத்தில் உட்கார்ந்தான்.



''மாணிக்கம் சார் ! கொத்தவால்சாவடிப் பக்கம் போயிருந்திங்களா? மிளகாய் வற்றல் விலை ஏறிவிட்டது என்று பேசறாங்களே!'' என்றான் ரங்கநாதன்.

''சேச்சே! ஆபீசுக்கு வந்து கூடவா மிளகாய் வற்றல் நினைவு? இந்த வீக்லியிலே மிளகாயைப் பற்றி ஒரு கட்டுரையே வந்திருக்கிறது. இதை...'' ரகுபதி ஆரம்பித்தான்.



''கொண்டு போய் ஊற வைத்து அரைத்துச் சாம்பாரில் கலக்கு'' என்று சொல்லிக் கொண்டே பூவராகன் உள்ளே வந்தார். பூவராகன் ஆபீசில் நுழைகிறார் என்றால் மணி பத்தேமுக்கால்.

''நம்ப ஆபீஸர் காரசாரமாக இந்தப் பைலில் எழுதி யிருக்கிறார். அதைப் பார்த்தவுடன் எனக்கு மிளகாய் வற்றல் நினைவு வந்து விட்டது!'' என்று சமாளித்தான் ரங்கநாதன்.

''நான் போகலீங்க. ஊரிலிருந்து வத்தல் வந்திட்டது'' என்று பதிலளித்தார் மாணிக்கம்.

ராமானுஜமும் சங்கரனும் சேர்ந்தாற் போல் திரும்பி வந்தார்கள். ''பிரண்ட்ஸ்! இன்றைக்குக் காப்பி பிரமாதம். நல்ல காப்பி குடிக்க விரும்புகிறவர்கள் சீக்கிரம்போகவேண்டும். அப்புறம் டிக்காக்ஷன் வெந்நீர் ஸ்நானம் செய்துவிடும்'' என்றான் ராமானுஜம்.

''சரிதான்! இன்றைக்குக் காப்பி மட்டமாக இருந்திருக்கும். ஆகவே அந்தக் காப்பியை எல்லோரும் குடித்துத் தொலைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ராமானுஜம் பிரசாரம் பண்ணுவான்'' என்றார் பூவராகன்.

''ஐயையோ! ராமானுஜத்துக்கு நல்லது கெட்டது என்றுகூட ஏதாவது தெரியுமா, என்ன? பாவம்! நான் நன்றாக இருக்கிறது என்று சொன்னேன். அதை வைத்துக் கொண்டுதான் அவன் சொல்லுகிறான்'' என்றான் சங்கரன்.



''அடபாவி! இப்படியாகாலே வாருவது?'' என்று ராமானுஜத்தைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான் ரகுபதி.

''வெறும் சகதி. அப்படித்தான் காலே வாரும்'' என்று ராமானுஜம் சங்கரன் மேல் உள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டான்.

''ஆமாம், ஆமாம்!. என்ன டவுன் பிளானிங்? மகாமட்டம். எங்க தெருவெல்லாம் ஒரே சகதி'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான் சுப்பாமணி.

அவன் புதிதாகக்கிளம்பியிருக்கும் மகாலிங்க புரத்தில் புது வீடு கட்டியிருக்கிறான். ஆகையால் அவன் பேச்சில் எப்போதுமே வீடு, பிளானிங் சம்பந்தமான வார்த்தைகள் அடிபடும். சுப்பாமணி பத்து மணிக்கெல்லாம் ஆபீஸ் எல்லையை மிதித்து விட்டு, 'ரிஜிஸ்டிரார் ஆபீசுக்குப் போகிறேன், சிமிண்ட் கண்ட்ரோலரைப் பார்க்க வேண்டும்' என்று கிளம்பிப் போய்விட்டுப் பதினொன்றரை மணிக்குத்தான் வருவான்; வீட்டைப் பற்றிப் பேசாத நேரத்தில் நாட்டைப் பற்றிப் பேசும் வழக்கம் அவனிடத்தில் சமீபத்தில் தொத்திக் கொண்டிருந்தது.

''இந்தாப்பா சுப்பாமணி! உன்னுடைய பீக்கில் நியூஸை ஆரம்பித்துவிடாதே. வேலை நிறைய இருக்கிறது. நாலு ஸ்டேட்மெண்டு களைப் போட்டாக வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே ராமானுஜம் நாலு பைல்களைப் பீரோவிலிருந்து உருவியெடுத்து மேஜை மீது போட்டான்.

''நீமாத்திரம்தான் இந்த ஆபீஸில் வேலை செய்வதாக நினைப்போ? ஏன் இந்த ஆஷாடபூதித்தனம்?'' என்று பாய்ந்தான் ரகுபதி. பூவராகன் வெற்றிலையைத் துப்பிவிட்டு வந்தார். ''இந்த ஆபீஸிலே ஒழுங்காக வேலை செய்வது ஒரே ஆசாமிதான்!'' என்று சொல்லி நிறுத்தினார்.

'' அது — யாரு ' ஆபீஸ் ரத்னவா ?'' என்றான் சுப்பாமணி.

''மிஸ்டர் கடிகாரம்!'' என்று சொல்லி விட்டு அவரும் காப்பி குடிக்கக் கிளம்பினார். பூவராகன் காப்பி குடிக்கக் கிளம்பினார் என்றால் மணி பதினொன்றரை.

''எல்லோரும் இருக்காப் போலிருக்கு! நம் விஷயத்தைக் கொஞ்சம் கவனிக்கிறீர்களா?'' என்று அறிவித்துக் கொண்டே அடுத்த ஹாலில் அமர்ந்திருக்கும் பிரணதார்த்திஹரன் வந்தான்.



''பிரணதார்த்தி வந்து விட்டது!'' என்று தணிந்த குரலில் சொன்னான் ரகுபதி. ''ஆமாம். சந்தேகமென்ன? உங்களிடம் ஒரு தடவை வாதும் பண்ணுவதற்

குள் ஒன்பது தடவை என் பிராணனையே ஹத்தி செய்து கொள்ளலாம். பிள்ளையாருக்குப் பணம் கொடுக்கப் போகிறீர்களா என்ன?'' என்றான் பிரணதார்த்திஹரன்.

பிரணதார்த்திஹரன் வீடு பல்லாவரத்திலே. அங்கு ஊர்க்காரர்கள் ஒரு பிள்ளையார் கோவிலை எழுப்பிக் கும்பாபிஷேகத்துக்கு நாள் நிச்சயம் செய்திருக்கிறார்கள். அதற்கான நிதி வசூலைக் காரியாலயத்திலேயே ஹரன் தொடங்கிவிட்டான்.

''கொசப்பேட்டையிலே புதிசாக ஒரு பிள்ளையார் பிரதிஷ்டையாக்கப்பட்டிருக்கிறார். அதற்காகக்கூட யாரோ நோட்டுப் புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள்'' என்று ஆரம்பித்தார் பூவராகன்.

''இந்தா ஐயா! நீர் கொடுத்தால் கொடும், கொடுக்காவிட்டால் சும்மா இரும்! ஆனால் இப்படிக் குறுக்குச் சால் ஓட்டிப் பிறர் தர்மத்தையும் கெடுக்காதிரும்!'' என்றான் ஹரன். பேச்சு உடனே பிள்ளையார் ஆராய்ச்சியில் சென்றது. பெரம்பூர் பிள்ளையார் மகிமையைப் பற்றி ரங்கநாதன் ஆரம்பித்தான். எழும்பூர் பிள்ளையாரைப் பற்றிய பெருமையை ரகுபதி அளந்தான். திறந்த டைபிலை மூடிவிட்டுத் தாம்பரம் பிள்ளையாரைச் சபைக்கு இழுத்து நிறுத்தினான் ராமானுஜம்.

''இந்தாப்பா ஹரன்! நான் நீடூரிலுள்ள ஒரு பிள்ளையாருக்கு இரண்டு ரூபாய் உண்டியல் போடுவதாகப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். எங்கள் குல தெய்வத்தின் கோவிலில் உள்ள பிள்ளையார். அந்தப் பிள்ளையாருக்குக் காணிக்கை செலுத்துவதற்கு முன் வேறு பிள்ளையார் வகைக்குப் பணம் கொடுத்தால் தெய்வப் பொல்லாப்பு ஏற்படும். அதனால் என்னை விட்டுவிடு'' என்றான் சுப்பாமணி.



ஹரன் உடனே தன் மேஜைக்குப் போய் ஒரு மணியார்டர் பாரத்தை எடுத்து வந்து சுப்பாமணி மேஜை மீது வைத்தான். ''முதலில் உன் பிள்ளையாருக்கு அனுப்பு. அப்புறம் எனக்கு இரண்டு ரூபாய் போடு'' என்றான்.

''கழுத்திலே கத்தியை வைக்காதே அப்பா. அந்த இரண்டு ரூபாய் கையிலே கிடைக்காமல்தானே திண்டாடுகிறேன்? போன மாதம் வீட்டுக்கு 'டிஸ்டெம்பர்' அடிக்க ஏற்பாடு செய்தேன். பாதி வேலை நடக்கிறபோது டிஸ்டெம்பர் விலை ஏறிப்போச்சு! எல்லாம் இந்த நாசமாய்ப் போன சைனீஸ் அக்ரெஷனாலே! கடைக்காரன் தெரிந்தவன். கடன் கொடுத்தான். ....இந்தா! இந்த எமர்ஜென்ஸி பீரியட் முடிகிறவரை பிள்ளையார் அது இது என்று என்னிடம் வராதே'' என்றான் சுப்பாமணி. வழக்கம் போல் அவன் வீட்டையும் நாட்டையும் போட்டுக் குழப்பினான்.

''பலே! பலே! சுப்பாமணி சரியான போர்வையாக எடுத்துப் போர்த்திக் கொண்டான்! நீடூர்ப் பிள்ளையாருக்குக் காணிக்கை போக நீண்ட நாட்களாகும். அதற்குள்ளே நம்ப ஹரன் பிள்ளையாருக்குக் கும்பாபிஷேகம் நடத்தி முடித்துச் சுப்பிரமணியர் கோவிலுக்கு விண்டு கொண்டு வந்து விடுவான்! நம்ப குமாரசாமி வீடு மாற்றின கதைதான்'' என்றார் பூவராகன்.

''அது யாரு குமாரசாமி?'' என்று ஆவலுடன் கேட்டான் ரங்கநாதன்.

''வெளியூரிலே நடந்த சம்பவம். குமாரசாமி குடியிருந்த வீடு சௌகரியமாக இல்லை. கிணறு ஒன்றரை மைல் நீளம். அடிக்கிற பம்பு மாதத்திற்கு இருபத்தி ஒன்பது நாள் ரிப்பேராக இருக்கும். மனிதன் வீடு தேடினார். அவருக்குச் சோணாசலம் என்றொரு நண்பர். குமாரசாமி வீடு தேடுவது தெரிந்ததும், சோணாசலம் குமாரசாமி இருந்த வீட்டுக்கு வர ஆசைப்பட்டார். 'ஆஹா! நான் காலி பண்ணினது வெளியில் தெரியாமல் நீர் வந்து விடலாம்' என்று வாக்குக் கொடுத்தார் குமாரசாமி. அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. குமாரசாமி சோணாசலத்திடம் நூறு ரூபாய் கைமாற்று வாங்கி இருந்தார். மனிதன் அந்த 'ரூபாய்க்குப் பிராணனை வாங்காமலிருக்க இப்படி உதவி செய்ய நினைத்தார். தாற்காலிக உதவி தான்!

அடுத்த தெருவிலே ஒரு வீட்டு வாசலில் 'வாடகைக்கு விடப்படும்' என்ற போர்டு மாட்டியிருந்தது. வீட்டின் சொந்தக்காரர் கிராமத்தில் இருந்தார். அவரை நன்றாகக் குமாரஸ்வாமிக்குத் தெரியும். வீடும் நல்ல வீடு. கிராமத்துக்காரரைச் சந்தித்துச் சாவி வாங்கு முன்பே புது வீட்டுக்குப் போக நாள் பார்த்துவிட்டார். அதற்கு முந்தின நாள் சோணாசலத்துக்கு நல்ல நாள். அவர் குடும்பத்தோடும் சாமான்களோடும் குமாரசாமி வீட்டுக்கு வந்துவிட்டார். அன்று கிராமத்துக்குப் போன குமாரசாமி அலறிப் புடைத்துக்கொண்டு வீடு திரும்பினார். அவர் பார்த்திருந்த வீட்டுக் குடித்தனக்காரர்கள் இன்னும் காலி பண்ணவில்லையாம். வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியூர் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டாத போக்கிரி யாரோ அந்த வீட்டு வாசலில் போர்டொன்றை மாட்டியிருக்கிறான்.

''குமாரசாமி சோணாசலத்தைக் கெஞ்சினார். திரும்பிப் போக. சோணாசலம் நிமிர்ந்து நின்றார். 'நீர் கொடுக்க வேண்டிய நூறு ரூபாயைக் கீழே வையும். போகிறேன்' என்றார். அவருக்குத் தெரியும், குமாரசாமியால் ரூபாயை உடனடியாகத் திருப்பிக் கொடுக்க முடியாதென்று. அப்புறம் பல வருஷங்கள் ஒரு மக்மோகன் கோட்டைப் போட்டுக் கொண்டு இரண்டு குடித்தனங்களும் அந்த வீட்டில் இருந்தார்கள். சோணாசலத்தின்

பெண் தன் அகர சங்கீதத்தால் குமாரசாமி போர்ஷனில் ஆக்ரமிப்புச் செய்துகொண்டே யிருந்தான்.'' பூவராகன் அந்தக் கதையைக் கூறி முடித்தார்.

''இப்போது கப்பாமணி நீடூர் பிள்ளையாருக்குப் பணம் அனுப்புவதும் குமாரசாமி கைமாற்றுக் கொடுக்க வேண்டிய கதை மாதிரிதானிருக்கும்! ஹரன் அவன் கழுத்தை அமுக்கிக் கொண்டே யிருப்பான்'' என்றார் மாணிக்கம்.

''அப்படிச் சொல்வதற்கில்லை. ஹரன் தன் கையிலிருந்தே கப்பாமணி பேரில் நீடூருக்குக் காணிக்கை செலுத்திவிட்டு அதையும் சேர்த்துச் கப்பாமணியிடம் வசூல் பண்ணி விடுவான்'' என்றான் ரங்கநாதன்.

''அப்படிப் பைத்தியம் யாருக்கும் பிடிக்கவில்லை! ஆனால் ஒரு விஷயம். பல்லாவரம் பிள்ளையார் ரொம்பச் சக்தி வாய்ந்தவர். அவரை யாரும் ஏமாற்ற முடியாது'' என்று ஹரன் கூறி விட்டுக் கிளம்பினான்.

''இந்தாப்பா! லஞ்ச் டைம். சீக்கிரம் கிளம்புங்கள். அப்புறம் கான்டீனில் ஒன்றும் மிச்சம் இருக்காது'' என்று குரல் கொடுத்தான் ரகுபதி. மணி ஒன்றடித்து ஐந்து நிமிடம். அத்தனை பேரும் ஏதோ ராணுவ அணி வகுப்பு நடத்துவது போல் கான்டீனை நோக்கி நடந்தார்கள்.

மணி ஒன்றே முக்கால். மறுபடியும் களை கட்டியது. ''இந்தா! ராமானுஜம். ஒரு மகஜர் எழுதப் போகிறேன். அதில் எல்லோரும் கையெழுத்துப் போடுங்கள்'' என்றார் பூவராகன்.

''சரி! புதிசா என்ன விழாக் கொண்டாடப் போகிறீர்? இந்த எமர்ஜென்ஸியிலே என்ன விழா வேண்டியிருக்கிறது?'' என்று முணு முணுத்தான் கப்பாமணி.


''பீன்ஸ் வடை விழா! கான்டீனில் இனிமேல் பத்மநாபன் பீன்ஸ் வடை பண்ணினால் கான்டீனைப் பகிஷ்கரிப்போம் என்ற மகஜர்... சே சே! வாரத்தில் ஆறு நாள் பீன்ஸ் வடையா?'' என்றார் பூவராகன். அவருக்குப் பீன்ஸ் என்றால் பிடிக்காது.

மதிய வகுப்பு முடிந்து டீ சாப்பிட்டு விட்டு எல்லோரும் மீண்டும் வந்தபோது மணி மூன்றரை. ரங்கநாதன் தீவிரமாக வேலையில் கவனம் செலுத்த ஆரம்பித்தான்.

வெற்றிலையை வாயில் குதப்பிக் கொண்டு அலமாரியில் பைல்களைத் தேட ஆரம்பித்த பூவராகன், ''ஏய் கப்பாமணி!'' என்று கூப்பிட்டுக் கொண்டே திரும்பினார். அவன் இடம் காலியாக இருந்தது. ''கப்பாமணி பெர்மிஷன் போட்டுவிட்டுப் போயிருக்கிறான்'' என்றான் ரகுபதி.

''அட ராமசந்திரா! அவன் கிட்டே ஒரு பைல் மாட்டிக் கொண்டிருக்கிறது....வேலை செய்யலாம் என்றால் எத்தனை இடைஞ்சல்!'' பூவராகன் அங்கலாய்த்தார்.

''ஏன் மற்றபைல்கள் இல்லையா? வேலையைப் பாருமேன்!'' என்றான் ரகுபதி.



''இதென்னடி கமலா! புது நகையா இருக்கு!''

''ஆமாம் மாமி 'பதினாறு காரட்' தங்கம்!''

''எப்படித் திஜர்நு பதினாறு காரட்டில் பண்ணினே!''

''பதினாறு காரட் தங்க 'நிப்பு'களை வாங்கி ஒன்றுசேர்த்துப் போட்டுண்டுட்டேன்!''

''ஆமாம்! நீ சொல்றது வாஸ்தவம்தான். ஆனால் இப்போதெல்லாம் ஐந்தரை மணி வரை உட்கார வேண்டி யிருக்கிறது என்று நினைக்கும்போதே உற்சாகமெல்லாம் நாலு மணிக்கு ஓடிவிடுகிறது.'' என்று சொல்லிக் கொண்டே பூவராகன் பீரோவை மூடினார்.

''மணி நாலாயிடுத்தோ?'' என்றான் ரங்கநாதன்.

''இனிமேல் நாளையிலிருந்து ஒரு விரதம். காலை பத்து மணியிலிருந்து மாலை நாலு மணி வரை யாருடனும் பேசாமல் வேலை செய்வது என்று தீர்மானித்துவிட்டேன். யாரும் என்னுடன் பேச்சுக் கொடுக்கக் கூடாது'' என்றார் பூவராகன்.

''நிறைவேற்ற முடியாத நல்ல யோசனைகளில் இதுவும் ஒன்று. எல்லோரும் அப்படித் தான் நினைத்துக் கொண்டு வருகிறோம். இங்கு வந்தவுடன் அதை மறந்துவிடுகிறோம்'' என்று சொல்லிக் கொண்டே சங்கரன் வந்து சேர்ந்தான்.

''ஹூம்! வீட்டுக்குப் போனால் வீட்டுக் கவலை. ஆபீஸ் அதை மறக்க முயற்சி செய்யும்போது வேலையையும் மறந்துவிடுகிறோம். இனிமேல் அது உதவாது. ஆபீஸ் கவலையும் பட்டாக வேண்டும். இல்லாத போனால் வீட்டில் ஆபீஸ் கவலையையும் ஆபீஸில் வீட்டுக் கவலையையும் படவேண்டியது தான்'' என்றார் பூவராகன்.


பின்னால் போன ரகுபதி கரும் பலகையுடன் திரும்பி வந்து அறையின் நடுவில் வைத்தான்.

''பேச்சைக் குறைப்போம்—இனி ஏச்சுக்கு இடம் கொடோம்!''

என்று அதில் கொட்டையாக எழுதப்பட்டிருந்தது. உடனே எல்லோரும் தத்தம் பைல்களைப் பிரித்தார்கள். மணி ஏழரையாகி விட்டது. கடிகாரத்தை யாரும் பார்க்காமல் காரியத்தில் கண்ணாயிருந்தார்கள்.



41-ம் பக்க ஜோக்குக்கு விடை: போட்டோகிராபர் தான் நடுங்கினார்!



அத்தியாயம் 9

பேதை நெஞ்சம்

தாராவுடைய மனத் தராசின் ஒரு தட்டில் அவளுடைய குண நலன்களான அறிவாற்றல், பண்பு, கண்ணியம், எதற்கும் கலங்காத உறுதி, கட்டுப்பாடு ஆகியவை கனமான எடைக் கற்களாக அமர்ந்திருந்தன. மறு பக்கத்திலோ ஒன்றன் பின் ஒன்றாக அதிர்ச்சிகள் விழுந்த வண்ணம் இருந்தன. ஆயினும் அந்தத் தோல்விகளால் அவளுடைய சிறப்பியல்புகளைத் தூக்கி அடிக்க முடியவில்லை. கடைசியாக வெங்கிட்டு வடிவேலுமீது ஒரே வீச்சிலே தேசத் துரோகம், நம்பிக்கைத் துரோகம், சிநேகத் துரோகம் போன்ற பல குற்றங்களைச் சுமத்தியபோதுதான் மனத் தராசில் ஏமாற்றங்களை ஏந்தி நின்ற தட்டு அந்தப் பெரும் பாரத்தைத் தாங்க முடியாமல் தாழ்ந்தது. அத்துடன் தாராவும் சரிந்து விழுந்து விட்டாள். மலை அசைந்தாலும் மனம் தளராதவள்தான் என்பதனைச் சென்ற பல தினங்களில் நிரூபித்து வந்த அவள் உலகமே வெடித்துச் சிதறியதும் தன்னை நிதானப்படுத்திக் கொள்ளும் சக்தியின்றி நினைவிழந்தாள். அவள் உலகமெல்லாம் வடிவேலுதான். அந்த உலகம் பொய்த்துப் போவதென்றால் பிறகு அவளுக்கு என்ன இருக்கிறது?

இதையெல்லாம் பார்க்கவா அவள் இத்தனை நாட்களாக வாழ்ந்து வருகிறாள்? கணவன் இறந்த அன்றைக்கே அவளையும் வடிவேலு தற்கொலை புரிந்து கொள்ளுமாறு விட்டிருக்கலாமே? உற்றார் உறவினர் யாருமற்ற தருணத்தில் அவள் சிரத்தை அவன் தன் தோளில் தாங்கிக் கொண்டு தேறுதல் கூறியிருக்க வேண்டாமே?

அவன் அன்றைக்குக் காட்டிய பரிவும் அன்பும்தான் அவளையும் அவள் வயிற்றில் வளர்ந்து வந்த ஓர் உயிரையும் காப்பாற்றியது. அதற்காக அவனிடம் நன்றி உணர்ச்சி பெருகியது தாராவுக்கு. அன்று முதல் அவள் அவனுடைய நல்வாழ்வில் அக்கறை எடுத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டாள். அதனால் அவள் அனுபவித்த துயரங்கள், அடைந்த ஏமாற்றங்கள், செய்த தியாகங்கள் எதையும் அவள் பெரிதாக எண்ணிப் பொருட்படுத்தவில்லை. அவன் எதிர்காலம் எல்லா விதங்களிலும் நல்லபடியாக அமைய வேண்டும் என்கிற ஒரே

நோக்கத்துடன் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டாள்.

தேனூரில் அவன் அவளுடைய காதலைப் பெற முயன்றபோது அவனைத் திருப்திப்படுத்துவதற்காக அவள் சமூகத்தின் சட்ட திட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் காற்றில் பறக்க விட்டு விட்டு அவனைக் கல்யாணம் செய்து



கொண்டிருக்க முடியும். அவன் அப்போது விரும்பியது போல் அவர்கள் எங்கேயாவது, தங்களை இன்னார் என்று யாரும் அடையாளம் கண்டுகொள்ள இயலாத ஓர் ஊருக்குப் போய்ப் புது வாழ்வு தொடங்கி யிருக்கலாம். அது மிகவும் சுலபமான காரியம்தான். ஆனால் உண்மையில் அது அவனுக்குத் தான் செய்யும் பிரதியுபகாரமாக இருக்குமா என்று யோசிக்க ஆரம்பித்தாள் அவள்.

தன்னை உண்மையிலேயே அவன் காதலிக்கிறானா அல்லது தன்னிடம் பச்சாத்தாபப்பட்டுத் தனக்குப் புனர் வாழ்வு அளிக்கவேண்டுமென்று துடிக்கிறானா என்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அசட்டுத்தனத்தால் குடும்பத்துக்குத் தான் தேடித் தந்துவிட்ட அவமானத்தைத் துடைத்தெறியும் ஆவேசம் கொண்டிருந்தவனாயிற்றே வடிவேலு? அப்படியிருக்க மேலும் அந்தக் குடும்பத்துக்கு அபகீர்த்தியையே தேடித் தரும் காரியத்தில் அவன் ஈடுபடுவதை அவள் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? இன்று உணர்ச்சி வசப்பட்டுத் தன்னை மனைவியாக்கிக் கொள்பவன் பின்னால் அதற்காக வருத்தப்பட நேர்ந்தால்? அவனுடைய நலனிலேயே சிரத்தை கொண்டிருந்த அவளால் இந்தச் சந்தேகங்களைப் புறக்கணித்து அவன் கோரிக்கைக்குச் சம்மதமளிக்க முடியவில்லை. இது மட்டுமா? லட்சக் கணக்கில் சொத்துள்ள நிலப் பிரபுவின் ஒரே மகன் அவன். அத்தனை செல்வங்களையும் அவன் தனக்

காகத் துறந்துவிட்டு வருவதா? வடிவேலுவை ஒட்டாண்டியாக்குவதுதானு அவள் நோக்கம்?

போர்முனைக்குச் சென்று மாவீரன் என்ற பெயரெடுத்து இழந்த கௌரவத்தைத் திரும்பப் பெறப் பேரார்வம் கொண்டிருந்தான் அவன். அதுதான் அவனுக்கு உண்மையிலேயே அளவற்ற



ஆனந்தம் அளிக்கக் கூடிய விஷயமென்னும் வேறு பல நிகழ்ச்சிகளும் சிந்தனைகளும் அவன் மனத்தைக் குழப்புகின்றன என்றும் அவளுக்குப் புரிந்தது. அவனுடைய இன்பத்தையே பெரிதாகக் கருதியவள் யுத்தகளத்தில் அவனைச் சூழக் கூடிய ஆபத்தை எண்ணித் தன் இதயம் பயந்து நடுங்குவதை வெளிக் காண்பித்துக் கொள்ளாது மறைத்தாள். மறுமணம் பற்றிய அவன் பிடிவாதத்துக்கெல்லாம் செவி சாய்க்காது ராணுவத்தில் சேருமாறு அவனை ஊக்குவித்து அனுப்பினுள். அப்படி அனுப்பி வைத்தபிறகு அவள் அடைந்த வேதனை! பயங்கர டாங்குகளுக்கும் ராட்சத விமானங்களுக்கும் பெரிய பீரங்கிகளுக்கும் துரிதமாக இயங்கும் இயந்திரத் துப்பாக்கிகளுக்கும் இடையில் அகப்பட்டுக் கொண்டு கானகத்தில் கண் விழித்துக் காலத்தை ஓட்டும் அவனுடைய கதி என்னவாயிற்றே என்று அவள் பட்ட அவதி! அப்பப்பா! அவனைப் பிரிந்திருந்தது நாலு வருஷங்களா? இல்லை, நாலு கோடி யுகங்களா?

எதையும் தாங்கும் இதயம் அதையும் தாங்கியது. அவன் காட்டிய வழியில் சுதந்திர இயக்கத்தில் பங்கு பற்றிப் பணியாற்றுவது ஓரளவுக்கு ஆறுதல் அளித்தது. அத்துடன் எப்படியும் திரும்பித் தன்னிடம் வருவான் என்ற நம்பிக்கையும் இருந்தது. அவள் எதிர்பார்த்தது வீண் போகவுமில்லை. சாமான்யமாக அவன் திரும்பவுமில்லை. அவளைப் போலவே சுபாஷ் பாபுவின் தலைமையை ஏற்றுக் கொண்டவனுய் வந்தான். அவள் மேனி சிலிர்த்தது. நெஞ்சம் பூரித்தது. பரவசத்தில் ஆழ்ந்தாள் அவள், பேரிடி ஒன்று தன் தலையில் விழ விருப்பதை அறியாமல். அவனுக்குத் திருமணமாகிவிட்ட செய்தி கேட்டதும் அவள் தாங்கமாட்டாத அந்தச் சித்திரவதைக்கு முடிவு காணத்தான் குதுப்மினாரின் படிகளில் பரபரவென்று ஏறினுள். மேலே மேலே விரைகையில் அவள் இதயமே அவளை இடித்துக் காட்டியது. 'இதுதானு அவனிடம் நீ வைத்திருக்கும் அன்பின் அடையாளம்?' என்று கேட்டது. 'உன்னை வஞ்சித்து விட்டதற்காக வடிவேலு வாழ்நாள் முழுதும் தன்னைத் தானே நொந்துகொண்டு மனம் புழுங்க வேண்டியதுதானு? குற்றமற்ற ஓர் உயிரைப் பறித்துவிட்டோமே என்று உள்ளத்துக்குள் புலம்பிப் பரிதவித்துச் சாகும்வரை வாட வேண்டியதுதானு? தன் மனைவியைப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்கு உன்னுடைய பிரேதக் களை நிறைந்த முகமல்லவா இடையில் தோன்றித் துன்புறுத்திக் கொண்டிருக்கும்? அதைத்தான் நீ விரும்புகிருயா? உண்மையான அன்புடையவளாக இருந்தால் அவனுக்கு மன நிம்மதி பிறக்கச் செய்; அவன் வாழ்க்கையைச் சந்தோஷகரமானதாக்கு!' என்ற தன் இதயக் குரலுக்கு மதிப்புக் கொடுத்து நடந்து கொண்டாள் அவள். காதலித்தவனுக்காகத் தன் காதலையே துறக்கச் சித்தமாகி விட்டாள்.

நாடகம் நடத்தியதாக அவள் கூறுவதே ஒரு நாடகம்தான் என்பதை உணராத வடிவேலு ஏமாந்துதான் போனுன். காதலும் குடும்ப வாழ்க்கையும் தாராவுக்கு லட்சியமில்லை; நாட்டுச் சுதந்திரமென்கிற குறிக்கோளையே தன் உயிர் மூச்சாகக் கொண்டு அதற்காக உழைப்பவள் அவள் என்று வடிவேலு புகழ்ந்துரைத்தபோது தாராவின் நெஞ்சம் அழுதது. 'சுதந்திரமும் தேசமும் மக்களும் யாருக்கு வேண்டும்? அவை எக்

கெட்டாவது கெட்டுப் போகட்டும். நான் ஏங்குவதெல்லாம் குடும்ப வாழ்க்கைக்காகத்தான்' என்று அலறத் துடித்த நாவை அரும் பாடுபட்டு அடக்கிக் கொண்டாள் அந்தப் பேதை. அவன் விருப்பத்தையே தன் விருப்பமாக்கிக் கொண்டு விடுதலைப் போராட்டத்துக்கே முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளவும் தீர்மானித்தாள். அந்தச் சேவையில் தன்னுடன் சேர்ந்து ஒத்துழைக்க வடிவேலுவும் இருக்கிறான் என்கிற மகிழ்ச்சியும் எட்டிப் பார்க்கத் தொடங்கியது. ஆனால் அதுவும் ஆண்டவனுக்குப் பொறுக்கவில்லை போலும். சுதந்திர தேவியின் வழிபாட்டுக்காக வருஷக் கணக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டு அவள் உருவாக்கி யிருந்த கோயில்கள் தவிடு பொடியானது மட்டுமல்ல; அவற்றை இடித்துத் தரை மட்டமாக்கியது, தன் உடல், பொருள், ஆவி அனைத்துக்கும் மேலாக யாரை உயர்வாகப் போற்றி வந்தாளோ அதே வடிவேலுதான் என்று பழி சுமத்தப்பட்ட போது, அவன் காலடிகளில் பேரன்புடன் சமர்ப்பித்திருந்த தன் பூப் போன்ற இதயத்தை இரக்கமின்றி அவன் மிதித்துத் துவைப்பது போலிருந்தது தாராவுக்கு.

அத்தியாயம் 10

போலீஸ் வேட்டை

தன் பாதங்களைப் பற்றியபடி தரையில் விழுந்து கிடக்கும் பசும் பொன்னொத்த மேனியைப் பார்த்தான் வடிவேலு. கொய்து எறியப்பட்ட செண்பக மலரைப் போல் அவள் துவண்டிருந்தாலும் மதுரமான மணம் பரப்பிக் கொண்டிருந்தாள். நாட்டின் நலனுக்காகவும் நேசித்தவனின் நன்மையைக் கருதியும் அவள் மேற்கொண்டிருந்த கடுந்தவங்கள் அவள் தேகத்துக்கு அசாதாரணமான ஒளி கூட்டி மிளிரச் செய்தன.

வடிவேலு வெங்கிட்டுவை நோக்கினான். "உங்கள் விளையாட்டு வினையானதைப் பார்த்தீர்களா?" என்று கேட்டுவிட்டுச் சாந்திலால் பக்கம் திரும்பினான். "போலீஸார் எந்த வினாடியும் இங்கு வந்துவிடக் கூடும் என்றீர்களே? இருவரும் எப்படியோ தப்பி ஓடுங்கள். தாராவை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றான்.

"என்ன செய்வதாக உத்தேசம்?"

"எங்களைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். மலாயாவுக்குக் கப்பலேறிவிடுவோம் நாங்கள்."

"இவன் சொல்வதைக் கேட்காதே" என்று இடை மறித்துப் பேசினார் வெங்கிட்டு. "நாம் அப்பால் போனதும் இந்தத் துரோகி தாராவைக் கொன்று போட்டுவிடுவான்!"

"வாத்தியாரய்யா!" என்று அலுத்துக் கொள்பவனைப் போலத் தலையசைத்துச் சிரித்தபடியே அவரை விளித்தான் வடிவேலு. "வேடிக்கைக்கும் ஓர் எல்லை உண்டு. தாராவை இங்கிருந்து உடனடியாக அப்புறப்படுத்தி அழைத்துக் கொண்டு போக வேண்டும் நான். சீக்கிரம் ஷெட்டிலிருந்து காரை எடுத்து வாருங்கள். நான் இவளைத் தூக்கிக் கொண்டு வருகிறேன். நேரமில்லை எனக்கு" என்றான்.

"பேஷ்! ஓங்கிப் பேசினால் பயந்து விடுவேன் என்று நினைத்தாயா? உன் யோசனைப்படி நடந்துகொள்ள எனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை. சகோதர ஊழியர்களைக் கம்பி எண்ணும்படி விட்டுவிட்டுத் தான் மட்டும் தப்பிப் பிழைப்பதைத் தாரா கண்டிப்பாக விரும்ப மாட்டாள்" என்றார் வெங்கிட்டு.

"தலைமறைவாகப் போய்விட்டாலும் பரவாயில்லை. ஆனால் நீங்கள் மோட்டாரில் அவளை ஏற்றிக் கொண்டு நேராக ராணுவப் போலீஸாரிடம் போய்க் காட்டிக் கொடுக்க முற்பட மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டான் சாந்திலால்.

'நிஜமாகவே அவர்கள் தன்னை விரோதியாகக் கருதுகிறார்களா? நெருக்கடி நிலையை நன்கு உணராமல் வாத்தியாரய்யா வெறுமனே கிண்டல் செய்கிறார் என்று தான் முடிவு கட்டியது தவறா?' தன்னுடைய நாணயத்தை நிரூபிக்கவும், தாரா தப்பிச் செல்வது அத்தியாவசியம், அது கோழைத்தனமாகாது என்பதை வெங்கிட்டுவுக்குப் புரியும்படி எடுத்துரைத்து அவருடைய அசட்டுப் பிடிவாதத்தை மாற்றவும் வாதாட வேண்டும்; அதற்குப் போதில்லை எனக் கண்டான் வடிவேலு.

ஒரே ஒரு வழிதான் புலப்பட்டது அவனுக்கு. வேவு பார்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்த அவன் தற்காப்புக்காக ஓர் ஆயுதத்தை வைத்திருந்தான். இத்தனை நாட்களாக அதனை உபயோகப்படுத்தும் சந்தர்ப்பம் நேரவில்லை. கால் சராய்ப் பையில் பத்திரமாகத் தூங்கிக்



தூய
மென்மையான
சருமசுகம்
பெற
'ஹேஸலின்'
கோல்ட்
க்ரீம்
எத்தனை மென்மை, எத்தனை மழமழப்பு
'ஹேஸலின்' கோல்ட் க்ரீம் மூலம் உங்கள் சருமத்துக்கு மிக இதமான அழகுப் பராமரிப்பு கிட்டுகிறது. ஊடுருவிச் சுத்தம் செய்யும் அதன் வல்லமையினால் நீங்கள் அறியாமலேயே மறைந்துள்ள அழுக்கு வெளிப்படுகிறது...கறைகள் ஏற்படு முன்பே அவற்றைத் தடுத்து விடுகிறது. 'ஹேஸலின்' கோல்ட் க்ரீமின் சத்துச் செறிந்த எண்ணெய்கள் சருமத்துக்கு கட்டுத் தளரா இளமையை யூட்டி, உங்கள் மேனியெழிலைப் பளிச்சிடச் செய்கிறது. அழகிய, மிருதுவான சருமம் உங்களுக்கு நிச்சயம் வேண்டுமா? அப்படியானால் ஒவ்வொரு இரவும் உங்கள் முகத்தை 'ஹேஸலின்' கோல்ட் க்ரீம் கொண்டு சுத்தம் செய்யுங்கள். காலை எழுந்தவுடன், ஸ்நானத்துக்குப் பிறகு, பக்குவமான பவுடர் தளமாய் அமைந்து, சருமப் பாதுகாப்பு அளிக்கும் ''ஹேஸலின்' ஸ்னோ'' பூசுங்கள். அவ்வளவே!
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு.


வழக்கமாக
உபயோகியுங்கள்
நீம்
டூத் பேஸ்ட்
மற்ற எல்லா
டூத்பேஸ்ட்களிலும்
சேர்க்கப்பட்டுள்ள
முக்கியமான ரசாயன
பொருள்களோடு நீம்
சத்தும் கலக்கப்பட்
டுள்ள டூத் பேஸ்ட்
அது ஒன்றே
தான்
கல்கத்தா
கெமிகல்
கல்கத்தா 29
NTP 102-TM





கொண்டிருந்த அந்தச் சிறிய கைத்துப்பாக்கியை எடுத்தான் வடிவேலு.

''வாத்தியாரய்யா! நிமிஷங்களைப் பேசி வீணடிக்கப் போவதில்லை நான். இரண்டு பேரும் சொன்னபடி கேளுங்கள்!'' என்று உத்தரவிட்டுவிட்டு, அவர்கள் ஸ்தம்பித்து நிற்கையில், குனிந்து ரோஜாப்பூ மாலை ஒன்றை இதழ்கள் உதிராமல் சர்வ ஜாக்கிரதையாக எடுப்பது போல் தாராவை இரு கரங்களாலும் வாரி எடுத்து அணைத்தபடி நிமிர்ந்தான் வடிவேலு. இடக் கரம் அவள் கழுத்தையும், வலக் கரம் முழங்கால்களையும் தாங்கத் துப்பாக்கி முனையால் வெங்கிட்டுவையும் சாந்திலாலையும் குறி பார்த்தான்.

''உம்! நடங்கள்! நிதானமாக! ஓடயத் தனித்தால் கூடத் தயங்க மாட்டேன்!''

எல்லாரும் கார் ஷெட்டை நோக்கி நகர்ந்தார்கள். முதலில் வெங்கிட்டுவை டிரைவர் சீட்டில் அமரச் செய்தான் வடிவேலு. பின்னர் தாராவைப் பின் சீட்டில் படுக்க வைத்துவிட்டுத் தானும் ஏறி உட்கார்ந்து கொண்டான். ''சாந்திலால்! நாங்கள் போய் வருகிறோம்; உங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வழி தேடுங்கள்!'' என்று கூறி விட்டுக் காரை கிளப்புமாறு வெங்கிட்டுவுக்குக் கட்டளை பிறப்பித்தான். தம் முதுகை நெருடிக் கொண்டிருக்கும் துப்பாக்கிக்கு அஞ்சி அவரும் கீழ்ப்படிந்தார்.

தெருவை அடைந்ததும் முனை திரும்பிப் போலீஸ் ஜீப் ஒன்று முன்னேறுவது வடிவேலுவின் கூர்மையான கண்களுக்குத் தென்பட்டது. ''வாத்தியாரய்யா! போலீஸாரிடம் தான் சிக்கிக் கொள்ளுவதற்கு முன்னால் முதலில் விடை பெற்றுக் கொள்ளப் போவது உங்கள் பிராணன்தான்!'' என்று எச்சரித்தான் வடிவேலு. வேகத்தை அதிகரிக்கும் விசையை வெங்கிட்டு இன்னும் சற்று அழுத்தினார்.

ஜீப் தாரா தங்கியிருந்த வீட்டுத் தோட்டத்துக்குள் நுழையாமல் தங்களைப் பின்தொடர்ந்து வருவதை வடிவேலு கவனித்தான். தாராவுடைய காரை அவர்கள் அடையாளம் கண்டு கொண்டிருக்க வேண்டும். தப்பிச் செல்வதை ஊகித்திருப்பார்கள்.

துப்பாக்கி முனை வெங்கிட்டுவின் கழுத்தைக் குத்தியது. அவ்வளவுதான், வாயுவேக மனோவேகமாகப் பிய்த்துக் கொண்டு பறந்தது கார். ஜீப்பில் பின் துரத்தி வந்தவர்களும் எளிதில் தோல்வியை ஒப்புக் கொள்கிறவர்களாக இல்லை. இப்போது வேறு ஒரு புதிய அபாயமும் காரில் இருந்தவர்களை அணுகியது. ஆக்ராவுக்குச் செல்லும் சாலையில் விரைகையில், ''பெட்ரோல் காணாது' என்றார் வெங்கிட்டு. ''அதிகபட்சம் இன்னும் நாலைந்து மைல்கள் போகலாம். அடுத்தாற் போல் வரும் சிறிய டவுனில் மோட்டாருக்குத் தீனி போடவில்லையானால் நடு வழியில் படுத்து விடும்.''

வடிவேலு ஒரு விநாடி சிந்தித்தான். ''வாத்தியாரய்யா! வேகத்தைக் குறையுங்கள். கணக்காக மணிக்கு இருபத்தைந்து மைல் வேகத்தில் ஓட்டிப் போங்கள்!'' என்றான். ஜீப்பைக் கிட்டத்தில் அணுக விட்டு அதன் ஒரு டயரை நோக்கிக் குறி பார்த்துச் சுட்டு வெடிக்கச் செய்வதன் மூலம் அவர்களை அந்த இடத்திலேயே தாற்காலிகமாக வேனும் நிறுத்தி விடத் திட்டம் போட்டான் வடிவேலு. ஆனால் அவன் ஜன்னல் வழியே தலை நீட்டிக்கொண்டிருக்கையில் போலீஸார் சும்மா இருப்பார்களா? பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்வார்கள், நிச்சயமாக. அப்போது வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பவனுடைய மூளை சிதறிப் போகலாம். தனக்கு நேரக் கூடிய கதியை உணர்ந்துதான் இருந்தான் வடிவேலு.

ஜீப் சமீபித்து விட்டது. பல வருஷங்களாக வடிவேலு பெற்ற ராணுவப் பயிற்சி வீண் போகவில்லை. முதல் முயற்சியிலேயே வெற்றி அடைந்தான் அவன். வந்த வேகத்தில் ஜீப் இப்படியும் அப்படியுமாகச் சாலையில் சற்றுத் தூரம் தாறுமாறாக ஓடிய பிறகு நின்று விட்டது. சிரத்தை உள்ளுக்கு இழுத்துக் கொண்டு வாத்தியாரையாவைத் துரிதப்படுத்தினான் வடிவேலு. அதே சமயத்தில் ஜீப்பிலிருந்த ஒருவனும் துப்பாக்கியை உயர்த்தினான். காரின் கண்ணாடிகள் தூள் தூளானதைத் தவிர அதிக சேதம் ஏதுமின்றிப் பிழைத்தார்கள்.

துப்பாக்கிகள் வெடித்த சத்தம் பலமாகக் கேட்டதினாலோ என்னவோ தாரா அத்தருணத்தில் மெல்லக் கண்களை விழித்துப் பார்த்தாள். அன்புடன் தன் கேசத்தைக் கோதி விடும் வடிவேலுவை நோக்கிப் புன்னகை புரிந்தவாறே அந்த விரல்களை அன்பின் அடையாளமாகப் பற்றிக் கன்னத்தில் ஒற்றிக் கொண்டாள். திடுமென அவள் நெற்றி சுருங்கியது. விழிகளில் திகைப்பு குடி கொண்டது. நடந்தவையெல்லாம் அவளுக்கு நினைவு வந்திருக்க வேண்டும். பதறித் துடித்து வடிவேலுவின் கரத்தை ஒதுக்கித் தள்ளி விட்டு எழுந்து ஒரு மூலையில் ஒண்டியபடி உட்கார்ந்தாள். ''என்னை எங்கே அழைத்துப் போகிறீர்கள்?'' என்று பீதியுடன் வினவினாள்.

''தாரா! தயவுசெய்து நான் கூறுவதை அமைதியாகக் கேள்! துரோகி என்று என் மீது பழி சுமத்திய வெங்

கிட்டு கூட இனி என்னிடம் மன்னிப்புக் கோரத் தயங்க மாட்டார். உங்களைப் போலீஸாரிடம் பிடித்துக் கொடுப்பது தான் என் நோக்கம் என்றால் சற்று முன்னால் போலீஸ் ஜீப் மீது இந்தக் கைத் துப்பாக்கியால் குறி பார்த்துச் சுட்டிருப்பேனா? ஐ. என். ஏ.வைச் சேர்ந்தவன் போல் நான் வேஷம் போட வில்லை தாரா! என்னை நம்பு!''

''உங்களை நம்புவதோ நம்பாமல் இருப்பதோ எல்லாம் எனக்கு இனி மேல் ஒன்றுதான்'' என்று விரக்தி மனப்பான்மையுடன் பேசினாள் தாரா. ''வெறும் நடைப்பிணம் நான்.''

''அப்படியெல்லாம் சொல்லாதே, தாரா! இங்கு நீ செய்து வந்த காரியங்கள் பயனற்றுப் போகவில்லை. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் மனத்திலே சுதந்திர ஆர்வத்தை நீ வளர்த்து விட்டிருக்கிறாய். சிறைச்சாலையில் மனிதர்களை அடைக்கலாம். ஆனால் ஆன்மீக பலத்துக்கு எப்படி விலங்கிட முடியும்? நீ சேர்த்து வைத்திருந்த தகவல்களெல்லாம் சரியான விதத்தில் சுபாஷ் பாபுவுக்கு உபயோகப்படாமல் போய் விட்டதே என்றும் வருத்தப்படாதே! உன்னையே நான் அவரிடம் அழைத்துப் போகிறேன்! இங்குள்ள நிலவரங்களையெல்லாம் நன்கு ஆராய்ந்து அறிந்திருக்கும் உன் நுண்ணறிவு அவருக்குப் பெரிதும் பயன்படும். ஜான்ஸி ராணி சேனையில் சேர்ந்து நீ மகத்தான பணிகளைப் புரியலாம். தோழர்கள் இங்கே சிறையில் அடைபட்டுக் கிடக்கையில் நாம் மட்டும் தப்பித்துச் செல்வது நியாயமாகுமா என்று யோசிக்காதே! தேசத்துக்கும் தலைவருக்கும் உன் சேவை தேவைப்படும் போது உன் உயிரை சர்வ ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக் கொள்வது உன் கடமை! மலாயாவில் உன் வாழ்க்கையின் புதியதொரு அத்தியாயம் தொடங்கப் போகிறது, தாரா!''

தர்க்கரீதியாக வடிவேலு கூறியவையெல்லாம் மறுக்க முடியாதவையாகத் தோன்றின தாராவுக்கு. ''எல்லாம் சரிதான். ஆனால் மலாயாவுக்கு எப்படிப் போவது?'' என்றாள் அவள்.

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம். சுத்தியவார் கடற்கரைக்கு நாளையதினம் ஜப்பானிய நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று வரப் போகிறது. மேலும் சில ஒற்றர்களை அது கொண்டு வந்து சேர்க்கலாம். இருபத்தி நாலு மணி நேரம் தாமதித்து அது மீண்டும் புறப்படும். போர்பந்தருக்கு அருகில் உள்ள ஒரு குக்கிராமத்திலிருந்து யாரும் அறியாமல் நாம் படகில் ஏறிச் செல்லலாம். கரையை விட்டுச் சற்றுத் தள்ளிக் கடலில் மிதக்கும் கப்பலை அடையலாம். 'பாயும் புலி' என்றும், 'ஜெய் ஹிந்த்' என்றும் சொன்னால் போதும், கப்பலில் நமக்குத் தடபுடலாய் உபசாரம் நடக்கும்!''

அவனுடைய உற்சாகம் தாராவிடமும் தொத்திக் கொண்டது. பாடவே ஆரம்பித்து விட்டாள் அவள். 'தில்லியை நோக்கிச் செல்லுவோம்' என்று ஐ. என். ஏ. வீரர்கள் உறுதி பூணுவது போல் அமைந்திருந்த அந்தப் பாடலைத் தன் இனிய குரலில் கம்பீரமாகப் பாடினாள் அவள். வடிவேலுவும் கூடச் சேர்ந்து கொண்டான். ''ஹம் டில்லி ஜாயேங்கி.........'' என்று அழுத்தம் திருத்தமாகவும் இசையுடனும் இணைந்து பாடினார்கள் இருவரும். வெங்கிட்டு பெட்ரோல் பங்கில் வண்டியை நிறுத்திய போதுதான் அவர்கள் பாட்டும் ஓய்ந்தது.

மோட்டார் காரில் உடைந்திருந்த கண்ணாடிகளுக்கு ஏதோ சாக்குப் போக்கு சொல்லி விட்டுப் பெட்ரோல் நிரப்பிக் கொண்டார்கள். அப்போது பின் சீட்டில் சாய்ந்து அமர்ந்தபடியே தாராவும் அவளுடைய ரகசியச் சங்கத்தினரும் சுற்றி வளைக்கப்படுவதற்குத் தான் எந்த விதத்திலேனும் தன்னையறியாமலே உடந்தையா யிருந்திருப்போமா என்று யோசிக்கத் தொடங்கினான் வடிவேலு. மைக்கேலைச் சந்திக்கச் சென்ற போதெல்லாம் அவன் விழிப்புடனேயே இருந்து வந்தான். வார்த்தைகளை அளந்து பேசினான். போகும்போதும் வரும் போதும் தன்னை யாரேனும் கண்காணிக்கிறார்களா என்பதையும் உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டான். ஆனால் இவ்வாறெல்லாம் தான் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது வெளியே தெரியாதவாறு இயல்பாகவும் நடந்து கொண்டான்.

முதல் நாள் வடிவேலுவைச் சந்தித்ததும் பழைய நண்பனை மீண்டும் உயிருடன் கண்டதில் ஆச்சரியமும் குதூகலமும் அடைந்தான் மைக்கேல். வீட்டுக்கு அழைத்துப் போய் ராணுவ அதிகாரியின் இல்லம் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் அலங்கரிக்கப்பட்டிருந்த விசாலமான கூடத்தில் வடிவேலுவை வரவேற்று உபசரித்தான். அவன் ஜப்பானியக் கைதிகள் முகாமிலிருந்து தப்பி ஓடிய கதையையெல்லாம் கேட்டறிந்து கொண்டான். தன்னைப் பற்றிய விவரங்களையும் வெளியிட்டான். மறுநாளைக்கும் அதன் பின்னரும் கூட வந்து போக வேண்டும் என்று வற்புறுத்தியதுடன் அவனுக்கு மீண்டும் பிரிட்டிஷ் ராணுவத்தில் நல்லதோர் உத்தியோகம் கிடைக்கத் தன்னால் இயன்றதையெல்லாம் செய்வதாக வாக்களித்தான். ஐ. என். ஏ.யையும் சுபாஷ்

பாபுவையும் பற்றி விசாரித்தான். மைக்கேலுக்கு ஏற்கனவே நன்கு தெரிந்திருக்கக் கூடிய பிரபலமான சம்பவங்களையே வர்ணித்தான் வடிவேலு. எல்லாவற்றையும் கேட்டு விட்டு, ''இந்த யுத்தத்தில் சுபாஷ் பாபு ஒருகாலும் வெற்றி பெற முடியாது'' என்று மைக்கேல் கூறிய போது வடிவேலுவுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. ஆனபோதிலும், ''எதனால் அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?'' என்று சர்வ சாதாரணமாகக் கேட்டு வைத்தான் அவன்.

''மோகன்சிங் தங்களுக்கு வேண்டாதவனாகி விட்ட போது அவனுடைய பதவியைப் பிடுங்கிக் கொண்டதுடன் ஜப்பானியர் அவனைச் சிறையிலும் தள்ளிவிடவில்லையா? ஜப்பானியரின் கைப்பாவையாக விளங்குவதை மோகன் சிங் வெறுத்தது போலவே, சுபாஷ் பாபுவும் அதனைச் சற்றும் விரும்பவில்லை. ஆகவே அவரையும் விரோதித்துக் கொள்ள ஜப்பானியனுக்கு எவ்வளவு நாள் பிடிக்கும்?''

''அப்படி ஏதும் செய்யமாட்டார்கள் என்பதே என் அபிப்பிராயம். மோகனை உள்ளே தள்ளிய போது சுபாஷ் வரப் போவதைக் கூறி வீரர்களைச் சமாதானப் படுத்தினார்கள். சுபாஷ் பாபுவிடமும் அது போல் ஏதேனும் வாலாட்டினால் ஐ. என். ஏ. வீரர்கள் பெரும் புரட்சி செய்வார்கள்!''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை! வீரர்களா அவர்கள்? உதவாக்கரைகள்!''

''நீங்கள் அளித்த பயிற்சிதானே?''

''ஒப்புக் கொள்கிறேன், வடிவேலு! தங்கத் தடியால் அடிப்பதால் கழுதை குதிரையாகிவிடுமா? ஒரு தடவை கட்சி மாறியவர்கள் மறுமுறையும் குட்டிக் கரணம் அடிக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?''

தலையாட்டினான் வடிவேலு. ''நேதாஜி அவர்களிடம் பரிபூரணமான நம்பிக்கை வைப்பதற்கில்லைதான்! நமக்குச் சாதகமான ஒரு விஷயம்.''

''அது ஒன்று மட்டுமில்லை! எல்லோருக்கும் எதிரி ஒருவனென்றால் சுபாஷுக்கு மூன்று நான்கு பகைவர்கள். பிரிட்டிஷாருடனும் ஜப்பானியருடனும் ஒரே சமயத்தில் போராடுகிறார் அவர். மாபெரும் சேனையைக் கட்டிக் காக்கப் பணம் திரட்டுவது பெரிய தொல்லை என்றால் மலாயாவிலும் பர்மாவிலும் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவுடன் வேறு அவர் சண்டையிட வேண்டியிருக்கிறது. இருபது ஜப்பானிய ரூபாய்களுக்கு ஓர் இந்திய ரூபாய் சமானமென்றால் அவருக்கு எவ்வளவு பணம் கிடைத்தாலும் பிரயோசனம் என்ன? சிப்பாய்களுக்குத் தேவையான ஆயுதங்களுக்கும் உணவுக்கும் அவர் ஜப்பானிய உதவியையே எதிர்பார்த்திருக்கிறார். இப்போது ஜப்பானியர் இருக்கும் இக்கட்டான நிலையில் அவர்கள் இவர் காலை வாரி விட்டு விடுவார்கள்.''

''இக்கட்டான நிலை ஜப்பானியருக்கா? வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று வருகிறவர்களாயிற்றே அவர்கள்'' என்று அதிசயத்துடன் கேட்டான் வடிவேலு.

''ரொம்பவும் அகலக் கால் வைத்து விட்டார்கள். முன்னுக்கும் போக முடியாமல் பின்னுக்கும் இழுத்துக்கொள்ள இயலாமல் நின்ற இடத்திலேயே சாகப் போகிறார்கள்!'' மேஜை மீதிருந்த பொம்மை உலகத்தை உருட்டி விட்டான் மைக்கேல்.

''சீனா, மலாயா, ஜாவா, சுமத்ரா, பிலிப்பைன்ஸ், கரோலின், சயாம், அந்தமான், நிக்கோபார்....'' என்று பட்டியல் படிக்கையிலே அவன் அது வரையில் தன் கரத்தில் வைத்து விளையாடிக் கொண்டிருந்த ரப்பர் நூல் ஒன்று நீண்டு கொண்டே வந்தது. ''ஹாங்காங், ஸரவா, போர்னியோ, பர்மா, இந்தியா'' என்னும்போது ரப்பர்த் துண்டு 'பட்'டென்று விட்டுப் போய் இரண்டு நூலிழைகளாக அவன் கரங்களினின்றும் தொங்கின.

அது வரை திறந்த வாய் மூடாமல் உட்கார்ந்திருந்த வடிவேலு மென்று விழுங்கி மௌனப் புன்னகை புரிந்தான். மைக்கேலோ 'இடி இடி' என்று பெரிதாகச் சிரித்தபடியே, வீடு திரும்பிய பிறகும் பேச்சு சுவாரஸ்யத்தில் தான் கழற்ற மறந்து போன தொப்பியை எடுத்து மேஜையில் அறைந்தான். வடிவேலுவைக் கட்டித் தழுவித் தட்டிக் கொடுத்து வழி அனுப்பி வைத்தான்.

அதற்குப் பிறகு வடிவேலுவிடம் அத்தனை சரளமாக நடந்து கொள்ளவில்லை மைக்கேல். திடீரென்று அவனுக்குப்பல சந்தேகங்கள் முளைக்க ஆரம்பித்து விட்டதாய்த் தோன்றியது. இன்றைக்கு ஐ. என். ஏ.வில் பெரிய பதவி வகிக்கும் கதிரேசன் அந்நாளிலேயே பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகச் சதி செய்திருக்கிறார் என்று கருத இடமிருப்பதைச் சுட்டிக் காட்டினான். ''அவருடன் அன்றைக்கே நீ அந்நியோந்ய பாவத்துடன் பழகினாய். இப்போது அவர் மகளைக் கலியாணம் செய்து கொண்டும் இருக்கிறாய். உன்னை நான் எந்தத் தைரியத்தில் நம்புவது?'' என்று மைக்கேல் கேட்ட போது ஒரு கணம் திணறித்தான் போனான் வடிவேலு. 'ஆங்கிலேய அரசாங்க ஒற்றர்கள் இத்தனை திறமையாகச் செயல்படுகிறார்களா?'

> இன்பம் மனிதன் முன் வரும்போது துன்பத்தைத் தன் முடி மீது சூடிக் கொண்டே வருகிறது. எனவே இன்பத்தை வரவேற்பவன் துன்பத்தையும் வரவேற்றேயாக வேண்டும்.
>
> —ஸ்வாமி விவேகானந்தர்

என வியந்தான். அதனை வெளிக் காண்பித்துக் கொள்ளாமல் பதிலளித்தான்.

"கதிரேசன் ஐந்தாம்படை வேலைகளில் இறங்கியிருக்கிறார் என்று ஊகித்த போதிலும் அதனை ஆதாரபூர்வமாக நிரூபிக்க என்னால் முடிந்திராது. பிரிட்டிஷ் ஆட்சியின் போதும் கதிரேசன் மிகுந்த செல்வாக்குடையவராய் விளங்கியதை நீங்கள் மறக்கக் கூடாது. மௌர்னிங்குக்ரூப் பக்கத்தில் கடற்கரை ஓரமாய் ஒரு பிசாசைப் பார்த்து விட்டு மயங்கி நான் விழுந்ததாய்ச் சொன்னால் அதிகாரிகள் சிரித்திருக்க மாட்டார்களா? கதிரேசன் அன்று வெண்மையான ரப்பர் முகமூடியையும் கையுறைகளையும் அணிந்திருந்தார் என்பதும், அவருடைய கையாள் ஒருவன் 'குளோரபாரத்'தில் தோய்த்தெடுக்கப்பட்ட பஞ்சை என் மூக்கினருகே வைத்து அழுத்தியதால்தான் நான் மயங்கி விழுந்தேன் என்பதும் சமீபத்தில்தான் எனக்குத் தெரிய வந்தன. குமாரியை நான் காதலித்து மணம் புரிந்து கொண்டது என் சொந்த விவகாரம். அதற்கும் என் ராஜாங்கவாசத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை."

"வடிவேலு! நாம் நெருங்கிய நண்பர்களாகப் பழகிய நாட்களை அதற்குள்ளாக என்னால் மறந்துவிட முடியவில்லை. ஆகவேதான் இன்னும் இரு தினங்கள் உனக்கு அவகாசம் அளிக்கிறேன். அதற்குள்ளாகத் தப்பிப் போய் விடு. தாமதித்தால் போலீஸாரிடம் உன்னை ஒப்புவிப்பதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை" என்றான் மைக்கேல். பிரமித்து நின்ற வடிவேலுவின் தோள்களில் கரங்களை அழுந்தப் பதித்து மெல்ல உலுக்கி, "நண்பர்களாகப் பிரிந்து மீண்டும் போர்முனையில் பகைவர்களாகச் சந்திப்போம்" என்றான்.

அதையெல்லாம் இப்போது எண்ணிப் பார்த்த போது தாராவையும் அவள் சங்கத்தைச் சேர்ந்தவர்களையும் காட்டிக் கொடுத்தவன் தன்னைப் பற்றிய உண்மையையும் தெரிவித்திருக்க வேண்டும்; அதனால்தான் மைக்கேலிடம் தான் எவ்வளவோ வாதாடியும் பயனில்லாது போயிற்று என்ற முடிவுக்கு வந்தான் வடிவேலு. கருங்காலியாக மாறிய அந்தப் பாதகன் யாராயிருப்பான் என்பது குறித்தும் அவன் இதற்குள்ளாக ஒருவாறு யோசித்து வைத்திருந்தான். அதனை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும் மறுநாளே கிட்டியது.

நட்ட நடு நிசி வரை காத்திருந்து வடிவேலு குறிப்பிட்ட அந்த இடத்தை மூவரும் அடைந்தார்கள்.

மணல் பரப்பில் கேட்பாரற்றுக் கிடந்த செம்படவர்களின் படகு ஒன்றை அலை கடலில் தள்ளி விட்டு ஏறிக் கொண்டார்கள்.

துடுப்பு வலித்துச் செல்கையில் திடீரென்று போலீஸாரின் மோட்டார் படகு ஒன்று நீரைக் கிழித்துக் கொண்டு வரும் ஓசை தெளிவாகக் கேட்டது. உடனே முன்னிலும் வேகமாய்ச் செயல்படுமாறு துடுப்புப் பிடித்திருந்த தன் கரங்களுக்குக் கட்டளை பிறப்பித்தான் வடிவேலு. ஆயினும் விசைப் படகின் வேகத்துடன் போட்டியிடுவது சாத்தியமா? நல்ல வேளையாகப் போலீஸாரின் ஸர்ச் லைட் ஒளி இவர்கள் பக்கமாய் வீசவில்லை. கடவுள் அருளால்தான் தங்களுடைய தோணி அவர்கள் கண்களில் படவில்லை என்று வடிவேலு மகிழ்ந்திருந்த தருணத்தில் வெங்கிட்டு டார்ச் லைட் ஒன்றினைப் பொருத்தியும் அணைத்தும் போலீஸாரின் கவனத்தைக் கவர முயலுவதை வடிவேலு கண்டான். கடுங்கோபம் பொங்க அவர் மீது பாய யத்தனித்த அதே தருணத்தில் போலீஸ் படகிலிருந்தோர் ஸர்ச் லைட்டை இவர்கள் பக்கமாய்த் திருப்பியதுடன் மிஷின் கன் ஒன்றினையும் இயக்கத் தொடங்கினார்கள். 'ஆ' வென்று அலறிய வெங்கிட்டு டார்ச் லைட்டை நழுவ விட்டு விட்டுச் சாய்ந்தார். தாராவைக் கீழே, படகின் அடிவாரத்தில் உருட்டித் தள்ளிய வடிவேலு தானும் பதுங்கிக் கொண்டான். வெங்கிட்டுவின் உடல் சமுத்திரத்தில் 'தொப்'பென்று விழுகிற சத்தம் கேட்டது. அடுத்தாற்போல் ஒரு பேரிடியோசை செவிகளைத் துளைக்கவே இருவரும் திடுக்கிட்டு எழுந்து பார்த்தார்கள்.

போலீஸாரின் மோட்டார் படகு பல துகள்களாகி மிதப்பதை, தீப் பிடித்துப் பெட்ரோல் பற்றி எரிய அந்த வெளிச்சத்தில் காண முடிந்தது. அலை கடலின் மையத்தில் நெருப்பு கொழுந்து விட்டு எரிவதை அதிசயத்துடன் நோக்கியவாறு தாராவும் வடிவேலுவும் ஸ்தம்பித்து நின்றார்கள். (தொடரும்)

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

சிறந்த அமிலநாசினியும், மலமிளக்கியும்



நம்பிக்கை

ஒவ்வொரு துறையிலும் சில தயாரிப்புகள்தான் சிறந்த குணமும், பல வருடங்களாக நம்பிக்கையானதாகவும் பெயர் பெற்று உயர்ந்த இடம் பெற்றிருக்கின்றன. இந்த நம்பிக்கையான தன்மைதான் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டும் 75 வருடங்களுக்கு மேலாக சிபார்சு செய்யப்பட்ட உலகமறிந்த தயாரிப்பும் ஆகும்.

அதிகாரம் பெற்ற தயாரிப்பாளர்கள்

டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபாக்சரிங்) பிரைவேட் லிமிடெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon